# செந்தனல்

செந்தனல்
SENTHANAL

தணல் 2 கனல் 20 2004 ஏப்ரல் 24 - மே 08 16/=



## தமிழ்த் தேசியத்தின் ஏகதலைவன் தானே என மீண்டும் நிருபித்துள்ளார் பிரபாகரன்

## ஜனாதிபதி - ஜே.வி.பி. விரிசல்





## அவுஸ்ரேலியாவில் தஞ்சம் புகுந்திருக்கும் கருணா...



செம்மையைச் செப்பிடும் செந்தனல்

சைவ நற்சிந்தனை

## தியானத்தின் வலிமை

இறைவன் ஆத்மாவாயிருக்கிறான் அவனே ஆத்மாவின் ஆத்மாக விருக் கிறான்

நம் எல்லோருக்குள்ளும் சக்தி இருக்கிறது. சாதாரணமாக சிதறி மறைந்து கிடக்கின்ற அந்த சக்தியை நாம் தியானத்தின் மூலம் ஒரு நிலைப்படுத் துகின்றோம். அந்த ஒரு நிலைப்படு த்துகின்ற முயற்சியில் தான் நாம் இறைவனைத் தேடி அவனை உணருகின்றோம். ஏதாவது ஒன்றை ஆதாரமாக வைத்தே இத்தியானம் வலிமை பெறுகிறது அந்த ஆதாரமாகிய ஒன்று இறைவனாக மட்டுமே தான் இருக்க முடியும். இந்தத் தியானம் என்ற நிலையில் நாம் மனதை ஒருநிலைப்படுத்த முற்படுகின்றோம். இப்படி மனதை ஒருநிலைப்படுத்தும்போது நமக்குள் ஒரு புதுவிதவிழிப்புணர்வு புத்துணர்சி மனதிற்குள் அமைதி, மன ஒருமைப்பாடு மனப் பக்குவம் என்பன ஏற்படுகின்றன.

நாமும் தியானம் செய்து நல்ல வலிமையினையும், சக்தியினையும் பெற வேண்டுமானால் முதலில் மனதினை தூயதாக வைத்துக் கொள்ள வேண்டும். நாம் இவ்வாறு தூய மனதுடன் இறையோடு தியானத்தில் ஈடுபடுவோமானால் நமக்குள் இருக்கின்ற அந்தச்சக்தி வாய்ந்த ஒளியினை அறிய முடியும்.

"மனிதன் ஒளியைத்தேடும்
இன்னொரு ஒளி"

கிருஸ்ண ஜெயம்




கிறிஸ்தவ நற்சிந்தனை

## நீதியின் குரல்

கிறிஸ்தவ விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும் என்பது எந்த அளவுக்கு இன்றியமையாதோ அந்த அளவுக்கு இன்றியமையாதது தான் கிறிஸ்தவ கோட்பாடுகளுக்காக உயிரைக் கூடக் கொடுக்க வேண்டும் என்பது. ஆனால் இன்று அநீதி நடக்கிறது என்று அறிந்தும் கூட கிறிஸ்தவர்களாகிய நாம் கண்டும் காணாது போல் இருக்கின்றோம். அது சரிதானா? இறைவனுக்காகவும் இறைநீதிக்காகவும் குரல் கொடுத்தவர்கள் தான் இறைவாக்கினர்கள் "நீ, இறைப்பற்று, நம்பிக்கை, மன உறுதி, பணிவு ஆகியவற்றை நாடித்தேடு" (1திமொ 6:11) இன்றைய சமுதாயத்தில் செல்வச்சிறப்பு, உலக சுகங்கள், அதிகார மோகம் என்பவற்றுக்கு அடிமைப் படுவதை விடுத்து உலகில் நீதிக்காக குரல் கொடுக்க ஏமாற்றப்பட்டவர்களுக்காக போராட குரல் கொடுத்து நல்வழிப்படுத்த முன்வருவோம்.

ஞா. மனோ
ஆசிரியர். R.C
வவுனியா.

இஸ்லாமிய நற்சிந்தனை

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள், ஒருவர் இறைவனுக்காகவே நட்புகொள்கிறார் இறைவனுக்காகவே பகைமை பாராட்டுகிறார் இறைவனுக்காகவே கொடுக்கிறார். இறைவனுக்காகவே கொடாதிருக்கின்றார் என்றால் அவர் தமது ஈமானை (நம்பிக்கையை) நிறைவு செய்தவராகிறார் அறிவிப்பாளர் (அபூமுஸா ரலி)

ஆதாரம் புகாரி

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறிய வழியில் நடந்து நமது ஈமானை நிறைவு செய்யும் பொழுது நம்முடைய வாழ்கை ஒரு அர்த்தம் நிறைந்த வாழ்வாகவும் முழமையடைந்த வாழ்வாகவும் அமையும் இவ்வாறு ஒவ்வொரு முஸ்லிம்களும் வாழுவோமானால் நாட்டில் கொடுமைகள், சண்டைகள் கொலைகள் என்பவற்றைத் தவிர்த்து சமாதானத்தை நிலைக்கச் செய்யலாம்.

மௌலவி
H.M.ஷுமைன்

## செந்தணலே!

வசதி குறைந்த பிரதேசமான வன்னிப் பிரதேசத்தில் செந்தணல் கிடைப்பது மிகவும் மகிழ்ச்சி, மிகவும் தரமாக இருக்கின்றது. ஒரு முறைக்கு பலமுறை வாசிக்கத் தூண்டுகின்ற கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் யாவும் யதார்த்தமாக இருக்கின்றது.

சாளினி
வட்டக்கச்சி

## இதய ஒலி

அன்புள்ள தமிழ் உறவு
எஸ்.பி.செந்தில்முருகன்
வணக்கம்!

என்னை உங்களுக்குத் தெரியாதிருப்பினும் 1993 முதலே வீரகேசரி பத்திரிகையூடாக உங்களை அறிந்திருக்கிறேன். அப்போது எனக்கு அகவை பதினொன்று. இப்போது உங்கள் இதய உணர்வுகளை புரிந்து கொண்டவன் என்ற வகையில் பிறந்து சில காலம் என்றாலும் பலரதும் நெஞ்சில் கொஞ்சியுலாவும் செந்தணல் ஊடாக சந்திக்கிறேன். 'ஒரு மழை நாள்' தலைப்புடன் உலா வந்து சித்திரத்திற்கான சிறுகதை படித்தேன். அதை எழுதியது யாரென்பதை உடனும் அறிந்தேன். கண்ணிரண்டும் ஆனந்த நீரை அள்ளிச் சொரிந்தது.

எங்களை விட்டு தூரத்தே வாழ்ந்தாலும் ஈழமண் இன்புற நாங்கள் படும் வேதனைகளை புரிந்து கொண்ட எழுத்தாளன் நீங்கள் என்ற வகையிலும் உங்களை மறந்திட இயலுமா. பாலியல் உணர்வுகளைத் தூண்டி மனிதரை பாதாளத்துள் தள்ளிவிடும் மிருக உணர்வுடன் இன்று சிலர் எழுத்தாளர்கள் எனும் பெயருடன் உலாவிவரும் போது இப்படியானோர் உதித்தது தமிழுக்கு கிடைத்த தவப்பயனே.

இன்று உலகில் எங்குமே இல்லாதவாறு தூயதமிழ் மொழியை தேடிக்கண் டுபிடிப்பதில் செந்தமிழின் சிறப்புக்களை மீள் உருப்பெற வைப்பதற்கும் தமிழரைச் செம்மையால் நடைமுறைப்படுத்துவதற்கும் தலைவன் என்ற சொல்லுக்கு ஒத்த கருத்தாக விளங்கும் தேசத்தலைவன் பிரபாகரன் அவர்கள் பாடுபடுவதை நிச்சயம் நீங்கள் புரிந்திருப்பீர்கள்.

பழைமைவாதப் போக்குகளை தகர்த்தெறிந்து மூடநம்பிக்கைகளை தீ மூட்டி எரித்து புதிய சிந்தனைத் தளத்துள் எம்மை நாம் கொண்டு செல்ல வேண்டிய தேவை தமிழருக்கு ஏற்பட்டுள்ளது. கலை என்ற பெயரில் தமிழ்ப்பண்பாட்டை கொலை செய்யும் சிலரை இனங்கண்டு அப்புறப்படுத்துவதன் மூலமே செந்தமிழ் சிரிக்கும். பாத்தீனியம் போல படர்ந்து எங்கள் பண்பாட்டை இல்லாமற் செய்ய எத்தனிக்கும் தமிழ் இதயமற்றவர்க்கு எச்சரிக்கை ஒலிகளால் நீங்கள் வாழ வேண்டும்.

அதற்கு சோழப்புதல்வன் பிரபா வழி நடைபோடும் வீரப்புதல்வர்கள் துணை நிற்பர்.

அன்புடன்
யோ. புரட்சி

# எரிமலை பலவிதம்

லஜப்ரதா

பூமிக்குள்ளே நடைபெறும் பிரச்சனைகள் மிகவும் சிக்கலானது. அரசியல் விவகாரங்களைப் போல. பூமிக்குள்ளே வேலையில்லாமல் வெட்டியாகக் கிடக்கும் சில வெப்ப வாயுக்கள் வெளியே போகத் திட்டம் தீட்டி ஒன்று கூடி சாதுவாகக் கிடக்கும் பாறைகளை உருக்க ஆரம்பிக்கின்றன. மகா அழுத்தத்தோடும் கடுமையான உஷ்ணத்தோடும் கொதிக்கக் கொதிக்க ஒரு பாறைக் குழம்பு (மக்மா) தயாராகி தக்க சமயத்தில் வெளியே பாயக் காத்திருக்கிறது. "இப்பொழுது பூமியின் ஓட்டை உடைத்துக் கொண்டு வெளியே ஓடலாம்" என்ற நம்பிக்கை மக்மாவிற்கு தோன்றியவுடன் ஏனைய வாயுக்களின் அணைவுடன் உற்சாகமாகப் பொங்கி "பாங்" என்ற சத்தத்துடன் வெடிக்கின்றது. பின்பு அந்த அக்னிக் குழம்பு மலைச்சரிவுகளில் எல்லாவற்றையும் எரித்துக் கொண்டு லாவா என்ற பெயரில் மெல்லமெல்லப் படிய ஆரம்பிக்கும். இதுவே ஒரு எரிமலைப் பிறப்பின் ரகசியம்.

சில எரிமலைகள் பிறப்பதில் கூட ரெக்காட் எல்லாம் வைத்திருக் கின்றனவாம். இற்றைக்கு நூறு வருடங்களிற்கு முன் இந்தோனேஷியாவில் கிராகடா தீவு எரிமலை வழக்கத்தை விட சற்று மிகையான சத்தத்துடன் வெடித்துள்ளது. இந்தச்சத்தம் தீவிலிருந்து 3,540 Km தள்ளியிருக்கின்ற அவுஸ்திரேலியாவரை எட்டியதாம். இது போக மூன்று நாட்களிற்குச் சுற்றுப்புறம் முழுக்க சாம்பல் மேகத்தால் மூடப்பட்டு காணப்பட்டதாம். இது 80km உயரத்திற்கு வெடித்ததாகத் தகவல். இதில் நாற்பதாயிரம் பேர் எரிந்து போனார்கள்.

இந்த எரிமலை மூன்று வகை



1. சாதா எரிமலை. இது எப்போதாவது புகைந்து கொஞ்சமாக நெருப்பை உமிழ்ந்து விட்டு பொங்கி விடுவதோடு தன் வேலையை நிறுத்திக் கொள்ளும்.



2. ரோஷஎரிமலை. இந்த எரிமலைகள் தான் மிகவும் பயங்கரமானவை. இவை என்றுமே துடிப்பாகவும், அனல் பறக்கும் வண்ணமும் காணப்படுவது இவை எப்பொழுதும் புகைந்து கொண்டே இருக்கும்.






3. செத்த எரிமலை இது பெயரிற்கேற்றாற் போல ஆடி அடங்கிய கேஸ் இந்த எரிமலைகள் வெடித்த பிறகும் தூங்கிக் கொண்டேயிருக்கும்.

இந்த எரிமலைகள் எவ்வளவு தொந்தரவு தந்தாலும் "லாவா" என்ற படிவங்கள் நீண்ட நெடுநாளைக்குப் பிறகு உரமாகப் பயன்படுவது ஒரு நன்மையாகும்.





# அம்பாறை மாவட்டம் வழமைக்குத் திரும்பியுள்ளது

வி.பி. சிவப்பிரகாசம்

நீண்ட இடைவெளிக்கு பின்பு அம்பாறை மாவட்டம் அன்று 19ஆம். திகதி திங்கள் கிழமை சகல நடவடிக்கைகளும் வழமைக்குத் திரும்பியதுடன் வீதிகளில் மக்களில் நடமாட்டங்களும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

13வது பாராளுமன்றத் தேர்தலில் இந்த மாவட்டத்திலுள்ள திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஏழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக இரு பெண்கள் உட்பட 410பேர் தேர்தலில் குதித்தார்கள். தேர்தல் திருவிழாவின் போது ஒருவர் மரணமானர் 15 பேர்வரை காயங்களுடன் இன்றுவரை சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இந்த தேர்தல் திருவிழாவுக்கு மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பில் பிரபா. கருணா என இரு பிரிவுகளாகி செயற்பட்டமையினால் மக்களிற்கு பெரும் பீதி ஏற்பட்டதுடன் யாழ் பகுதியைச் சேர்ந்த மக்கள் இங்கிருந்து வெளியேறியது ஒரு சோகமான காட்சியாக தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டது. சித்திரை திருவிழாவுக்கு முன்பு பிரபா குழுக்கள் எடுத்த துரிதமான நடவடிக்கையினால் மிகவும் அமைதியாக எடுத்துக்கொண்ட நடடிக்கையினால் கருணா தலைமறைவாகியதுடன் பிரபாவின் நிர்வாகம் செயல்படத் தொடங்கியதினால் சித்திரைத்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த திருவிழாவுக்கு மத்தியில் தேர்தலில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்டத்தில் பல இடங்களில் குதூகலமான வரவேற்புகள் அளிக்கபட்டது. இந்த வரவேற்பு வைபவங்களில் பல இலட்சம் ரூபா பெறுமதியான பட்டாசுகள் கொழுத்தப்பட்டது. இந்தக் தொகையை கணக்கிடும் பட்டசத்தில் குறைந்தது மூன்று வறிய குடும்பங்களுக்கான வீடு ஒன்றைக் கட்டி 13வது தேர்தல் ஞாபகார்த்தமென்று அன்பளிப்புச் செய்திருக்க முடியுமென்று புத்திஜீவிகள் பலர் தெரிவித்தார்கள்.

இந்த மாவட்டத்தில் தேர்தல் சித்திரை புத்தாண்டு ஆகிய திருவிழாக்காலத்தில் குடிநீருக்கு பதிலாக மதுபானம் சிறுவர், பெரியவர், ஆண், பெண் என்ற வித்தியாசமில்லாது பாவிக்கப்ட்டமையால் இந்தக் காலத்தில் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் மதுபான வகைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக மதுபான விற்பனை நிலைய முகவர்கள் தெரிவிக்கிறார்கள். இதில் பெரும்பகுதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வாங்கிக் கொடுத்துள்ளமை இங்கு குறிப்பிடதக்கது.

தேர்தல் திருவிழா, தமிழீழ விடுதலைப் புலிகளின் பிளவுகள், சித்திரைப்புத்தாண்டு போன்ற விழாக்கள் எல்லாம் முடிவடைந்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் மாவட்டத்தில் தங்கள் கடமைகளை ஆரம்பித்துள்ளார்கள். மாவட்டத்துக்கான ஏழு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளதோடு அதற்கு அன்பளிப்பாக மூன்று உறுப்பினர்களுமாக பத்துப்பேர் மக்களுக்கு சேவை செய்வதற்கு முன்வந்துள்ளார்கள்.

4422 சதுரகிலோமீற்றர் பரப்புள்ள இந்த மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 589296, மொத்த குடும்பங்கள் 94700, 19 பிரதேச செயலாளர்கள் பிரிவுகள் பொத்துவில். கல்முனை. சம்மாந்துறை, அம்பாறை என்று நான்கு தேர்தல் தொகுதிகள் உள்ளது. 379044 வாக்காளர்களுக்காக ஏழு உறுப்பினர்களும். அன்பளிப்பாக மூன்று உறுப்பினர்களும் கிடைத்துள்ளார்கள். இவர்களில் இருவர் அமைச்சர்கள். இருவர் பிரதி அமைச்சர்கள் அதனால் அம்பாறை மாவட்டம் துரிதமாக எதிர்ாலத்தில் அபிவிருத்தி அடையலாமென மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

## ஹக்கீம் பற்றிய அதிர்ச்சித் தகவல்–
## ஜனாதிபதி தெரிவித்ததாக கூறுகிறார் அன்வர் இஸ்மாயில்

(அலுவலக நிருபர்)

ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பற்றி ஜனாதிபதி ஒரு அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரதியமைச்சர் எம். ஐ. அன்வர் இஸ்மாயில் செய்தியாளர்களுக்களித்த விசேட பேட்டியில் தெரிவித்தார்.

அன்வர் இஸ்மாயில் மேலும் தெரிவித்ததாவது ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவை நாம் சந்தித்தபோது பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் சகோதரர் ரவூப் ஹக்கிம் அமைச்சராக இருந்தபோது ஒருநாள் கூடத் தன்னுடன் அவருடைய சமூக சேவை குறித்து உரையாடவில்லை.

தனது தனிப்பட்ட தேவைகள் பற்றி மட்டுமே அவர் உரையாடினார் என்று ஜனாதிபதி தனது பிள்ளைகளின் மேல் சத்தியம் செய்து கூறினார். அதைக் கேட்ட எமக்கு அதிர்ச்சியும் ஆச்சரியமும் ஏற்பட்டது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் கிழக்கு அபிவிருத்தி அமைச்சுக்கு நிதி ஒடுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. அதனைக் கேட்டுப் பெறும் நிலையில் முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கிம் இருக்கவில்லை. இவரின் செயற்பாடுகள் காரணமாக கிழக்குப் பிரதேச அபிவிருத்தி பல ஆண்டுகளுக்கு பின் தள்ளப்பட்டுவிட்டது. இவ்வாறு பிரதி அமைச்சர் அன்வர் ஸ்மாயில் தெரிவித்தார்.

## வதிவிட பயிற்சிப் பட்டறை

(ச. மயூரன்)

இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதி உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆதரவில் வவுனியா வடக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் 35 ஆசிரியர்களுக்கான முதல் கட்ட வதிவிடப் பயிற்சி நெறி 16.04.2004 அன்று காலை 9.30 அளவில் கனகராயம் குளம் பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகியது.

வவுனியா வடக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. விநாயகமூர்த்தி அவர்கள் தலைமை தாங்கினார். தொடக்க நிகழ்விற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்ட பணிப்பாளர் லோரனிஸ் திலகர். இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதிய உளவளத்திட்ட நிபுணர் செல்வி றமா ஆவணப்படுத்தினார் சர்மா. தெற்கு வலயப் பணிப்பாளர் S. கணேசபாதம், வலய இணைப்பாளர் அருள்வேல் நாயகி, வடக்கு வலய இணைப்பாளர் மெற்றில்டா, கிராம சேவகர், தணிகாசலம், பெற்றோர் சங்கப் பிரதிநிதி சாந்தினி, முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இப்பயிற்சிப் பட்டறை மூலம் தொடர்ந்து ஆறுமாதகாலத்திற்கு ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்களுக்கு ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

## பிள்ளைகளின் பிரச்சனைகளை இனங்கண்ட பின்னரே திட்டத்தினை செயற்படுத்துகின்றோம்

ச. மயூரன்,

வவுனியா மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிறுவர்களைப் பற்றிய ஆய்வினை நடாத்தியிருந்தோம். வவுனியா மாவட்டத்திலுள்ள சிறுவர்களின் நிலை எப்படியுள்ளது என்பதை ஆழமாக விளக்கிக் கொள்ளக் கூடியதாக விருந்தது என இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவன உளவளத்திட்ட நிபுணர் றமா அவர்கள் இலங்கையில் சிறுவர் பாதுகாப்பு நிலைய நிதி உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆதரவில் வவுனியா வடக்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தால் நடாத்திய வதிவிட பயிற்சி நெறியை ஆரம்பிக்கும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் நாங்கள் 3 கட்டங்களாக ஆய்வுகளை மேற்கொண்டோம்.

1. சிறுவர்களுடனும் பிள்ளைகளுடன் வேலை செய்யும் அரசு, அரசு சார்பற்ற உயர் அதிகாரிகளுடன் சேர்ந்து ஆய்வு செய்தோம்.
2. பிள்ளைகளுக்கு பொறுப்பான ஆசிரியர்களை, பெற்றோர்களை ஆய்வு செய்தோம்.
3. பிள்ளைகள் தங்கள் தனிப்பட்ட பிரச்சனைகள் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப்பற்றி ஆய்வினை மேற்கொண்டோம்.

இவற்றில் பிள்ளைகள் தங்களது பிரச்சனைகளை எப்படி பார்க்கின்றார்கள் என்ற பகுதி மிக சுவாரசியமாக இருந்தது. ஏனெனில் பிள்ளைகள் தங்கள் பிரச்சனைகளைப் பார்க்கின்ற விதம் வியக்கத்தக்கதாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. இதனைச் கருப்பொருளாக வைத்து கொண்டு சிறுவர்கள் பிரச்சனைகளை முழுமையாக இனங்காணக் கூடியதாக இருந்தது.

சிறுவர்களுடன் பணிபுரியும் அரச, அரச சார்பற்ற நிறுவன ஊழியர்களுக்கு அவர்கள் எவ்வாறு பிள்ளைகளுடன் தொடர்பு வைப்பது போன்ற பயிற்ச்சிகளை வழங்கினோம். இவர்கள் மூலமாகவே சில திட்டங்கள் இனங்காணப்பட்டது. அதன் மூலமே நாங்கள் வவுனியா வடக்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கு முன்வந்தோம். பிள்ளைகளின் வளர்ச்சி விருத்தி சென்று நோக்கும்போது பெற்றார்கள். ஆசிரியர்கள் கடமைகள் பாரிய தொன்றாகக் கருதப்படுகிறது.

அந்த வகையில் திட்டத்தில் ஆசிரியர்களுக்கான, பெற்றோர்களுக்காக பயிற்சிகள் இருக்கின்றது. அதனூடாக பிரதேசத்திலுள்ள பிரச்சனைகளை நேரடியாகச் சென்றடையக்கூடிய விதத்தில் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் எப்படி அணுகி அவர்களை சிறந்த குழந்தைகளாக வளர்த்தெடுக்க வேண்டும்.

பிள்ளைகள் மகிழ்ச்சிகரமான ஒரு சூழலில் எப்படி கற்றல் செயற்பாட்டால் ஈடுபடலாம், இதற்காக விளையாட்டு முற்றம். விளையாட்டு உபகரணங்களின் தேவைகளை இனங் கண்டு வழங்குவதற்கும் இத்திட்டத்தில் உள்வாங்கியுள்ளோம் என கூறினார்.



வவுனியா தெற்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் செட்டிக்குள பிரதேச முன்பள்ளிகளுக்கான நடப்பாண்டு பிரதேச கட்டமைப்பில் தெரிவு செய்யப்பட்டோரை படத்தில் காணலாம்.

(படம், தகவல்:- மயூரவதனன்)

## எதிர்வரும் தேர்தல்களில் பிக்குமாரை நிறுத்துவதில்லை

(அலுவலக நிருபர்)

இனிவரும் எந்தவொரு பொதுத் தேர்தலிலும் பிக்குமாரை நிறுத்தப் போவதில்லை என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. கட்சியின் சார்பில் சாதாரண பிரஜைகளை பொதுத்தேர்தலில் நிறுத்துவது உசிதமானது என்றும் இதுகுறித்து ஹெல உறுமயவின் உயர் மட்டக் குழுவினர் ஆராய்ந்து வருவதாகவும் கட்சியின் நிறைவேற்றுக் குழு தலைவர் எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற பிரதிநிதித்துவம் அதிகாரம் என்பவற்றில் பிக்குமாருக்கு நாட்டம் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மறுவாழ்வு திட்டங்கள் சீரின்மையால் சிறுவர்கள் புலிகளுடன் மீண்டும் இணைகின்றனர்

-திலக் கூறுகிறார்

(திருமலை நிருபர்)

எமது இயக்கத்தில் இணைய முன்வரும் 18 வயதிற்கு குறைந்த சிறார்களை நாம் அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கின்றோம். ஆனால் அவர்களிற்குரிய மறுவாழ்வுத் திட்டங்கள் சீராக செயற்படுத்தப்படாததால் மீண்டும் அந்தச் சிறார்கள் எம்மிடம் வரும் நிலை ஏற்படுகிறது. இப்படிக் கூறியுள்ளார். திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக்.

சம்பூரில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் வைத்து 18 வயதுக்கு குறைந்த சிறுவர்களை "யுனிசெப்" பிரதிநிதியான செல்வி கப்றியல்லாவிடம் கடந்த சில தினங்களுக்கு முன் திலக் கையளித்தார்.

கையளிப்பு முடிவடைந்த பின் நடந்த கூட்டத்திலேயே இதனை அவர் தெரிவித்தார். விடுதலைப் புலிகள் வசம் உள்ள ஏனைய வயது குறைந்த சிறுவர்களை விடுதலைப்புலிகள் விடுவிக்க முன்வர வேண்டும். என்று "யுனிசெப்" அதிகாரி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கு பதிலளித்தார் திலக். ஏற்கனவே 35 சிறார்களை ஒப்படைத்துள்ளோம். இன்று 40 சிறார்களைக் கையளிக்கிறோம். ஆனால் விடுவிக்கப்படும் சிறார்களின் மறுவாழ்வு விடயத்தில் "யுனிசெப்" பாராமுகமாய் இருக்கிறது.

சிறார்களை பெற்றோர்களிடம் ஒப்படைப்பதுடன் தமது பணியை "யுனிசெப்" முடித்துக்கொள்கிறது.

அந்தச் சிறுவர்களின் எதிர்கால நலனுக்காக எதையும் செய்யவில்லை. இதனால் மீண்டும் அவர்கள் எம்மில் வரக்கூடிய சாத்தியமே நிலவுகின்றது. இதனை உணர்ந்து யுனிசெப் செயற்பட வேண்டும் என்றார்.

இந் நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திருமலைப் பணிப்பாளர் மாதவராசா மற்றும் அகதிகளுக்கான ஐ. நா தூதரகம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

செந்தணல்
SENTHANAL
"செம்மையைச் செப்புவோம்"
சூரியன் வெளியீட்டகம்
61, கற்குழி,
வவுனியா
தொலைபேசி : 0114-715168
தொலை நகல் : 0114-715168

அன்புடன்

வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம் தேர்தல் முடிவுகள் மூலம் மக்களுக்கு ஒரு நல்வாழ்க்கை அமையும், அமைதியான நாட்டினைப் பெறலாம் என்றெல்லாம் எதிர்பார்த்த மக்களுக்கு இந்த அரசமைக்கும் விடயம் தொடர்பான இழுபறி நிலை மிகவும் சோர்வான உணர்வினையே கொடுக்கின்றது.

தொடர்ந்து ஜே.வி.பி யினர்க்கும் ஜனாதிபதிக்கும் இடையே ஏற்பட்டிருக்கின்ற இழுபறிநிலை மகாவலி அதிகாரசபையினையும் தமக்கு வழங்கும் படியான கோரிக்கை ஜனாதிபதி மறுப்பு இவை எல்லாம் தொடர்ந்து கொண்டிருக்க பாராளுமன்றம் 22ம் திகதி கூடுகிறது.
தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் புலிகள் தான் என்பதை தேர்தல் மூலம் உலகுக்கு உணர்த்திய தமிழ் மக்களுக்கும் தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் நன்றியும் பாராட்டும் தெரிவித்திருக்கிறார்.

17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்களின் தியாகத்தாலும் அர்ப்பணிப்பாலுமே இப் பெரு வெற்றி பெறப்பட்டுள்ளதாகவும் தேசியத்தலைவர் பிரபாகரன் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும் அவர் எம்முள் இருந்த சிறுசிறு முரண்பாடுகள் எல்லாம் மறந்து நாம் எல்லோரும் ஒன்றுபட்டு ஒரு பெரும் சக்தியாக நிற்பதையிட்டு நான் பெருமகிழ்சியடைகிறேன்.

நீண்ட காலமாகவே நாம் எமது ஒற்றுமைக்குறைபாட்டாலேயே எதிரிக்கு பலசந்தர்ப்பங்களை வழங்கியுள்ளோம். அண்மையில் கூட எமது போராட்டத்தில் இருள் சூழ்ந்தது ஆனால் அதே வேகத்தில் அதுகலைந்ததையும் நீங்கள் அறிவீர்கள் என்றும் கடந்த 20ம் திகதி தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தபோதே தேசியத் தலைவர் வே.பிரபாகரன் உரைநிகழ்த்தியுள்ளார்.

அன்புடன்

# சுயநல அரசியலைத் தொடரத்துடிக்கும் ஜனாதிபதியும் இராணுவ அரசியல் பலத்துடன் மிளிரும் விடுதலைப் புலிகளும்


அவதானி

ஐக்கிய தேசிய முன்னணியும் சரி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் சரி தமிழ் மக்களுடைய இனப்பிரச்சனைக்குரிய தீர்வை வழங்க மாட்டார்கள் என்பது விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு. எனினும் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்பதை நிலை நிறுத்தி, இலங்கை அரசுக்கும் சர்வ தேசத்திற்கும் வெளிப்படுத்துவதற்கான ஓர் அரைகல்லாகவே நடந்து முடிந்த தேர்தலை விடுதலைப் புலிகள் பயன்படுத்தினார்கள். இதில் அவர்கள் எதிர்பாராத வெற்றி கிட்டியுள்ளது. இருபத்திரெண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இப்போது நாடாளுமன்றத்திற்குச் சென்றுள்ளார்கள். இவர்கள் அங்கு பெரிதாக எதனையும் சாதித்துவிட முடியாது என்பது யாவரும் அறிந்ததே.



தமிழ் எம்.பி.க்களுடன் தலைவர் பிரபாகரன் அவர்கள் உரையாடுவதை படத்தில் காணலாம்

இருப்பினும் இந்தத் தேர்தல் வெற்றியின் மூலம் அரசாங்கத்துடன் சம நிலையில் இராணுவ பலத்துடன் இருக்கும் விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியாகவும் பலமுள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த நிரூபணத்தின் அடிப்படையில்.



இராணுவ அரசியல் பலமுடைய விடுதலைப் புலிகள் புதிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குத் தயாராக இருக்கின்றார்கள். கடந்த நவம்பர் மாதம் விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான ஆலோசனைகளை ஓர் அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பது அவர்களின் நிலைப்பாடு.

எனினும் அரசியல் ஸ்திரமற்ற நிலையில் புதிய அரச பொறுப்பை ஏற்றுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒருங்கிணைந்த அரசியல் மற்றும் இராணுவ பலத்துடன் கூடிய விடுதலைப் புலிகளின் தலைமையிலான இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சனைக்கு உரிய தீர்வைக் கொடுக்க முடியுமா? பூனைக்கு மணி கட்டுவது யார் என்பது போன்ற சிக்கலான இந்தப் பொறுப்பை சர்வதேசத்தின் தலையில் கட்டுவதற்கான ஏற்பாடுகளில் தமிழர் தரப்பு ஈடுபட்டு வருவதாக தெரிகின்றது.

இதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சிச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 22 பேருடனும் விடுதலைப் புலிகள் செவ்வாய்க்கிழமை முக்கிய சந்திப்பை நடத்தியுள்ளார்கள். தமிழ்த்தேசிய கூட்டமைப்பினருடைய நடிவடிக்கைகள் நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து. இந்தச் சந்திப்பின் போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்த கலந்துரையாடலின் அடிப்படையிலேயே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் எதிர்கால அரசியல்

ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நடவடிக்கைகள் எப்படி அமையப்போகின்றது என்பது குறித்து தெளிவான சமிக்ஞைகள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிகின்றது. அதாவது இனப்பிரச்சனை குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது அரசியல் நடவடிக்கை நிகழ்ச்சி நிரலில் எதனையும் வரையறைவாகக் குறிப்பிடவில்லை. தேசிய பிரச்சனையாகிய இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டிய தேவை குறித்து அதி விஷேட கவனம் செலுத்தவில்லை என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.


சாதாரண ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகக் கூட தெரிவாகாமல், நாட்டின் தலைமைப்பதவியைத் தட்டிக்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரத்துங்க இரண்டு பருவகாலம் ஜனாதிபதி பதவியாகக் கடமையாற்றியுள்ளார். இரண்டாவது பருவ காலம் முடிவடைவதற்கு இன்னும் கால அவகாசம் இருக்கின்ற போதிலும், அரசியல் அதிகாரமற்ற வெற்று மனுசியாக இருக்க அவருடைய மனம் இன்னும் இடம்கொடுக்கவில்லை. ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்துக்கட்டி. கூடிய அதிகாரங்களைக் கொண்ட பிரதமர் ஆட்சி முறையை நாட்டில் அறிமுகப்படுத்துவதிலேயே அவர் அதிக கவனம் செலுத்தி வருகின்றார். அவருடைய இந்தப் போக்கு நாட்டிற்கு எந்த வகையிலும் நன்மை பயக்கப்போவதில்லை எனபது மட்டும் உறுதி.

# அன்னை பூபதியின் நிகழ்வுகள்

தியாக தீபம் அன்னை பூபதியின் 16வது நினைவு தினம் வடக்குக் கிழக்கு தமிழ் பிரதேசங்கள் எங்கும் அடையாள உண்ணாவிரதங்களுடனும் எழுச்சி நிகழ்வுகளுடனும் உணர்வு பூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது.

மூதூர் கிழக்கு மற்றும் ஈச்சிலம்பற்றை சேனையூர் போன்ற இடங்களில் அடையாள உண்ணா விரதங்கள் நடைபெற்றன. பெரும் திரளான மக்கள் உண்ணாவிரதங்களிலும் எழுச்சி நிகழ்விலும் கலந்து கொண்டனர்.

இலக்கந்தையில் அமைந்துள்ள அன்னை பூபதியின் நிலைவாலயத்தில் பெருந்தரளான மக்கள் சென்று அஞ்சலி செலுத்தினர்.



மேலும் முக்கிய சந்திகளிலும் அண்மையில் திருவுருவப் படம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.



யாழ்ப்பாணத்தில் கேணல் கிட்டு பூங்கா விலும் வடமாராட்சியில் கரணவாய் மூத்த வினாயகர் ஆலய முன்றலிலும் தீவகத்தில் துறையூர் ஜயனார் சனசமூக நிலையம் ஊர்காவற்றுரை திறந்த வெளியரங்கு ஆசிய இடங்களிலும் தென் மாராட்சியில் சங்கந்தானை முருகமூர்த்தி ஆலய முன்றலிலும் உண்ணாவிரத நிகழ்வுகள் இடம் பெற்றன.

அத்துடன் எழுச்சி நிகழ்வுகளும் இடம் பெற்றன. இதில் ஆண்கள் பெண்கள வயோதிபர்கள் குழந்தைகள் பாடசாலை மாணவர்கள் வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அலுவலக நிருபர்

# அவுஸ்திரேலியாவில் தஞ்சமடைந்துள்ள கருணா

இராணுவத்தின் உதவியுடன் கருணா அவுஸ்ரேலியாவிற்குத் தப்பிச் சென்றுள்ளதாக தகவல்கள் தெரிய வந்துள்ளன. அவுஸ்திரேலியாவில் இயங்கும் இன்பத்தமிழ் ஒலி வானொலி இத்தகவலை வெளியிட்டுள்ளது.

சட்ட விரோதமாக மலேசியா சென்ற கருணாவும் மூன்று சகாக்களும் அவுஸ்திரேலியாவின் பிறிஸ்பேன் நகரத்தில் வந்திறங்கியதாக தகவல்கள் கூறப்படுகிறது.

மலேசியாவில் வாழ்கின்ற கிழக்கு மாகாண முன்னால் அரசியல்வாதி ஒருவரே பயண ஏற்பாடுகளை செய்து கொடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அவுஸ்திரேலியா வந்து சேர்ந்த கருணா அவுஸ்திரேலியா குடிவரவு திணைக்களத்திற்குச் சென்று வதிவிட அனுமதி கோரி விண்ணப்பித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அலுவலக நிருபர்




# பிஜி நாட்டின் தேசிய தந்தையின் மரணம்

பிஜி நாட்டின் ஸ்தாபகத் தந்தை என்று வர்ணிக்கப்படும் ரட்டுசேர் கமிஸெஸே மாரா தமது 83வது வயதில் 18ம் திகதி காலமாகியுள்ளார்.

பிரிட்டனின் காலணித்துவ நாடான பிஜி 1970 ல் சுதந்திரம் பெறுவதற்கு முன்நின்று உழைத்த கமிஜெஸே மாரா தென்பசுபிக் நாடுகளிடையே நீண்டகாலம் பிரதமராகவும் பிராந்திய அரசியலில் முக்கியத்துவம் பெற்றவராகவும் விளங்கினார்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் பாரிச வாதத்தினால் பாதிக்கப்பட்டு பின்னர் நியூஸிலாந்தில் சிகிச்சை பெற்றுவந்த அவர், பிஜியின் தலைநகர் சவாவில் வைத்தியசாலையொன்றில் மரணமானார்.

தமது பிராந்தியத்தில் சுமார் மூன்று தசாப்தகாலம் மிகவும் மதிக்கப்பட்ட ஒரு தலைவராக விளங்கியவர் அவர்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மருத்தவப் பட்டதாரியான கமிஸெஸே மாரா 1970ல் சுதந்திர பிஜியின் முதல் பிரதமராகப் பதவியேற்றார். தொடர்ந்து இருபது ஆண்டுகள் அப்பதவியில் இருந்த அவர், பின்னர் அந்நாட்டின் ஜனாதிபதியானார்.

எனினும் 2000ம் ஆண்டில் அங்கு இடம் பெற்ற புரட்சிச்சதி ஒன்றை அடுத்து அவர் பதவியிழந்தார். தமது பதவியைத் தக்க வைப்பதற்காக சாதாரண பிஜிமக்களைப் புறக்கணித்து விட்டு இந்திய வம்சாவழி வர்த்தகர்களுடன், பழங்குடி இனத்தலைவர்




களுடனும் சேர்ந்து அவர் இயங்கினார் என்று அப்போது அவர் மீதுகுற்றம் சுமத்தப்பட்டது.

# அப்துல் அஸீஸின் படுகொலைக்கு பழிக்குப்பழி

## – ஹமாஸ் இயக்கம் சூளுரை

ஹமாஸ் இயக்கத்தின் தலைவர் அப்துல் அஸீஸ் அல்ரன்திஸி இஸ்ரேலியத் தாக்குதலில் 18ம் திகதி கொல்லப்பட்டார். இவர் காசாவில் காரில் சென்று கொண்டிருந்த போது இஸ்ரேலிய ஹெலிகொப்டர் நடத்திய ஏவுகளைத் தாக்குதலில் ரன்திஸியும் அவரது மகனும் இரண்டு மெய்பாதுகாவலரும் கொல்லப்பட்டனர்.



சம்பவத்தில் காயமடைந்த ரன்திஸியை வைத்தியச் சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது அவர் அங்கு மரணமடைந்துள்ளார்.

ஹமாஸ் இயக்கத்தின் ஆன்மீகத் தலைவர் அஹமட்யாஸீனின் படு கொலைக்குப் பின்னர் நியமிக்கப்பட்ட தலைவரே இவராவார்.

ஆன்மீகத் தலைவர் யாஸீன் பள்ளி வாசலுக்குச் சென்று திரும்பும் போது இஸ்ரேல் நடத்திய தாக்குதலிலேயே கடந்த மாதம் கொல்லப்பட்டார். அந்தப் படுகொலை நடந்து குறுகியகால இடைவெளிக்குள் ரன்திஸி கொல்லப்பட்டுள்ளார்.

தமது இயக்கத் தலைவர் ரன்திஸி கொல்லப்பட்டமைக்கு பழிக்குப் பழி வாங்கப்படும் என்று ஹமாஸ் இயக்கம் சூளுரைத்திருக்கின்ற அதேவேளை, இஸ்ரேல். அமெரிக்கா மற்றும் சில அரபு நாடுகளின் மீது திறந்த யுத்தத்தில் ஈடுபடுமாறு தீவிர கடும் போக்குடைய பலஸ்தீன பொதுக்கட்டளை விடுதலை இயக்கம் பாலஸ்தீன மக்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறது.

அமெரிக்காவையும் இஸ்ரேலையும் தீமையின் அச்சு நாடுகள் என்றும் அரபுலக நாடுகளினதும், முஸ்லீம் நாடுகளின் நலனுக்கெதிரான விரோத மனப்பான்மை கொண்ட நாடுகள் எனவும் விபரித்திருக்கின்ற பாலஸ்தீன பொதுக்கட்டளை விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகம் அகமட் ஜெப்ரிஸ் பாலஸ்தீனர்கள் அனைவரையும் ஒன்று திரண்டு இஸ்ரேலுக்கு துணை நிற்கும் அமெரிக்கா மற்றும் சில அரபு நாடுகளுக்கெதிராக திறந்த யுத்தத்தில் ஈடுபடுமாறு அழைப்பு விடுத்திருக்கின்றார்.

பாலஸ்தீன விடுதலைப் போராளிகளையும் அப்பாவி மக்களையும் கொன்றெரித்து வரும் இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோனுக்கு அமெரிக்கா ஜனாதிபதி புஷ் துணை நின்று வருவதாகவும் பலஸ்தீனர்களின் இரத்தம் சிந்துகைக்கு எதிராக சில அரபுலக மன்னர்களும், ஜனாதிபதிகளும் நேரடியாக பங்கு வகிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். இதேசமயம் ஐ.நா.சா, ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகியவை ரன்திஸியின் படுகொலையைக் கண்டித்துள்ளன.

மேலும் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற ஹமாஸ் இயக்கத் தலைவர் ரன்திஸியின் இறுதிச் சடங்கில் பல்லாயிரக் கணக்கான பாலஸ்தீனர்கள் கலந்து கொண்டனர்.

இஸ்ரேலுக்கெதிராகவும் அமெரிக்காவிற்கு எதிராகவும் கோஷமிட்டு பழிக்குப் பழி வாங்காமல் விடப்போவதில்லை என்று உணர்ச்சிவசப்பட்ட நிலையில் கத்திக் கொண்டு சென்றனர்.

யாசினினதும் ரன்திஸியினதும் இரத்தம் வீணடிக்கப்படமாட்டாது என்றும் அவர்களது இரத்தம் புதிய எரிமலைகளைத் தோற்றுவிக்கும் என்றும் ஹமாஸ் உறுப்பினர் ஒருவர் சத்தமிட்டுச் சென்றார்.

இது குற்றச்செயல் என்பதில் சந்தேகமில்லை. துரதிஸ்ட வசமாக தாங்கள் அமெரிக்கா நிர்வாகத்தினால் ஆதரிக்கப்படுவதாக இஸ்ரேலியர்கள் உணருவதாகவும் பாலஸ்தீன பிரதமர் அகமட்குரேயும், சமாதானத்திற்கான வழி இது அல்ல என்று பலஸ்தீன ஜனாதிபதி யசீர் அரபாத்தும் கூறினார்.

# அனைவரும் வாக்களியுங்கள்

## -இந்தியா ஜனாதிபதி அப்துல்கலாம்

அனைவரையும் கட்டாயமாக வாக்களிக்குமாறு நாட்டு மக்களுக்கு இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் அழைப்பு விடுத்துள்ளார்.

மக்களவைக்கான தேர்தலின் முதல் கட்டமாக 140 தொகுதிகளில் செவ்வாய் அன்று வாக்குப்பதிவு நடைபெற்றன. இந்நிலையில் ஜனாதிபதி கலாம் தூர்தாஷன் மற்றும் வானொலியில் ஞாயிறன்று உரையாற்றியுள்ளார்.


மக்களைவைத் தேர்தல் வாக்குப் பதவிக்கு முன்பாக ஜனாதிபதி ஒருவர் வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுக்க விளைந்திருப்பது இந்திய ஜனநாயக வரலாற்றில் இதுவே முதல் முறை.

அப்துல் கலாம் பின்வருமாறு உரையாற்றினார். வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிக்கும் போது தங்களது கருத்துப்படி அவரே தொகுதியின் பிரதிநிதியாக வருவார் என்ற நம்பிக்கையில் வாக்களிக்கிறீர்கள். அப்படி வாக்களிக்கும் போது வளமான இந்தியா, மகிழ்ச்சியான இந்தியா, பாதுகாப்பான இந்தியா, பாதுகாப்புத் தரும் இந்தியாவை எல்லாவற்றையும் விட பெரும்தன்மை மிக்க இந்தியாவை உருவாக்க விதை விதைக்கிறீர்கள்.

வாக்களிப்பது தாய் மண்ணுக்கு ஆற்ற வேண்டிய கட்டாய கடமை. வாக்குரிமை என்பது புனித உரிமை, வாக்களிப்பதன் மூலம் சிறுவர்களின், இளைஞர்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற உதவுகிறீர்கள். இலட்சியம் நனவாக அதிகார அமைப்பு உருவாக வழி செய்கிறீர்கள்.

ஒவ்வொரு குடிமகனுக்கும் சம உரிமை தருகிறது ஜனநாயக அமைப்பு. அதைக் கண்கூடாக காணும் சந்தர்ப்பம் தேர்தல்.

வாக்களிக்கத் தகுதிவாய்ந்த அனைவரும், வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்குரிமையைச் செலுத்த சந்தர்ப்பம் வந்துள்ளது. கிராமங்கள் நகரங்களில் உள்ள அனைத்து வாக்காளர்களும் தகுதி வாய்ந்த தமது குடும்ப வாக்காளர்களுடன்



சென்று வாக்களிக்க வேண்டும்.

வசீகர இந்தியாவின் விடியலுக்கு உங்கள் சிந்தனைகளில் மலர்கிறது. அதற்கடுத்தது உங்கள் செயல்கள்தான், அத்தகைய செயலுக்கான தருணம் தேர்தல். அனைவரும் தவறாமல் வாக்குரிமையைச் செலுத்தி அதில் பெருமைப்படுங்கள்.

உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு இந்தியா 14வது மக்களவைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க இத் தேர்தல் நடக்கிறது.

அதேபோல் 4 மானிலங்களின் சட்டப் பேரவைக்கான தேர்தலும் நடக்கிறது. அடுத்த 5 ஆண்டு காலத்திற்கு நாட்டை வழிநடத்திச் செல்வதற்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க பெரியதொரு சந்தர்ப்பம் உங்களுக்கு வாய்த்துள்ளது என்றார் கலாம்.

# இளவரசர் மீது இப்படியொரு புகார்

தான் செல்லமாக வளர்த்த பூனையைத் தனது பொறுப்பற்ற செயலால் எங்கே விரட்டிவிட்டார் இளவரசர் வில்லியம் என்று ஜெஷீரா ஆர்ட் என்ற பெண்மணி முறைப்பாடு செய்திருக்கிறார். இதற்காக இளவரசர் மீது வழக்குத் தொடரவும் அவர் உத்தேசித்திருக்கிறார்.

லாண்ட் நகரில் அரச குடும்பத்தவர் வசிக்கும் பகுதியில் பூச்சி மருந்து தெளிக்கும் வேலையில் இளவரசர் வில்லியம்ஸ் ஈடுபட்டிருந்தாராம் அப்போதுதான் ஜெஷீராவின் பூனை எங்கோ ஓடி விட்டது.

'லண்டன் றோவர்' வாகனத்தில் வில்லியம் உக்காந்திருந்தார். முயல்களை வேட்டையாட அவரும் இன்னொருவரும் வந்திருந்தனர். சக்தி வாய்ந்த விளக்கு வெளிச்சத்தை திடீரென என்னுடைய பூனை மீது பாய்ச்சினார். அதில் மருண்டு அது ஓடியது. பிறகு துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது. அதன் பிறகு என்னுடைய செல்லப் பூனைக்குட்டி வீடு திரும்பவில்லை இது பொறுப்பற்ற செயல். இதற்கு வழக்குப் போடலாம் என்று என்னுடைய சட்டத்தரணி கூறியுள்ளார் என்று டெய்லி மிரர் பத்திரிகையிடம் தெரிவித்தார் ஜெஷீரா.

பாக்கிங்ஹாம் அரண்மனை வட்டாரம் இத்தகவலை மறுக்கிறது. இளவரசர் முயல் வேட்டைக்கு போகவில்லை. செடிகளுக்குப் பூச்சி மருந்து அடிக்கத்தான் அவர் போனார். எந்தப் பூனையையும் அப்போது அவர் கொல்லவில்லையென அரண்மனை வட்டாரங்கள் மறுக்கின்றன.

- நெற்



இஸ்ரேலியா விமானப் படையினரின் தாக்குதலில் உயிரிழந்த ஹமாஸ் இயக்த் தலைவர் அப்துல் அஸீஸ் அல்-ரன்திஷியின் உடல் அடக்கம் செய்யப்பட்ட புதைக்குழிக்கருகில் பலஸ்தீன சிறுவனொருவன் கவலையுடன் அமர்ந்திருப்பதைக் காணலாம்.

### தேர்தல் வெற்றியிலும் தோல்வி நிலையில் தத்தளிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி...

# தலைவி சந்திரிகா குமாரதுங்க நாட்டை வழிநடத்தப் போவது எவ்வாறு...

**வே.திருமாறன்**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான முறுகல் நிலைமையும், விரிசலும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அதனால் புதிய



நாடாளுமன்றம் கூடியதும். அதன் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கப் போகின்றன என்பது குறித்த சந்தேகங்களுக்கு இன்மை தெளிவான விளக்கங்கள் கிடைக்கவில்லை. புதிய நாடாளுமன்றத்தின் சபாநாயகரைத் தெரிவு செய்வதிலும் கடும் போட்டி உருவாகியிருக்கின்றன. மொத்தத்தில் நடந்து முடிந்த பொதுத்தேர்தல் நாட்டில் நிலவிய அரசியல் ஸ்திரத்தன்மையைப் போக்குவதற்குப் பதிலாக நிலைமையை மோசமாகவே வழிகோலியிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் அமைப்பில் கிழக்கில் கருணாவினால் உருவாக்கப்பட்ட குழப்ப நிலைமை காரணமாக இரண்டு வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து நிலவிய போர்நிறுத்தம் ஆபத்துக்கு உள்ளாகியபோதிலும், நிலைமை இப்போது சீரடைந்துள்ளது. நாற்பத்தியொரு நாட்கள் பிரதேசவாதம் பேசி. விடுதலைப் புலிகளின் அமைப்புக்குள் பிளவை ஏற்படுத்திய கருணா இப்போது எங்கிருக்கின்றார் என்பது தெரியவில்லை. அவருடைய இருப்பிடம் குறித்து பல்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்பட்ட போதிலும் அவரால் உருவாக்கப்பட்ட சிக்கல்கள் அமைதியான முறையில் தீர்க்கப்பட்டிருப்பதையடுத்து. மட்டு-அம்பாறை பிரதேச மக்கள் நிம்மதியடைந்துள்ளார்கள்.

தமிழ்த் தேசியத்திற்கும். தமிழர்களின் தாயகக் கோட்பாட்டுச் சித்தாந்தத்திற்கும் கருணாவின் செயற்பாடுகளின் மூலமாக ஏற்படவிருந்த முட்டுக்கட்டைகள் நீங்கியதையடுத்து, தமிழ் மக்கள் திருப்தியடைந்துள்ளார்கள். பெரும் மோதல்களை எதிர்பார்த்திருந்த போதிலும், மட்டு அம்பாறை பொதுமக்களும். கருணாவின் இடுக்குப் பிடிக்குள் சிக்கியிருந்த ஆயிரக்கணக்கான விடுதலைப் புலி போராளிகளும் வழங்கிய ஒத்துழைப்புக் செயற்பாடுகள் காரணமாக கருணாவின் விவகாரம் அமைதியான முறையில் விரைவாக முடிக்கப்பட்டதாக விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 22 பேரையும் சந்தித்துக் கலந்துரையாடிய அவர் மட்டு அம்பாறை மக்கள் மீது தான் கொண்டிருக்கின்ற அக்கறையையும். அவர்கள் மீதான பரிவையும் வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கையைப் பொறுத்தமட்டில், வடக்கு மற்றும் தெற்கு என இரு துருவங்களில் இருவேறு அரசியல் நிலைப்பாடுகள் நிலவுகின்றன. பூகோள ரீதியாக துருவப்பட்டிருப்பது போலவே, அரசியல் செயற்பாடுகள் நோக்கங்கள் என்பவற்றிலும் இவ்விரு பகுதியினருக்கும் இடையே முரண்பாடுகள் இருக்கின்றன. இந்த முரண்பாடுகளின் மூலவேராக இனப்பிரச்சனை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. எரிகின்ற பிரச்சனையாகப் பலவருடங்கள் இருந்து வருகின்ற இந்தத் தேசிய பிரச்சனைக்கு நிரந்தர அரசியல் தீர்வு சாபக்கேடாகக் கருதப்படுகின்றது.

சுமார் இரண்டு தசாப்தங்கள் நடைபெற்று வந்த மோசமான உள்ளூர் யுத்தம் நிறுத்தப்பட்டு. கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக போர்நிறுத்தம் அமுலில் இருக்கின் றது. போரை நிறுத்தி நிபந்தனையற்ற முறையில் விடுதலைப்புலிகளுடன் சமாதான பேச்சுக்களை நடத்திய ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக இந்த முயற்சியை எள்ளி நகையாடி, அதில் குற்றங்களையும் குறைகளையும் கண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அமைதி முயற்சிகளை குழப்பியடிக்கும் நோக்கத்திலேயே ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை கலைத்து பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

ஆறு சுற்றுப் பேச்சுக்களை நடத்திய போதிலும். அவற்றில் எட்டப்பட்ட உடன்பாடுகள். தீர்மானங்களைச் செயற்படுத்துவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பின்னடித்ததைச் சுட்டிக்காட்டி விடுதலைப் புலிகள் சமாதான பேச்சுக்களில் இருந்து தற்காலிகமாக ஒதுங்கினார்கள். கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் இது நடைபெற்றது. சுமார் ஏழு மாதங்களில் பின்னர், சமாதான பேச்சுக்களை உறுதியானதோர் அடித்தளத்தில் இருந்து ஆரம்பிப்பதற்காக போரினால் பாதிக்கபட்ட பிரதேசமாகிய வடக்கு கிழக்கு பிரதேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான அதிகாரமிக்க ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்ற யோசனையை விடுதலைப் புலிகள் முன்வைத்தார்கள்.

சுவற்றில் எறிந்த பந்தைப்போல, எடுத்த எடுப்பிலேயே அதனை நிராகரித்து உதாசீனம் செய்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் அமைச்சரவையின் முக்கிய பொறுப்புகளில் கைவைத்து நாடாளுமன்றத்தைத் தகுந்த காரணமின்றி ஒத்திவைத்து, சமாதான முயற்சிகளின் போக்கில் பெரும் குழப்பநிலைமையை உருவாக்கினார். அதன் தொடர்ச்சியாகவே, நாடாளுமன்றம் முற்றாக கலைக்கப்பட்டு. ஏப்ரல் 2ம் திகதி பொதுத்தேர்தல் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்து சமாதான பேச்சுவார்த்தைகளை சர்வதேச அனுசரணையுடன் முன்னெடுத்த முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுக்கு அதிக சலுகைகளை வழங்கிவிட்டார் என்றும், சரியான முறையில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவில்லை என்றும், அவருடைய நடவடிக்கைகள் காரணமாக தேசிய பாதுகாப்பிற்குப் பங்கம் ஏற்பட்டுவிட்டது என்றும் கூக்குரலிட்டு, அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தினார். நாட்டை சரியான முறையில் வழிநடத்துவதாகவும், சமாதான முயற்சிகளை முன்னெடுத்ததன் காரணமாகவே நாட்டின் அரசியல் நிலைமை தளம்பியதாகவும்அவர் குற்றம் சாட்டியிருந்தார். ஆயினும் அவர் நடத்திய பொதுத் தேர்தலின் மூலம் அவர் குறிப்பிட்டிருந்த எந்தப் பிரச்சனைக்கும் தீர்வுகாணப்பட்டதாக தெரியிவில்லை. மாறாக உண்மையாகவே அத்தகைய நிலைமைகள் நாட்டில் ஏட்படுவதற்கு அவருடைய செயற்பாடுகள் வழிவகுத்திருக்கின்றன. இதுதான் யதார்த்தமாக இருக்கின்றது.

கட்டுக்கோப்பான நிலையில் இருந்து சமாதான முயற்சிளில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பினுள் பிளவை ஏற்படுத்துவதற்காக விடுதலைப் புலிகளின் முன்னாள் கிழக்குப் பிராந்தியத் தளபதி கருணாவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சி தென்பகுதி அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்திருக்கும் வெற்றி கிடைக்கவில்லை. கருணாவினால் ஏற்படுத்தப்பட்ட நெருக்கடிகளுக்கு குறைந்த அளவு இரத்தம் சிந்தி, மிகவும் அமைதியான முறையில் என்ன நடக்கின்றது என்பதை யூகிப்பதற்கு முன்னதாகவே விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தீர்வு கண்டுவிட்டார். இதன் மூலம் விடுதலைப் புலிகள் தரப்பில் கருணாவினால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அரசியல் தளம்பல் நீங்கியது. வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியாகவும் பலமுள்ளவர்களாக இப்போது திகழ்கின்றார்கள்.

தமிழ் மக்களின் ஏக்பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளே என்ற நிலைப்பாடு வாக்குச் சீட்டுக்களின் மூலமாக வடக்கு கிழக்கு பிரதேச மக்களினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக 22 பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் பிரவேசித்துள்ளார்கள்.

ஆனால் தென்பகுதி அரசியல் தரப்பில் குறிப்பாக தேசிய அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய இரண்டு கட்சிக்கும் இடையில் இனப்பிரச்சனை தொடர்பிலான கருத்து வேற்றுமைக்கு எந்தவிதமான தீர்வும் காணப்படவில்லை. மாறாக.



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளி கட்சிகளாகிய பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜேவிபியும் அமைச்சுப் பொறுப்புக்களைத் தமக்குள் பங்கிட்டுக் கொள்வதில் முரண்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த முரண்பாட்டிற்குத் தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்ததுடன். இருகட்சிகளுக்கும் இடையில் விரிசலும் அதிகமாகியுள்ளது.

அத்துடன் 105 ஆசனங்களை ஜேவிபியுடன் கூட்டிணைந்து பெற்றுள்ள போதிலும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான 114 ஆசனங்களை கொண்ட பெரும்பான்மை நிலைமையை காட்டுவதற்கான வழியின்றி புதிய நாடாளுமன்றம் கூடுவதற்கான கடைசி நேரம் வரையிலும் திண்டாட வேண்டிய கழிவிரக்க நிலைமைக்குள் தள்ளப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுத்தேர்தலில் ஆட்சியமைப்பதற்குத்தேவையான அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தவறியதன் மூலம் நாட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவை அக்கட்சி பெறவில்லை என்பது நிரூபணமாகியுள்ளது. அறுதிப் பெரும்பான்மைக்குத் தேவையான ஆசனங்களில் 9 ஆசனங்கள் குறைவாகப் பெற்று, அதனை ஈடுசெய்வதற்கு சிறிய கட்சிகளின் ஆதரவை உடனடியாகப் பெறமுடியாமல் போனதன் மூலம் தேர்தலில் வெற்றிபெற்ற போதிலும், ஓர் அரசியல் அனாதையைப் போன்ற நிலைமைக்கு அக்கட்சி தள்ளப்பட்டிருப்பது அக்கட்சியின் எதிர்காலத்தைக் கேள்விக் குறிக்கு உள்ளாகியிருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தலில் வெற்றிப்பெற்றுள்ளதாக மேலோட்டமான நிலையில் காணப்பட்டாலும், அந்த முன்னணியில் இணைந்துள்ள இரு கட்சிகளுக்கிடையே அமைச்சரவை பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்வதிலும், இரண்டு கட்சிகளுக்கிடையேயும் செய்து கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நிபந்தனைகளைச் சரியாகக் கடைப்பிடித்துப் புதிய ஆட்சியைச் சிக்கலின்றி உடனடியாக அமைப்பதிலும் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் ஐக்கிய மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

நடந்து முடிந்துள்ள பொதுத் தேர்தலின் முடிவுகளின்படி. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களாகிய வடக்கு கிழக்குப் பிரதேசம் சமாதான முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளது. நாட்டின் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் சமாதான முயற்சிகளில் அதிக அக்கறை செலுத்தியதாக அவர்கள் வாக்களித்துள்ள விதத்தின் மூலம் தெரியவில்லை. சமாதான முயற்சிகளுக்கு விரோதமான கொள்கைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றி வந்த பொது ஜன ஐக்கிய முன்னணியும். ஜேவிபியும் இணைந்த கூட்டமைபிற்கு மக்கள் பெரும்பான்மையான ஆசனங்களை வழங்கியுள்ளார்கள். இரண்டு வருடங்களுக்கு மேலாக சமாதான முயற்சிகளை முன்னெடுத்த ஐக்கிய தேசிய முன்னணிக்கு 85 ஆசனங்களை மாத்திரமே தென்பகுதி மக்கள் வழங்கியுள்ளார்கள்.

நாட்டில் இனப்பிரச்சனை என்பதே கிடையாது. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தக் கூடாது. அவர்களை இராணுவ நடவடிக்கைகளின் மூலமாக ஒடுக்கவேண்டும் என்ற கொள்கையை கொண்ட பௌத்த பிக்குகளைக் கொண்ட ஜாதிக ஹெல உறுமய என்ற பெயரிலான புதிய கட்சிக்குத் தென்பகுதி மக்கள் 9 ஆசனங்களை வழங்கி தென்பகுதியில் மூன்றாவது அரசியல் சக்தியாக அதனை உருவாக்கியிருக்கின்றார்கள்.

அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான தீர்மானிக்கும் சக்தியாக வாங்குவங்கி பலத்தைக் கொண்டதாக திகழ்ந்து வந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் இந்தத் தேர்தலில் பின்னடைவையே சந்தித்துள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையே பெரும்பான்மை பலத்தைத் தீர்மானிக்க வல்ல சக்தியாக இந்தக் கட்சிகளினால் தெளிவான பலத்தைப் பெற முடியாமல் போயிருப்பது குறிப்பிடதக்க விடயமாகியுள்ளது.

மொத்தத்தில் பொதுத் தேர்தலின் பின்னர் பிளவுகளின் மையமாக மாற்றம் பெற்றுள்ள தென்பகுதி தரப்பை நொண்டி மாடுகளாகத் தென்பகுதி மக்கள் அரசாங்க வண்டியில் பூட்டியிருக்கின்றார்கள். இவைகள் தமது நொண்டித் தனத்தை மறந்து இல்லது மறைத்து சண்டித்தனத்தில் ஈடுபட்டிருப்பது வேதனையானது. இந்த அரசியல் போக்கு இலங்கையை அதளபாதாளத்திற்கே இட்டுச் செல்லப் போகின்றது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

# தேசியத் தலைவரே தமிழினத்தின் மூச்சு அவரின் வழியிலே தமிழ் சமூகம் அணிதிரண்டுள்ளது

சர்வதேச சமூகத்திற்கும், சிங்கள அரசிற்கும் தமிழ் சமூகமானது சிறந்த பாடத்தினை புகட்டி வருகின்றது என்பதை உரியவர்கள் தாங்களாகவே புரிந்துகொள்ள வேண்டும். தமிழீழ தேசயத் தலைவர் வே. பிரபாகரனையும் அவருடைய தலைமையையும் தமிழ் மக்கள் ஏற்கின்றார்கள் என்பதற்கு மீண்டும் ஒரு எடுத்துக்காட்டினை சர்வதேச சமூகத்திற்கும். சிங்கள அரசிற்கும் உணர்த்தியுள்ளனர்.

அண்மையில் நடைபெற்று முடிந்துள்ள 2004ம் ஆண்டுக்கான பாராளுமன்ற பொதுத்தேர்தலின் மூலம் இலங்கை தமிழரசுக் கட்சி அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியீட்டி பாராளுமன்றத்தில் 22 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. இதன் மூலம் தமிழ் இனம் தேசியத் தலைவரின் மீது பற்றுறுதி கொண்டுள்ளது. என்பதற்கு சான்றினை தமிழினம் வெளிக்காட்டியுள்ளது.

மட்டு அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட துன்பியல் சம்பவத்தால் தமிழ் சமூகத்தை தேசியத் தலைவரின் செயற்பாடு, பாரிய தாக்குதலை ஏற்படுத்தி ஓர் பின்னடைவை ஏற்படுத்தும் என சிங்கள அரசும், சர்வதேச சமூகமும், ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் தேசியத் தலைவரின் பணிப்பானது தமிழ் சமூகத்திடையே இரத்தம் சிந்தாமல், பொருளாதார பின்னடைவு இல்லாமல் உரிய பிரதேசங்களை எங்கள் வசம் மீண்டும் கொண்டு வர வேண்டும். அதே போலவே தமிழீழ போராளிகள் மிகக் கச்சிதமாக மட்டு அம்பாறை மாவட்டத் தினை ஓரிரு நாட்களிலே தங்களின் பூரண கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தார்கள். இச்செயற்பாட்டிற்கு அப்பகுதி மக்கள் பூரண ஒத்துழைப் புக்களை வழங்கியருப்பதால் மிக இலகுவாக செயற்பட முடிந்தது.

தனது இலக்கினை மிக இலகுவாக அடையலாம் என தேசியத் தலைவர் எண் ணியே செயற்படுத்தினார். ஆனால் சிங்கள-அரசானது விடுதலைப் புலிகளை இரு கூறாக்கலாம், சின்னாபின்னமாக்கி உட்பூசலை ஊட்டி 20 வருடங்களாக தொடர்ந்து போராடி வருகின்ற யுத்தத்தை ஓரிரு நாட்களிலே மிக இலகுவாக முற்றுப் புள்ளி வைத்து விடலாம் என சதித்திட்டம் தீட்டி குளிர்காய பகல்கனவு கண்டது.

20 ஆண்டுகளாக தமிழினத்தின் விடிவுக்காய் இரத்தம் சிந்தி போராடி, மாவீரர்களை தமிழ் தேசிய இனத்தின் விடிவுக்கு வித்தாக்கிய தமிழினம் ஒருபோதும் சிங்கள அரசுக்கு அடிப்பணியமாட்டாது. தேசியத் தலைவரே தமிழினத்தின் அவரின் வழி யிலே தமிழ் சமூகம் அணிதிரண்டு உள்ள துடன், தமிழினத்தின் ஏக பிரதிநிதியாக ஏற்றுக் கொண்டதை தெளிவாக விளக்கி நிற்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன் னாள் தளபதி கருணா அவர்கள் பகை மைக்கு முன்னம் தமிழ் தேசிய தலைவரின் கட்டளைகள் ஏற்று தமிழ் தேசிய போராட்டத்திற்கு தன்னுடைய அர்ப்பணிப்பினை செய்திருந்தார். ஆனால் தனிமனிதனின் மனதில் ஏற்பட்ட ஆசை காரணமாகவும் தமிழ் தேசிய இனத்தின் மீதிருந்த பற்றினை சுயலாபத்திற்கு பயன்படுத்த முற்பட்டதனிலாலுமே, தேசியத் தலைவ ரின் வழிநடத்தலுக்கும், தமிழினத்திற்கும் துரோகம் இளைத்துள்ளனர்.

தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களுக்கெல்லாம் தேசியத் தலைவரின் வழிகாட்டலால் போராட்ட களத்திலே வெற்றி கண்டோம் அதனால்தான் சிங்கள அரசு சர்வதேச நெருங்குதலால் தமிழினத்தின் அருகில் தானாக வந்து சமாதானத்தின் தேவையை உணர்ந்து, சமாதான உடன் படிக்கையில் கைச்சாத்திட்டதுடன் சுமுக மான பேச்சுவார்த்தைகளில் பங்கு கொண் டது.

சர்வதேச அரசுகளிடம் தமிழ் சமூகத்தின் உட்கட்ட பிரச்சனைகளை தீர்க்கின்றோம் என பூச்சாண்டி காட்டி நிதிகளையும். அன்பளிப்புகளையும் பெற்று சிங்கள அரசானது தங்கள் சமூகத்தின் பிரதேசங்களையும், பொருளாதாரத்தையும் அபவிருத்தி செய்து வருவதை அவதானித்த தேசியத் தலைவர் சர்வதேச அரசுக்கும், சமூகத்திற்கும் தெரியப்படுத்தி தமிழ் சமூகத்திற்கு கொடுக்கின்ற உதவிகளை நேரடியாக எங்களுக்கு வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தி ருந்தார்.

சிங்கள அரசானது தமிழ் இனத்தினை திட்டமிட்டு நசுக்குவதற்காகவே சதிக்கார கும்பல் ஒன்றை வரைந்து பல குளறுபடி களைச் செய்து தமிழ் சமூகத்தின் மீது திணிந்து தமிழினத்தையே நசுக்க நினைத் தது. ஆனால் தேசியத் தலைவர் சர்வதேச அரசுகளுடன் இது தொடர்பாக பல ஆய்வுகளை செய்து தமிழ் சகூகத்திற்கு பொருத்தமான தீர்வு திட்டத்தை முன் மொழிந்தார். ஆனால் அதனை சிங்கள அரசானது ஏற்க மறுத்துள்ளது.

தமிழரையும். தமிழ் சமூகத்தின் மீதும் துரோகம் இழைப்போரை தேசியத் தலை வர் இனங்கண்டு உரியவாறு காலத்திற்கு காலம் செயற்பட்டு வருகின்றார். அவர்கள் பதித்த தடையங்கள் அவற்றையே வெளிப்படுத்துகின்றது. இதனால் தான் தேசியத் தலைவர் மீதும், அவர்களின் கொள்கை மீது பற்றுதிக் கொண்ட தமிழ் சமூகம் சொந்த மண்ணிலும் சர்வதேசத்திலும் நடாத்திய பொங்குதமிழ் எழுச்சி மூலம் அனைவருக்கும் தெளிவாக விளக்கியுள் ளனர்.

தமிழ் சமூகம் என்றும் தேசியத் தலை வரின் வழியிலே அணிதிரளும் என் பதை சிங்கள அரசும் சர்வதேச சமூகமும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

> 20 ஆண்டுகளாக தமிழினத்தின் விடிவுக்காய் இரத்தம் சிந்தி போராடி, மாவீரர்களை தமிழ் தேசிய இனத்தின் விடிவுக்கு வித்தாக்கிய தமிழினம் ஒருபோதும் சிங்கள அரசுக்கு அடிப்பணியமாட்டாது.

# மகாவலி அதிகாரசபை ஜே.வி.பிக்கு கிடைக்காது ஜே.வி.பி சுதந்திரக்கட்சி இழுபறி

சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்குமிடையில் அமைச்சுப் பொறுப்புக்கள் தொடர்பூான இழுபறி நிலை மிக மோசமான நிலையை எட்டியுள்ளது. இந்த நிலைமை தொடர்கின்ற போதிலும் கடந்த 19ம் திகதி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவும் சோமவன்ச அமரசிங்க தலைமையில் ஜே.வி.பியின் அரசியல் பீடமும் அவசரமாகக் கூடியுள்ளனர்.

ஜே.வி.பியினரை அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள வைப்பதற்கு அவர்களின் ஆட்சிப் பங்காளர்களான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பெரும்பிராயத்தனம் எடுத்து வருகினறனர். இருந்தபோதிலும் ஜே.வி.பியினர் மகாவலி அபிவிருத்தி அதகார சபைப்பொறுப்பும் தமக்கே வேண்டுமெனறு விடாப்பிடியாக இருப்பதினால் இன்னும் இழுபறி நிலை தொடர்ந்து கொண்டேயி ருக்கின்றது.

அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதிலிருந்து வந்த அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காணப்பட்டதாக்வும் ஜனாதி பதியுடன் ஜே.வி.பியினர் நடத்திய பேச்சு வார்த்தையின் போது பதவி அமைச்சின் செயலாளர்கள் திணைக்களங்களின் தலைவர்கள் செயலாளர்களை நியமிப்பது

— விஜேஷ

தொடர்பாக அனைத்து விடயங் களிலும் ஜே.வி.பிக்கு சார்பாக தீர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகிறது.

மேலும் 19ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டத்தினைத் தொடர்ந்து மகாவலி அதிகாரசபையை விட்டுக் கொடுக்க முடியாது என ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது. அதாவது மகாவலி அதிகார சபையை தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள விவசாய நீர்பாசன அமைச்சின் கீழ் கொண்டுவர வேண்டும் என்று ஜே.வி.பியினர் ஜனாதிபதியைக் கோரி வந்துள்ளனர். ஆனால் அதனை விட்டுக்கொடுக்க முடியாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தெரிவிக்கிறது. அந்த நிலைப்பாட்டையே ஜனாதிபதியும் வலியுறுத்தியுள்ளார்.

இதனாலேயே அமைச்சுக்களைப் பொறுப்பேற்காமல் ஜே.வி.பி இருந்து வருகிறது. தேர்தலுக்கு முன்னர் ஜே.வி.பியும் சுதந்திரக் கட்சியும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி ஜே.வி.பிக்கு நாலு முழு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டும்.

அதன்படி நாங்கள் அவர்களுக்கு நான்கு அமைச்சுப் பதவிகளை வழங்கியிருக்கிறோம். கடந்த காலங்களில் மகாவலி அதிகார சபை தனி ஒரு அமைச்சுக்குரிய இடமாகவே இருந்த வந்திருக்கிறது.



ஜே.வி.பி கேட்கின்ற மாதிரி மகாவலி அதிகார சபையைக் கொடுப்பதனால். ஜே.வி.பிக்கு கிடைக்கும் முழு அமைச்சுக்களின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரிக்கும். இது இணக்கத்திற்கு உட்பட்ட விடயம் இல்லை. எனவே தான் மகாவலி அதிகார சபை ஆற்றுப்படுக்கை அமைச்சின் கீழ் இருந்து வரவேண்டும் என்று நாங்கள் கூறுகின்றோம் என்று ஜே.வி.பி சுதந்திரக் கட்சி இழுபறிக்கான காரணங்களை சுதந்திரக் கட்சி அமைச்சர் ஒருவர் விளக்கினார்.

ஆற்றுப்படுகை அபிவிருத்தி ரஜரட்ட அபிவிருத்தி அமைச்சராக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான மைத்திரிபால சிறிசேன இருந்து வருகிறார் என்ப்து குறிப்பிடத்தக்கது.

## தமிழருக்கான உரிமைகள் வழங்கப்படக் கூடாது என்பதில் இரு பிரதான கட்சிகள். - தலைவர் பிரபாகரன்

தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள். மற்றும் மேல்மாகாண மக்கள் முன்னணி தலைவர் மனோகனேசன், மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரன் ஆகியோரை தனித்தனியாக சந்தித்து உரையாற்றியபோது கீழ்வருமாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களிற்கு உரிமைகள் வழங்கப்படக் கூடாது என்பதில் ஐ.ம.சு.மு கட்சியும். ஐ.தே.க. யும் ஒரே நிலைப்பாட்டைக் கொண்டே காணப்படுகின்றன. இது தொடர்பான இவர்களது கருத்துக்களை தராசில் வைத்துப் பார்த்தால் சமநிலை யிலேயே காணப்படுகின்றனர்.

ஐ.தே.க யின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலையே நோக்காக கொண்டும் ஐக்கிய மக்கள் முன்னணியின் தலைவி சந்திரிக்கா பாராளுமன்ற ஆட்சிமுறையை கொண்டு வரும் நோக்கிலேயுமே செயற்பட்டுக் கொண்டு வருகின்றனர் என்று இந்தச் சந்திப்பிலே அவர் தெரிவித்தார்.

# விமான விபத்தில் பலியான பிரபல நடிகை



பிரபல சினிமா நடிகை செளந்தர்யா கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட விமான விபத்தில் பரிதாபமாக உயிரிழந்தார். இவருடன் இவரது அண்ணனும் தயாரிப்பாளருமான அமர்நாத் உட்பட 4 பேரை இந்த விபத்து பலிகொண்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை 11.25 மணியளவில் நடிகை செளந்தர்யா பா.ஜ.கட்சியின் தேர்தல் பிரச்சாரத்திற்காக புறப்பட்டார். இவர் தளத்திலிருந்து புறப்பட்ட ஐந்தாவது நிமிடத்திலேயே விமானம் கீழே விழுந்தது. இதுபற்றி இவ்விபத்தை நேரில் கண்டவர்கள் கூறுகையில் விமனம் புறப்பட்ட 5வது நிமிடத்திலேயே கீழே விழுந்தது. அந்த வேளையில் தங்களைக் காப்பாற்றுமாறு நடிகை செளந்தர்யா கையைக் காட்டி உதவிக்கு அழைத்தார். உடனே நாங்கள் அந்த இடத்திற்கு விரைந்தோம். அப்போது செளந்தர்யாவின் சேலையில் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. உடனே அருகிலிருந்த மணலை அள்ளித் தீயை அணைக்க முயன்றோம். ஆனால் அதற்கிடையில் விமானம் முழுவதும் தீப்பிடித்து எரியத் தொடங்கி விட்டது. எங்களது கண் முன்னேயே நால்வரும் உயிரிழந்தனர். எங்களுக்கும் சில தீக்காயம் ஏற்பட்டது என்றனர்.

நடிகை செளந்தர்யா M.B.B.S படித்துக் கொண்டிருந்த போது அவருக்கு "காந்தர்வ" என்ற கன்னடப்படத்தில் நடிப்பதற்கு முதன்முதலில் வாய்ப்புக் கிடைத்தது. அதன் மூலம் சினிமா உலகில் அறிமுகமாகினார். தமிழ் சினிமாவில் பொண்ணுமணி திரைப்படத்தில் கார்த்திக்குடன் ஜோடி சேர்ந்து அறிமுகமாகி சினிமாத்துறையில் கடந்த 10 ஆண்டுகளாக கதாநாயகியாக நடித்துக் கொண்டிருந்தார். தமிழ் சினிமாவின் பிரபல நட்சத்திரங்கள் பலருடன் ஜோடி சேர்ந்த பெருமைக்கும் உரித்துடையவர். இவர் கடந்த வெள்ளிக்கிழமை அன்றுதான் தனது தேர்தல் பிரச்சாரத்தைப் பற்றி அறிவித்திருந்தார். முதல் முறையாக கர்நாடகா மாநிலத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் தான் பிரச்சாரம் செய்தார். இரண்டாவது நாள் ஆந்திரா மாநில பிரச்சாரத்திற்கு புறப்பட்ட பயணமே இவரது வாழ்க்கையின் இறுதிப் பயணமாகவும் அமைந்து விட்டது.

இவர்களது உடல்கள் அவர்களது உறவினர்களிடம் வழங்கப்பட்டு டாலர்ஸ் காலணியிலுள்ள அவர்களது இல்லத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப் பட்டிருந்தது. பின்னர் சனிக்கிழமை மாலை ஆறுமணியளவில் செளந்தர்யா, அமர்நாத் உடல்கள் ஊர்வலமாக ஸ்ரீராமபுரத்திலுள்ள ஹரிச்சந்திரகாட் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

# ஒரு நாள் பயிற்சி பட்டறை





வடகிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் நிக்கோட் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இதனை வலுப்படுத்தும் நடவடிக்கையாக ஒருநாள் பயிற்சிப் பட்டறை அண்மையில் விவசாயப் பயிற்சி மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் மங்கள விளக்கேற்றுவதையும், வவுனியா மாவட்ட பணிப்பாளர் சி. திருஞானசம்பந்த மூர்த்தி தலைமை தாங்கி உரையாற்றுவதையும், திட்டமிடல் பணிப்பாளர் லோரன்ஸ் திலகர் திட்டம் பற்றி விபரிப்பதையும் அருகில் நிக்கோட் திட்ட இணைப்பாளர் சுடர் அவர்கள்



இருப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரின் ஒரு பகுதியினரையும் காணலாம்.

படமும் தகவலும்:-
ச. மயூரவதன்





தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வட/கிழக்கு 8 மாவட்டங்களில் செயற்படுத்தப்படும் நிக்கோட், நியாப் திட்டம் சம்பந்தமாக மாவட்ட மட்ட மாதாந்த ஒரு நாள் பயிற்சிப் பட்டறை அண்மையில் நடைபெற்றது. இதில் த.பு.க. திட்டமிடல் பணிப்பாளர் லோரன்ஸ் திலகர், மாவட்ட த.பு.க பணிப்பாளர் சி. திருஞானசம்பந்த மூர்த்தி, த.பு.க உதவி நிறைவேற்று பணிப்பாளர் இனியவன், நிக்கோட்திட்ட பணிப்பாளர் சுடர் போன்றோரையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் காணலாம்.

படமும் தகவலும்:- ச. மயூரன்

# குறுக்கெழுத்துப்போட்டி 13

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 த | 2 | 3 | 4 | 5 | 6 க |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 ■ | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

**குறுக்கெழுத்துப்போட்டி 10**

வெற்றி பெற்றவர்கள்

1
ம.எழிலரசி
C/O. நா.சுந்தரலிங்கம்
8ம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு

2
ஞா.துவாரகா
கைதடி மேற்கு.
கைதடி.

இடமிருந்து வலம்
1 ஸ்ரீ இராமனின் தந்தையின் பெயர்
7 அனைத்தும் என்பதற்கு இணையான சொல்
9 தலையில்லாத உருவத்தை இப்படி கூறுவார்கள் (குளம்பியுள்ளது)
13 இது கட்டி விளையாடுவார்கள்.
19 பழைய காலத்தில் மன்னர்கள் இதிலேயே பிரயாணம் செய்வார்கள்.
26 வீதிகளில் இதைக் காணலாம். (குளம்பியுள்ளது)
31 திருமண வீடுகளில் பரிமாறப்படும் முக்கிய உணவுப் பண்டம்

மேலிருந்து கீழ்
1 கருணையின் ஒத்த கருத்துள்ள சொல் ஒன்று
2 அண்மையில் ரெலி விபத்தில் இறந்த நடிகை
3 இசை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தும் ஒரு வாத்தியம்
4 கொலை வழக்குகளில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.
19 நடிகை ஒருவர்
6 தமிழில் இறந்த பின் அவர்களைத் தூக்கிச் செல்லும் பாடை கட்டுவதற்காக இதனைப் பயன்படுத்துவார்கள்.
18 கர்ணனின் தாய்
23 இலங்கை அமைந்திருக்கும் கண்டம்
30 செய்தி என்பதை ஆங்கிலதில் எழுதி அதில்வரும் எழுத்துக்கள் ஒவ்வொன்றையும் முதல் எழுத்தாக கொண்டு ஆரம்பித்தால் வரும் சொற்கள் முழுவதையும் தமிழில் மொழி பெயர்த்தால் இது வரும்.

விடைகளை அனுப்பவேண்டிய இறுதித்திகதி 09.05.2004அனுப்பவேண்டிய முகவரி

**தணலின் குறுக்கெழுத்துப்போட்டி 13**
61, கற்குழி, வவுனியா

# சந்தா விபரம்

செந்தணல் வாசகர்களே நீங்களும் செந்ததணலின் சந்தாதாரராகின்றீர்களா?

அவ்வாறாயின் உங்கள் பெயர் விபரங்களை கீழ்காணும் கூப்பனில் நிரப்பி அனுப்பிவையுங்கள் அத்துடன் சந்தாவையும் காசுக்கட்டளைமூலம் அனுப்பி வையுங்கள்

| சந்தா இல. | விபரம் | |
|---|---|---|
| 1 | 3 மாதங்கள் | 140 ரூபாய் |
| 2. | 6 மாதங்கள் | 280 ரூபாய் |
| 3. | 1 வருடம் | 560 ரூபாய் |

பெயர்: ______

முகவரி: ______

தொ.பெ.இல ______

சந்தா இல. ______

சந்தா இலக்கம் [ ] ஐ தெரிவு செய்து அவ் விபரங்களுக்கு அமைய [ ] ரூபா பெறுமதியான காசுக் கட்டளையை இவ் விண்ணப்பத்துடன் அனுப்புகிறேன் என உறுதிப்படுத்திக் கொள்கிறேன்.

______
கையொப்பம்

அனுப்பவேண்டிய முகவரி

**சந்தாதாரர்**
செந்தணல் வார இதழ்
இல. 61, கற்குழி,
வவுனியா

# அறிவித்தல்

விளம்பரங்கள்
சந்தா விபரங்கள்
போன்றவற்றிற்கு
நீங்கள் தொடர்பு
கொள்ள வேண்டிய
தொ.பே. இல: 011 4715168
தொலை நகல் 011 4715168

# கண்ணீர் அஞ்சலி


வையக வரவு 1944 * 04 * 04
வானக விரைவு 2004 * 04 * 17

யாழ்ப்பாணம் புத்தூர் நவக்கிரியைப் பிறப்பிடாமாகவும், வவுனியா தாண்டிக்குளம், கந்தசாமி கோவிலடியைத் தற்போதய வாழ்விடமாகவும் கொண்ட

**அமரத்துவம் எய்திய**
**திரு. தம்பையா துரைச்சாமி**

17-04-2004 அன்றைய தினம் அமரத்துவம் அடைந்தவரும் எமது கல்விநிலைய மாணவன் செல்வன் து.சர்மிலன் அவர்களின் தந்தையுமான அமரர் திரு த.துரைச்சாமி அவர்களின் இழப்பினால் சொல்லொனாத் துயரில் மூழ்கியிருக்கும் அன்னரின் குடும்பத்தவர்கட்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

இயக்குனர். ஆசிரியர்கள்,
மாணவர்கள்
விவேகானந்தா கல்வி நியைம்,
தாண்டிக்குளம், வவுனியா



# ஏமாற்றப்பட்ட தமிழினம்

## தமிழர்கள்வாழ்வு

தொடர் 18

சத்தியா

உடன்படிக்கை கையெழுத்தாகி சிறிலங்கா இராணுவ மரியாதையை ராஜீவ் காந்தி ஏற்று நடந்த போது றோகன விஜித முனி என்ற இராணுவ வீரன் தனது துப்பாக்கியால் ராஜீவ் காந்தியின் தலையில் அடித்தான்.

ராஜீவ் காந்தி அத்தாக்குதலில் இருந்து தப்பிக் கொண்டாராயினும், ஜே. ஆர் ஜெயவர்த்தனாவின் மனம் அந்த இராணுவ வீரனின் செயலை சரியானதென்றே ஏற்றுக் கொண்டது. அவனுக்கு "sun store" ஏற்பட்டிருக்க கூடுமென்றுதான் ஜே. ஆர் முதலில் திருவாய் மலர்ந்தார். துணிந்து நின்று ஒரு சாதாரண சிப்பாயின் கொடிய செயலை விமர்சிகக்க கூட ஜே. ஆர் ஜெயவர்த்தனாவிற்கு துணிவு இருக்கவில்லை.

அத்துணை தூரம் சிங்களப் பௌத்த பேரினவாதத்திற்கு அவர் பயந்தார். அல்லது அக்கொலையிலே தான் தனது எதிர்கால அரசியல் வெற்றிகள் தங்கியிருக்கின்றதென நம்பினார். சிறையிலே போடப்பட்ட இந்தச் சிப்பாய் தேசிய வீரனாக போற்றப்பட்டுத் தண்டனைக் காலத்திற்கு முன்பே சிறிலங்கா அரசால் விடுவிக்கப்பட்டான்.

இந்த ஒன்றே இலங்கை இந்தியா உடன்படிக்கையின் அர்த்த மற்ற தன்மைக்கும் இந்தியாவின் மீது இலங்கை அரசு வைத்திருந்த மதிப்புக்கும் ஒரு வெளிப்படையான சான்றாகும்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைந்த ஒரு மாகாணசபை ஒரு முதலமைச்சரின் கீழ் அமைக்கப்படும் என உடன்படிக்கை உறுதியுரைத்தது. ஆனால் 1988-12-31 இதற்கிடையில். கிழக்கு மாகாண வாக்காளரிடமிருந்து எடுக்கப்படும் பொதுமக்கள் வாக்கெடுப்பு மூலம் வட மாகாணமும். கிழக்கு மாகாணமும் இணைந்திருப்பதா பிரிந்து போய் இரண்டு மாகாண சபைகள் ஆவதா என்ற தீர்மானம் எடுக்கப்படும் என்ற வரைமுறையையும் உடன்படிக்கை விதித்தது. தமிழர் தாயகத்தில் நிலையான நிரந்தரமான இணைப்புக்கு ஜே.ஆர் ஜெயவர்த்தனா வைத்த தந்திரமான ஆப்புத்தான் இந்தக் கட்டுப்பாடு. விடுதலைப் போராட்டத்தில் பல ஆயிரக் கணக்கான உயிர். உடமை வாழ்வியல் இழப்புக்களை எதிர் கொண்ட தமிழர்களுக்கு இந்த நச்சுத் திட்டத்தில் எதிர்காலத்தில் வியப்பென்ன இருக்கிறது.?



ராஜீவ் இலங்கை சென்றபோது இராணுவத்தினர் அவருக்கு அணிவகுப்பு மரியாதை கொடுத்தார்கள். அப்போது சிப்பாய் ஒருவன் ராஜீவை துப்பாக்கியால் அடித்தான்.

இந்த உடன்படிக்கையைச் சிங்களப் பேரினவாதமும் எதிர்க்கத்தான் செய்தது, ஆனால் முற்றிலும் மாறுபட்ட இன்னொரு கோணத்திலிருந்து வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபை இருக்கக் கூடாது என்பது தான் சிங்களப் பேரினவாதத்தின் வாதமாக இருந்தது. இந்த இணைப்புப் பற்றிய சிங்களவர் மனப்பாங்கு எப்படி இருந்தது என்பதை அவர்களது எதிர்ப்பு நன்கு விளக்கியது. அவர்களை திருப்திப்படுத்த ஜே. ஆர் ஜெயவர்த்தனா என்ன செய்தார் என்பதிலே அவரது ஏமாற்றத்தனம் நன்கு விளங்கும்.

1987ஆகஸ்ட் மாதம் 6ம் நாள் சிங்கள மக்களுக்கு ஜே.ஆர் ஜெயவர்த்தனா உரையாற்றினார். பிரிவினை கேட்போரை இந்தியாவிலிருந்து வெளியேற்ற இந்தியா சம்மதிக்கிறது.

பயங்கரவாதிகளை ஆதரித்துப் பிரச்சாரம் செய்வோரையும், பயங்கரவாதத்தைப் பேசி அதைச் செய்வோரையும் இந்தியா தனது மண்ணிலிருந்து வெளியேற்றும். சிறிலங்காவோடு ஆயுதரீதியில் மோத, இந்தியாவிலிருந்து ஆயுதங்கள் தடுக்க எங்கள் கடற்கரையோடு சேர்ந்து ஒரு கண்காணிப்பு வலயத்தை உருவாக்கவும், துணையாக செயற்படவும் இந்தியா சம்மதிக்கிறது.

வடக்குக் கிழக்கில் சட்ட ஒழுங்கைப் பேணவும். பயங்கரவாதிகள் சமாதானத்திற்கு வரவும், ஆயுதம் சுமந்து திரியாமல் பார்க்கவும். எனக்கு உதவுவதாகவும் இந்தியா சம்மதிக்கிறது. இதனால் தான் இந்தியப்படையை இங்கு நான் வரவழைத்தேன். இந்தியப்படை எனது பணிப்பின் கீழேதான் இயங்கும். உங்கள் வீட்டுக்கு திரும்பிப் போய் விடுங்கள் என்று நான் சொன்னால் அவர்கள் போய் விடுவார்கள்.

இந்தியாவிற்கும், இந்தியப்படைக்கும் உடன்படிக்கைக்கும் ஜே. ஆர் ஜெயவர்த்தனா எவ்வளவு மதிப்புக் கொடுத்தார் என்பதை அவரது பேச்சு நன்கு புலப்படுத்தும். எத்தகைய ஒருமைப்பாடுகளை இந்தியா அரசு சிறிலங்காடு செய்திருந்தது என்பதை ஜே. ஆர் ஜெயவர்த்தனாவின் வார்த்தைகள் மிகத் தெளிவாகச் சொல்லின.

வடக்குக் கிழக்கு மாகாண இணைப்பைபற்றி ஜே. ஆர் சிங்கள மக்களுக்குச் சொன்ன வார்த்தைகள். இலங்கை இந்திய உடன்படிக்கை தமிழர்களின் விடுதலை அவாவைத் தீர்க்கப் போவதில்லை என்பதை வெளிப்படையாகக் காட்டியது.

(ஏமாற்றம் தொடரும்.)




# 'நம்மைப்பிடித்த பிசாசுகள் போகட்டும்'

"யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்பது எங்கள் தமிழ்மொழியில் எழுதப்பட்ட பண்டைய இலக்கிய வாசக சங்கத்தமிழ் புலவன் கனியன் பூங்குன்றன் எழுத்தில் எழுந்த உலகளாவிய தத்துவம்.

குண்டுச் சட்டிக்குள் குதிரை விட நினைக்கும் ஒரு சில வக்கிர மனப்பான்மை பிடித்தோருக்கு எதிராக எழுந்த வாசகம் இது. ஆமாம், நாம் போகுமிடமெல்லாம் எமது ஊர், எல்லோரும் எம் உறவினர் என சொந்தம் கொண்டாடி மனதை அகலமாகத்திறந்து காட்டியவர் எம் முன்னோர்.

ஆனால் எமது சமூகம் "பொருள்" முதற் சிந்தனையினால் போகுமிடமெல்லாம் உறவுகளைப் பலப்படுத்துவதற்குப் பதிலாக சுரண்டும் குணம் கொண்டமை ஒரு துர்ப்பாக்கிய நிலைமையே. ஆனால் அதேவேளையில் வந்தாரை வாழவைத்து வான்புகழ் கொண்ட பிரதேசங்களாக எங்கள் பிரதேசங்களும் வரலாற்றில் பதிவு பெற்றிருக்கின்றன. எனினும் தனிப்பட்ட ஒரு சிலரின் வக்கிர மனப்பான்மைக்கு முழுச் சமூகமும் பலிக்கடா ஆக்கப்படுவது எத்துணை நியாயம்?

எங்கள் பிரதேசங்கள் தவிர்க்க முடியாத வரலாற்றுப் போக்கினால் சமமான பொருளாதார முன்னேற்றங்களைப் பெற முடியாமற் போனது உண்மையே. அதனை சரிக் கட்டுவதற்கு ஏற்ற உபாயங்களையே இளந்தலைமுறை தெரிவு செய்யவேண்டும். அதை விடுத்து "வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல" மேலும் மேலும் பாதிக்கப்பட்டுள்ள சமூகத்தை இன்னும் சிக்கலுக்குள் மாட்டுவது நியாயமே இல்லை.

இதில் காணப்படும் விநோதம் என்னவென்றால் நல்வழிகாட்ட வேண்டிய கல்விச் சமூகமே சுயநலங்களுக்கு ஆட்பட்டு மாணவர்களையும், சமூகத்தையும் தவறான பாதையிலே வழிகாட்டப் புறப்பட்டமை தான். உயர்கல்வி நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் நியமனங்களோ, அரச அலுவலங்களில் செய்யப்படும் ஆட்சேர்ப்புகளோ திறமை அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படவேண்டும். திறமையை ஒரு புறம் வைத்துவிட்டு, வேறு வாதங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது குறிப்பிட்ட சமூகத்தையே அதல பாதாளத்திற்கு இட்டுச் சென்று விடும். ஊர்ப்பற்று என்பது அதன் வளர்ச்சியின்மைக்கு வித்திடக்கூடாது.

சமமற்ற அபிவிருத்தி காணப்படும் பிரதேசங்களை விசேட திட்டங்களின் அடிப்படையில் முன்னேற்றுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்னுரிமை கொடுத்து முயற்சி செய்யவேண்டியது காலத்தின் கட்டாயம். எமக்குள் தேவையற்ற விதத்தில் வேறுபாடுகளையும் சந்தேகங்களையும் வளர்ப்பதை விடுத்து வேற்றுமையில் ஒற்றுமை காணவேண்டும்.

பல்பண்பாட்டுத்தளத்தில் எப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்யவேண்டும் எல்லோருக்கும் அரசியல் உரிமை, எல்லோருக்கும் கல்வி, எல்லோருக்கும் வாய்ப்பு என்ற அடிப்படையில் எமது திட்டங்களை நாம் மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் நல்ல விழுமியங்களைக் கொண்ட சமூகத்தைத் தக்கவைக்க முடியும்.

இலங்கைத் திருநாட்டின் வடக்கு, கிழக்கு பிரதேசம் எமது மக்களின் தாயகமாகக் கொள்ளப்படுகிறது. இங்கு தமிழர்களுடன் தமிழ்பேசும் முஸ்லிம்களும், சிங்களவர்களும் வாழ்கின்றார்கள். இங்கு பல்பண்பாட்டு அடிப்படையில் ஒரு மாநில சுயாட்சி, அமையும் போது சகல தரப்பினரையும் வாழ்விக்கும் அரசியல் சூழ்நிலை அமையும் என திடமாக நம்பலாம். சிங்கள ஒற்றையாட்சித் தத்துவத்திற்கே முன்னுதாரணமாக எமது மாநில அரசியல் அமைப்பு அமைவது வரவேற்கத்தக்கது. அப்போது தான், பல்வேறு இன்னல்களுக்கிடையில் நமது அரசியல் உரிமையை நிலை நிறுத்தப்பாடுபட்டுவரும் தமிழர்களின் அபிலாசைகளும் நிறைவேறும். வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியின் நிலைமை மாறக்கூடாது. மாறவும் விடக்கூடாது. எம் மக்கள் பரந்துபட்டு சிந்திக்கிறார்கள் என்பதை தேர்தல் முடிவுகள் சுட்டுகின்றன. எத்தனை துன்பம் வந்த போதும் தாம் கொண்ட இலக்கில் மக்கள் மாறவில்லை என்பது புலனாகிறது.

நாம் எடுத்துக்கொண்ட இலக்கில் பயணிக்க யாவரும் முன்வரவேண்டும். வெறும் தனிப்பட்ட குரோதங்களுக்காக எமது இனத்தை அடகு வைக்கும் அவல நிகழ்வுகள் காலந்தோறும் அரங்கேற்றப்

பேராயிரவர்

பட்டே வந்திருக்கின்றன. இதற்கு அபிவிருத்தி என்ற முகமூடி பூணுபவர்கள் காலத்திற்கு காலம் தோன்றி வந்துள்ளார்கள். எந்த அபிவிருத்தி நோக்கமும் எமது அரசியல் உரிமையை விற்று ஏற்படுவதில் அர்த்தமில்லை

**"கண்ணீர் விட்டோ வளர்த்தோம் -**
**சர்வேசா கருகத்திருவுளமோ?"**

என்று பாரதியார் சுதந்திரப்பயிரைக் காக்க பாடிய பாடலை நாம் அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும். எத்தனை உயிர்கள், எத்தனை மனித உறவுகள் காணிக்கையாக்கப்பட்டுவிட்டன. எத்தனை ஊர்களை இழந்தோம், எம் தலை முறைகளை இழந்தோம்! புலம்பெயர் நாடுகளில் வாழப்புறப்பட்ட எம்மவரின் சந்ததிகளையும் நாம் இழந்துள்ளோமே! அவர்கள் எல்லாம் எம் தமிழ்மொழியை விட்டு வெகுதூரம் போய்விட்டார்கள். இத்தனை இழப்புகள் எல்லாம் எதற்காக? நாம் வாழ்ந்த வீடு, மனை, வாசல், முற்றம், தோட்டம், துரவு, வயல், வீசியவலை, இழுத்த படகு எல்லாம் இழந்து வாழ்வைத் தொலைத்தவர்கள் எத்தனை பேர்? இவையெல்லாம் வெறுமனே அபிவிருத்தி எனும் பொய்மனுக்கள்தானா? எம்மண்ணில் எமக்குக் கிடைக்கும் அரசியல் சுதந்திரத்தின் மூலம் எமது பிரதேசத்தை நாமே கட்டி வளர்க்கலாம். மாற்றானை நம்பி எம் வயிற்றை வளர்க்க வேண்டுமா?

கைக்கு வரும் முன்னே நெய்க்கு விலை பேசல் என்பது போல இன்னும் கடக்க வேண்டிய இலக்குவரும் வரை எம்மை நாமே காட்டிக் கொடுப்போமா? "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் தேசிய ஒருமைப்பாடு என்பது தவிர்க்க முடியாத யதார்த்தம்.

இன விடுதலையூடு சாதி, சமய, வர்க்க வேறுபாடுகளைக் கலைத்தே எமது பயணம் நடைபோடுகிறது. இக்கட்டத்தில் பேராசிரியர் சி. மௌனகுருவின் நாடகங்கள் தான் இங்கே நினைவுக்கு வருகின்றன. பிரதேச வாதம் பேசும் அரக்கனை வெட்டிச் சாய்க்கும் 'சங்காரம்', 'நம்மைப் பிடித்த பிசாசுகள்' என்பனவே அந்த நாடகங்கள். ஆமாம்..

**"நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின**
**நன்மை கண்டோமென்று கும்மியபடி"**

என்று பாடுகிறார் பாரதியார் ஒடுக்கப்பட்டு போயுள்ள எமது அரசியல், அநாதை வாழ்வு மாற்றப்படும் வரை எமது திரண்ட ஒற்றுமை உணர்வை குறுகிய சுயநல வாதங்களுக்கு அப்பாற்பட்டு வெளிப்படுத்துவோம். எமக்குரிய பண்பாட்டு விழுமியங்களை மேம்படுத்துவோம்! தேசிய ஒற்றுமையில் எம் தமிழ் வாழ்வின் சிறப்பை உலகிற்கு உணர்த்துவோம்.

# இலக்கிய சங்கமம்

## வில்லியம் ஃபாக்னரின் சீற்றமும் ஒலமும்

**வி**ல்லியம் ஃபாக்னர் நவீன அமெரிக்கா நாவலாசிரியர்களில் மிக உயர்ந்த இடத்தைப் பெறுபவர். இலக்கியத்திற்கான நோபல் பரிசு 1950ம் ஆண்டு ஃபாக்னருக்கு வழங்கப்பட்டது. 10 நாவல்களையும், ஒரு சிறுகதைத் தொகுப்பையும் எழுதியிருக்கிறார். முதல் உலகப் போரின் போது Royal Air Force ல் விமான ஓட்டுனராகப் பணியாற்றினார். எழுத்தின் மூலம் பணம் வருவது தட்டுப்பட்டபோது. ஹாலிவுட்டில் எம்.ஜி.எம். நிறுவனத்திற்கு ஸ்கிரிப்ட் எழுதினார். சினிமாவிற்காக அவர் செய்த வேலைகள்அவரின் இலக்கியத் தரத்தைப் பாதிக்கவில்லை. விமானம் ஓட்டுதல், வீடுகளுக்கு வர்ணம் பூசுதல், படகு ஓட்டுதல் போன்ற தொழில்களைச் செய்து, தனக்கு வேண்டிய சிறிது விஸ்கி, புகையிலை, எழுதுதாள்கள் உணவு ஆகியவற்றைப் பெறுவதற்கான பணத்தைச் சம்பாதித்துக் கொண்டார்.

"சீற்றமும் ஒலமும்" 1929 ம் ஆண்டு ஜோனாதன் கேப் என்ற வெளியீட்டு நிறுவனத்தால் அமெரிக்காவில் வெளியிடப்பட்டது. இதை உல்கத்து நாவல் வரிசையில் வைக்கலாம். மனித வாழ்க்கையானது அடிப்படையில் அர்த்தமற்றது என்பதை நினைவூட்டும் வகையில் ஃபாக்னர் இந்த தலைப்பைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். ஷேக்ஸ்பியரின் நாடகமான மேக்பேத்இல் மேக்பேத் இறுதிப் போருக்கு புறப்படும் தருவாயில் அவன் மனைவியின் இறப்புச் செய்தி வருகிறது. அப்போது மேக்பெத் பேசுகிற வரிகள்.

"வாழ்க்கை... ஓலமும் சீற்றமுமாய்
ஒரு மடையனால் சொல்லப்பட்ட, எதையுமே அர்த்தப்படுத்தாத கதையாகும்"

இந்த நாவலில் காலக்கிரமம் பிரக்ஞாபூர்வமாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது. நாவலை அணுகும் வழிகள் பின்னலிட்டுக் கிடக்கின்றன. ஏப்ரல் 1928 என்ற அத்தியாயம் பிறப்பிலேயே மடயனான பென்ஜி இன் பார்வையில் சொல்லப்படுகிறது.

பென்ஜிக்கு கடந்த காலத்தையும், நிகழ் காலத்தையும் பிரித்துப் பார்க்கத் தெரியாது. அவனைப் பொறுத்தவரை எல்லாமே இந்த சகுணத்தில்தான் நடக்கிறது. பென்ஜிக்கு பேசத் தெரியாது. முனகத் தெரியும், ஓலமிடத் தெரியும், சுமத்தாக இருக்கத் தெரியும். பென்ஜின் மடையன் பார்வையில் இருந்து கதை சொல்லப்படுவதால் விவரணையில் அறிவார்ந்த ஒழுங்கு காணப்படுவதில்லை.நடக்கும் நிகழ்ச்சிகள் ஏன் நடக்கின்றன என்ற காரணமும் தரப்படுவதில்லை. 33 வயதாகும் பென்ஜிக்கு 5 வயதுக் குழந்தையின் மனவளர்ச்சிதான் இருக்கிறது. பென்ஜிக்கு பிடித்தது அவனது சகோதரி Caddy, நெருப்பு வெளிச்சம், நல்லது கெட்டது தெரியாதவனாய் இருப்பது மட்டுமன்றி அவற்றிற்கு அப்பாற்பட்டவனாகவும் பென்ஜி சித்தரிக்கப்படுகிறான். அவனது 13 வயதில், இனிமேலும் சகோதரி Caddy யுடன் சேர்ந்து உறங்கக் கூடாது என்று பெரியவர்கள் பென்ஜிலை தனியாக உறங்க வைத்தார்கள். Caddy இன் அன்பும் பிரிவும் அவனை வெகுவாக பாதிக்கின்றன. எப்போதும் மரங்களின் வாசனையுடன் இனைந்தே Caddyயை உணர்கிறான்.

**Caddy கறைபடுவதை தன்னால் தடுக்க இயலாத குற்ற உணர்வினால் க்வென்டின் தற்கொலை செய்து கொள்கிறான். தன் கைக் கடிகாரத்தின் முட்களை ஒடித்து விட்டு தன் தற்கொலை தினத்தை தொடங்கிய போதிலும்,**

முதன் முதலில் சென்ட் போட்டு கொண்ட போது பென்ஜி கத்தி கலவரம் செய்கிறான். Caddy தன் உடலை கழுவிக் கொண்டு வந்த பிறகே சமாதானமாகிறான். இன்னொரு முறை வேறு இளைஞனிடம் அவளது கன்னித் தன்மையை இழந்து விட்டு வரும் போது அவள் மீதிருந்து வரும் வாசனையை வைத்து பென்ஜி கண்டுபிடித்து கத்துகிறான். அவனது தந்தை இறப்பையும் கூட முன்கூட்டியே தனது நாசியால் உணர்ந்து விடுகிறான்.

ஜீன் (இரண்டு 1910) காம்ப்சன் குடும்பத்து மூத்த பிள்ளை க்வென்டின் பத்தொன்பதாவது வயதில் ஹார்வர்டுகல் பல்கலைக் கழத்தில் படித்துக் கொண்டிருக்கும் போது தற்கொலை செய்து கொள்கிறான். பென்ஜியைப் போலவே க்வென்டினும் Caddy யுடன் ஆழ்ந்த பிணைப்புக் கொண்டவன். ஆனால் பென்ஜியைப் போலன்றி அறிவு கூர்மை வாய்ந்தவன். கடந்து போன நிகழ்ச்சிகளை நடப்பு நிகழ்ச்சிகளுடன் பிணைத்தே க்வென்டின் பார்க்கிறான். இதன் காரணமாக இவன் கதை சொல்லும் அத்தியாயமும் சிக்கலாகவே இருக்கிறது. க்வென்டின் தற்கொலை செய்து கொள்ளும் நாளில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் ஏதும் நடக்கவில்லை என்றாலும் அவன் நினைவுகளின் ஊடாக காம்ப்சன் குடும்பத்துச் சரித்திரம் நமக்குத் தெரிவிக்கப்படுகிறது. பெரியவளாகி, கல்யாணமாகி, காம்ப்சன் வீட்டை விட்டு Caddy போய் விடுவது பென்ஜியை ஒரு வகையில் பாதிக்கிறது. Caddy கண்ட இளைஞர்களுடன் சுற்றுவதை க்வென்டினால் சகிக்க முடிவதில்லை. அவளது கன்னித்தன்மை இழப்பு, காம்ப்சன் குடும்பத்திற்கு ஏற்பட்ட அவமானம் என்பதை விட க்வென்டினின் ஈகோவின் மீது படிந்து விடுகிற கறையாகிவிடுகிறது.

Caddy கறைபடுவதை தன்னால் தடுக்க இயலாத குற்ற உணர்வினால் க்வென்டின் தற் கொலை செய்து கொள்கிறான். தன் கைக் கடிகாரத்தின் முட்களை ஒடித்து விட்டு தன் தற்கொலை தினத்தை தொடங்கிய போதிலும், க்வென்டினால் சப்தமற்று ஓடிக் கொண்டிருக்கும் காலத்தை நிறுத்த முடிய வில்லை. ஏப்ரல் பதினாறு 1928. இந்த அத்தியாயம் ஜேசனின் பார்வையில் சொல்லப்பட்டிருக்கிறது. காம்ப்சன் குடும்பத்தில் க்வென்டினுக்கு அடுத்தவன் ஜேசன். ஸ்வாதீனமானவன் மனோதிடம் வாய்ந்தவன், எனினும் பாக்னரின் பாத்திரங்களிலேயே மிகக் கீழ்மையான வகையில் சித்தரிக்கப்பட்டிருப்பவன். குடும்ப மானம் கருதி Caddy காப்சனின் வீட்டிற்கு வர தடை விதிக்கப்படுகிறாள்.

Caddy இன் மகளான மிஸ் மாத்திரம் காம்ப்சன் வீட்டில் வளர்ந்து வருகிறாள். Caddy இன் முக்கால்வாசி இயல்புகளைக் கொண்டிருக்கிறார் மிஸ். மகளுக்காக Caddy ரகசியமாக அனுப்பும் பணத்தினை ஜேசன் தானே வைத்துக் கொள்கிறான். காம்ப்சன் வீட்டு நீக்ரோ வேலைக்காரியின் மகன் நடமாடும் சர்க்கஸுக்கு போவதற்கு சில்லறை காசு கேட்கிறான். சர்க்கஸ் செல்ல தான் வைத்திருக்கும் சீசன் டிக்கட்டை நீக்ரோப் பையனிடம் காட்டிவிட்டு, இரக்கமின்றி கிழித்துப் போடுகிறான் ஜேசன்.

வருட, கால ஒழுக்கத்தினை வைத்து மனிதன் தனது இருத்தலுக்கான அர்த்தத்தை உருவாக்குகிறான். ஃபாக்னர் இந்த கால ஒழுங்கினை உடைப்பதன் மூலம் நவீன மனிதனின் பிரக்ஞையை உருவாக்குகிறார். மூன்று முறை படித்த பிறகும் ஃபாக்னரின் எழுத்துக்கள் புரியவில்லை என்ற புகார் வாசகர்களிடமிருந்து வந்த போது ஃபாக்னர் அவரது நாவல்களை நான்காம் முறை படியுங்கள் என்றார்.

S. செல்வி, கொழும்பு.

## நூல் விமர்சனம்



### ஈழ எழுத்தாளர் புரட்சி பாலனின்
# புதுமைக்கதைகள்

ஈழத்து எழுத்தாளரான கவிஞர் புரட்சி பாலனுடைய புதுமைக் கதைகள் என்னும் நூல் மெய்யாகவே புதுமையாகத்தான் இருக்கிறது. இந் நூலில் மொத்தமாக பதினைந்து சிறு கதைகள் உள்ளடக்கப்படுகின்றது. அவை மன்னிப்பு, பூ, ஊர்மறிப்பு, பொய், அம்ணிக்குஞ்சு, தண்ணி பவுஸர், றவுண்டப், காட்டு ராஜ்ஜியம், கிணறு, மனிதன், சரடு, வலை, மனமாற்றம், நன்றி கெட்டவன் போன்ற தலைப்புகளில் கதைகள் இடம் பெற்றுள்ளன.

இங்கு இடம் பெற்றுள்ள ஒவ்வொரு கதைகளும் ஒவ்வொரு விதமான தன்மையில் அமைந்துள்ளன. கதைகள் எழுதப்பட்ட காலத்தினை சில கதைகள் மிகத் தெளிவாகக் கூறுவதோடு கதைகளின் பாத்திரங்கள் வாழ்வியலோடு ஒட்டிய உணர்வு பூர்வமான பாத்திரங்களாக ஆசிரியர் அமைத்திருக்கிறார்.

இன்நூலில் கூறப்பட்டிருக்கின்ற தண்ணி பவுசர் என்கின்ற கதையானது வாசிக்கும் போது வாசகர்களின் இதயத்தைத் தொடுகின்றது. அந்த ஊர் மக்கள் தண்ணீருக்காக எப்படி யெல்லாம் கஸ்ரப்படுகின்றார்கள் சாப்பிட்டுவிட்டு கோப்பை கழுவக்கூடி தண்ணீர் இல்லாத நிலை, கஸ்ரப்பட்டு தண்ணிபவுசர்காரனோடு சண்டையிட்டுப் பின் வீட்டின் அருகிலேயே அவன் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்த போது சந்தோஷப்பட்ட அந்த வீட்டுத் தலைவி அத்தண்ணீர் பவுஷரில் தனது குழந்தை நெரிபட்டு இறந்த போது உறைந்து விடுகிறாள்.




"பூ" என்கின்ற கதையிலே இடம் பெறுகின்ற "பூமணி" என்கின்ற சிறுமியும் அவள் கடவுளுக்கு வைப்பதற்காக பூத்தேடுவதும் அந்த பூப்பறிக்கும் முயற்சியில் கெட்ட காற்றினால் நோய்ப்பட்டு அவள் இறந்து விடுவதும் நெஞ்சத்தைக் கரைத்து விடு கிறது. இக்கதையில் வருகின்ற ஒரு பகுதி :

"புள்ள...புள்ள...." பண்டாரிக் கிழவரின் கையிலிருந்த பூக்கூடையிலேயே விழியைப் பதித்திருந்த பூமணி திடுக்கிட்டு உணர்வு பெறுகிறாள்.

"என்னணை அப்பு" "கொப்புச்சி நிற்கிறாரே..?"

"அப்புவேலைக்குப் போக வெளிக்கிடுது"

அப்படியேபுள்ள அப்ப நான் போட்டு பேந்து வந்து சந்திக்கிறன்"

அப்பு சாமிக்கே பூக் கொண்டு போறியள்"

இந்த சம்பாஷனைகளைப் பார்த்தோமேயானால் ஆசிரியர் பிரதேச வழக்குகள், பேச்சு என்பனவூடாக வாசகர்களோடு மிகவும் நெருங்கியுள்ளார்.

மொத்தத்தில் பதினைந்து கதைகளும் இன்றைய காலத்தவர்கள் வாசித்தறிய வேண்டிய எதிர்காலத்திற்காகப் பாதுகாத்துப் பேண வேண்டிய ஒரு தொகுப்பே இந்த புதுமைக் கதைகள். இந்த புதுமைக் கதைகளின் அட்டைப்படம் கதைகளுக்கு ஏற்றவாறான புதுவிதமான கற்பனையில் உருவாக்கப்பட்டு புதுமைக்கதைகளுக்கு இன்னும் புதுமை சேர்ப்பனவாக அமைந்திருக்கிறது.

A. வாணிஜெயா

**தணலின் நூல்விமர்சனப் பகுதியில்**

உங்கள் நூல்களும் இடம்பெற வேண்டுமாயின் உங்கள் நூல்களின் இரண்டு பிரதிகளைச் செந்தணலிற்கு அனுப்பி வையுங்கள்

## சுவாமி விவேகானந்தர்

பாத்தும்மா ரைஹனா,
திருகோணமலை.

**வி**ண்ணில் உண்மையின் ஒலிகள் இடையறாது புரண்டுகொண்டே இருக்கின்றன. அவை நம் செவிகளில் விழுகிறதில்லை அது பூதிச்செல்வர்களும் முனிவர்களும் தபோதனர்களும் அவற்றைக் கேட்கும் பேற்றை அடைந்தவர்கள் அந்த ஒலிகள் உருவாகிக் கேட்கப்படுமாயின் அந்நாள் ஒரு புனிதமான நாளேயாகும். பிரபஞ்சமாயர் திரையின் ஓரத்தை சற்று அகற்றினாலே போதும் அதன் வழியாக ஆண்டவனது சொற்கடந்த சுடர் வெள்ளம் பாயும்.

சுவாமி விவேகானந்தரின் வரலாற்றைப் பற்றிக் கூறுவது ஆன்மீக வாழ்வைப் பற்றி அகவுயிர் வளர்ச்சியைப் பற்றி மொழிவதை ஒக்கும் நுண்ணறிவுப் போர்களும் ஆன்மீகப் துறையில் எழுந்த ஐயம் புயல்களும் சூறாவ்ளி அடித்து ஓய்ந்து அஞ்ஞான முகில்கள் யாவும் நீங்குவதால் காட்சியளிக்கும் அருட் சோதியும் சுவாமி. விவேகானந்தரின் வீரம் செறிந்த வாழ்க்கையில் இடம் பெறுகின்றன.

உயர்ந்த மனிதர் என்னும் முறையிலும் பழுத்த வேதாந்தி என்னும் வகையிலும் அவர் புலப்படுத்திய பேராண்மை நம் உள்ளத்தைக் கவராமல் போகாது. இந்த வீரர் வாழ்வில்தான் தெய்வமனைய தூய்மை தங்கி நிற்க இயலும் அவருக்கு இருந்த பெரும் நாட்டுப் பற்றுங்கூடத் தாம் கண்ட பேரறத்தின் மாசவ காட்சியின் விளைவேயாகும். ஆர்வமிக்க வான் செயல்களோடு எல்லாவற்றறையும் துறக்கும் பண்பாடும் அவரிடமே இருக்கக் காண்கின்றோம். அவருடைய வீரவாழ்க்கை புலன் கடந்த அமர வாழ்வின் குன்றச் சிறப்பை நம் முன் கொண்டு வந்து நிறுத்துகிறது.

முன்பு நரேந்திரர் என்ற அழைக்கப்பட்ட விவேகானந்தர் பல தலைமுறையாக செல்வத்துக்கும் மிகுந்த ஆற்றலுக்கும் வள்ளல் தன்மைக்கும், கல்வி செல்வத்துக்கும் சுதந்திர ஒளியை நாடும் பண்பாட்டுக்கும் புகழ் வாய்ந்த தத்தரின் கொல் குலத்தைச் சார்ந்தவர். இவருடைய பாட்டனார் துர்க்கா. கரண் துறவம் பூண்டுவிட்டார். துறவறக் குருதி நரேந்திரரின் நரம்பிலும், சதையிலும் ஓடிற்றுப் போலும் இவருடைய தந்தை விசுவநாத தத்தார் என்பவர். புவனேஸ்வரியை மணந்தார் நீண்டகாலம் பிள்ளைப்பேற்றை அடையாத இந்த மங்கையர்க்கரசி காசியில் கோயில் கொண்டிருக்கும் சிவபிரானை வழிபட்டார். ஒரு நாள் சிவபிரானே தம் இதயத்தில் புகுந்ததாகக் கனவு கண்டார். சிவனருளால் பெற்ற மகன் இவர் என்று இவர் அடியார்கள் கூறுகின்றனர்.

- தொடரும்....



# பூவையர் உலகம்

## தணலின் பூவையர் கருத்தாடல்-14

***ஒரு குடும்பத்தில் அதிகமாக உழைப்பவர்கள் ஆண்களா? பெண்களா?***



தணலின் பூவையர்களே இது பற்றிய உங்களுடைய புரட்சிக் கருத்துக்களை தணலின் கருத்தாடலுக்கு அனுப்பி வையுங்கள்.

(100 சொற்களுக்குள் உட்படுத்தி)

***தணலின் பூவையர் கருத்தாடல்***



**இல. 61, கற்குழி, வவுனியா.**
தொ.பே.இல: 011-4715168
தொலைநகல் : 011-4715168

*தணலின் பூவையர் கருத்தாடல் - 12*

# காதல் திருமணமா பேச்சுத்திருமணமா நீண்ட காலம் நிலைத்திருப்பது

குரல :-1

## காதல் திருமணமே...

**வா**ழ்க்கையில் ஊடலும் கூடலும் சேர்ந்தாற்தான் இன்பமான வாழ்வாக அமையும். இவ்வாறான வாழ்க்கையை தருவது காதல் திருமணமே தவிர பேச்சு திருமணம் என கூற முடியாது.

பெற்றோரால் நிச்சயிக்கப்படும் திருமணமானதால் கணவன் மனைவியிடையே ஒரு புரிந்துணர்வு தன்மை குறைவாகவே காணப்படும். இதனால் இவர்களிடையே ஒரு பிரச்சனை எழும்போது அது பெற்றோரை குற்றம் சாடுவதாக அமையும்.

ஒருவரை ஒருவர் காதலித்து திருமணம் செய்தால் எவ்வளவு தூரம் ஊடல் ஏற்பட்டாலும் நாம் தேடிய வாழ்வுதானே. நன்மை, தீமை இரண்டிற்கும் நாமே பொறுப்பு என ஒரு எண்ணம் நிலைத்திருக்கும் இதை விடப் புரிந்துணர்வுத் தன்மை அதிகமாகக் காணப்படும்.

இன்று பேச்சுத் திருமணம் பெரிதும் அதிகமாகவே காணப்படுகின்றது. ஆனால காதல் திருமணம்தான் எங்கும் பரவி காணப்படுகின்றது. காதல் இல்லாத இடம் இல்லை என்று கூறி விடலாம். கல்லூரி வளாகம், அலுவலக வளாகம் என எங்கும் காதல். பெரும்பாலான காதல்கள் திருமணத்தில் முடிகிறது.

எத்தனையோ பேச்சுத் திருமணங்கள் சீரழிந்து இருப்பதை நாம் கண்களூடாக காணக்கூடியதாக இருக்கிறது. உதாரணமாக, பேசப்படும் சீதனம் என்று குழப்பப்படும் பின்னர் திருமணம் நடைபெறும். இதன் பிறகு சீதனம் கேட்டு பிரிகிறது குடும்பம். எந்த ஒரு பிரச்சனை ஏற்பட்டாலும் பிரிவுதான் ஏற்படுகின்றது.

காதல் திருமணம் அப்படி இல்லை. படிப்பு, அந்தஸ்து. பணம் எதும் பாராது. ஒரு குழந்தை இல்லை என்றால் கூட பெரிதாக நினையாது. எவ்வளவு சண்டை வந்தாலும் பிரிந்து விடாது.

எனவே திருமணங்களில் எவ்வளவு பிரச்சனை எழுந்தாலும் அதனை சமாளித்து நீண்ட காலம் நிலைத்திருந்து சந்தோசமாக வாழும். வாழவைக்கும் திருமணம் காதல் திருமணம் தான்.

**யோ. ஹேமலதா, கரவெட்டி.**

## பேச்சுத் திருமணமே...

குரல் :-2

**`அன்பும் அறனும் உடைத்தாயின்**
**இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது``**

திருமணமான ஓர் ஆணும் பெண்ணும் அவர்களுடைய பெற்றோர்களுடனும், குழந்தைகளுடனும் சேர்ந்து வாழும் அமைப்பைக் குடும்பம் என்கின்றோம்.

அக்குடும்பம் அன்பு மயமானதாக வாழ், வாழவிடு என்ற வனப்பான தத்தவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைத்தல் வேண்டும். இச் சூழ்நிலைகளில் பேச்சு திருமணங்களே உகந்ததாக நிலைத்திருக்கின்றது.

குடும்பம் என்ற கோவில் அழியாமல் சந்தோசமாக நிலைத்திருக்க பல பலங்கள் அவசியமாகின்றன. உறவுப் பலம், பொருளாதாரப் பலம், சமூகப்பலம் என்பன அவற்றில் முக்கியமானவையாகும். காதல் திருமணங்கள் பலவற்றில் இப்பலங்கள் கவனத்திற் கொள்ளப்படுவதில்லை.

'பசி வந்தால் காதல் ஜன்னலுக்கு வெளியே' என்றார்கள். பொருளாதாரப் பலம் இன்மையால் பல குடும்பங்கள் சீரழிந்து போவதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம். குடும்பத்திலே ஏற்படும் பொருளாதாரப் பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாது திண்டாடும்போது கணவன் மனைவிகளுக்கிடையில் முரண்பாடுகள் தோன்றுகின்றன. அப்போது குடும்பத்தின் முதியோரின் ஆலோசனை வழிகாட்டலோ, பொருளாதார உதவியோ அவசரம் தேவைப்படுகின்றது. இதனை எச்சந்தர்ப்பத்திலும் இருபாலாரும் உணர்வர்.

அப்போதுதான் பெற்றோரின் அருமையும் புலப்படும். பிறந்தது முதல் உணவு, உடை ஆரோக்கியம், கல்வி, அழகுபடுத்தல் யாவற்றிலுமே அக்கறையுடன் பார்த்துப் பார்த்துச் செயற்படும் பெற்றோர்கள் திருமண விடயத்தில் பிழை விடுவார்களா? தம்பிள்ளைகளுக்கு நல்ல மனைவியோ, அல்லது நல்ல கணவனோ அமைய வேண்டுமென அவர்கள் எவ்வளவு பிரயத்தனப்படுவார்கள் செயற்படுவார்கள்.

உத்தியோகம் பார்க்கும் ஆண்கள் பெண்கள் கூட பணபலம் மட்டுமே இருப்பதை நம்பி காதல் திருமணம் செய்கின்றார்கள். அவர்கள் வாழ்க்கையில் உறவுப்பலம், சமூகப்பலம், என்பன குறைவடைந்து முரண்பாடுகள் தோன்றி வாழ்க்கை முறிவடைகின்றது. மனித வாழ்க்கையின் முக்கியமான இலட்சியமே மகிழ்ச்சியாக வாழ்வது தான். மனிதன் சிந்தனை, செயல், உழைப்பு அனைத்துமே மகிழ்ச்சியாகத் வாழ்வதற்குத்தான். அந்த மகிழ்ச்சி நிலைத்திருக்கும். சலனமற்ற அமைதி இருக்க வேண்டும். பேச்சுத் திருமணங்களிலேயே இவ்வமைதி நிலைத்திருக்கின்றது. தகுதிக்கு மீறிய தேவையற்ற ஆசைகள் வராது. உறவுப்பலத்தால் பிச்சனைகளைச் சந்திக்கின்ற துணிவு பிறக்கின்றது. மன ஆரோக்கியம் வளமாக இருக்கின்றது. அமைதி. அன்பு, அறிவு, இன்பம் ஆகிய யாவும் முழுமையாக அமைவதுதான் உண்மையான மகிழ்ச்சி. இது பேச்சுத்திருமணங்களிலேயே முழுமையாகக் கிடைக்கின்றது. குடும்பத்திலுள்ள முதியோரின் ஆலோசனைகளைக் கேட்டல், அவர்களுடைய உதவிகளைப் பெறல், எப்போதும் தேவையானது ஆனுபவம் பெற்றவர்களின் ஆலோசனைகள் பெறுமதிமிக்கவை.

சமுதாயம் என்பது பல குடும்பங்களைக் கொண்டது. குடும்பம் என்பது பல உறுப்பினர்களைக் கொண்டது. ஒரு குடும்பத்தில் இருக்கின்றவர்கள் சுய நலக் குழுக்களாக தனி மனிதனாக வாழ முடியாது. எனவே ஒற்றுமைப்பலம் ஓங்கப் பேச்சுத் திருமணமே உகந்தது.

**திருமதி. A. மரினா ஜெசி**

# நம்முடைய தோல்விக்கு காரணம் நாமே

**தொகுப்பு: லஜப்ரதா**

**க**ண்ணை விற்று ஓவியம் வாங்குவது என்பார்கள். நாம் பார்த்து அனுபவிக்கத் தானே ஓவியம் வாங்குகின்றோம். அப்படியிருக்க கண்ணை விற்று ஓவியம் வாங்கி என்ன பயன்.

நாம் எல்லோரும் எமது வாழ்க்கையை மகிழ்ச்சியாக அனுபவிக்கத் தானே உழைக்கின்றோம். செயல்படுகின்றோம். இப்படியிருக்கும் போது நம்முடைய வாழ்க்கையை நாமே இருட்டாக்கிக் கொள்ளும் வ்கையில் நாம் தவறானதாக வைத்துக் கொள்ள வேண்டுமா? நம்மில் எல்லோரும் வாழ்க்கையில் முன்னேறி வசதிகளை அனுபவித்து அதன் மூலம் மற்றவர்களுடைய மரியாதையைப் பெற விரும்புகின்றவர்கள். இது நம் எல்லோரினதும் பொதுவான இயல்பு. ஆகவே நம்முடைய எதிர்பார்ப்புக்களும் லட்சியங்களும் சரியானவையாக இருக்க வேண்டும். இதுவே நமது வாழ்க்கையை திருப்திகரமானதாக அமைக்க நமக்கு வழிகோலுகின்றது. வெற்றி தோல்வி நம்முடைய லட்சியமாக இருக்கக் கூடாது. ஆக்க பூர்வமான செயல்பாடே லட்சியமாக இருக்க வேண்டும்.



எனவே நாம் எல்லோருடைய வெற்றியையும், தோல்வியையும் நம்முடைய எதிர்பார்ப்புக்களும், லட்சியங்களும் தான் தீர்மானிக்கின்றன. இந்த எதிர்பார்ப்பு லட்சியமும் அடைய நமது மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும். அப்படிப் பக்குவப்படுத்திக் கொண்டால் வெற்றியும் தோல்வியும் ஒருவர் செயல்படுவதை பாதிக்க முடியாது. நாம் செய்யத் துணிகின்ற ஒரு செயலின் முடிவு மகிழ்ச்சி தருவதாக இருக்கவேண்டும் என எதிர்பார்ப்பதை முதலில் தவிர்க்கவேண்டும். அடுத்தது எது சரியான உயர்ந்த உண்மையான லட்சியம் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இவை எல்லாவற்றையும் ஓரளவு கடைப்பிடித்தால் நாம் மனப்பக்குவம் அடைந்து விடுவோம். பிறகென்ன நம்முடைய வாழ்க்கை பிரகாசிக்கும்.

# தலை முதல் கால் வரை

**கோ**டை காலம் வந்தாலே நம்மில் சிலருக்கு தலைமுடி உதிருதல், சருமம் வறண்டு போதல் என்று தலைமுடி முதல் கால் நகம் வரை ஒரு பிரச்சனையாகி விடும். இவற்றிலிருந்து விடுதலை பெற்று உடல் அழகை மெருகூட்ட சில அழகுக் குறிப்புக்கள்.

**1. தலைமுடி**



மருதானியை நன்றாக அரைத்து வெயிலில் காய விட்டு சூடாக்கிய தே.எண்ணெயில் போட்டு 10 நாட்களின் பின் தலையில் தடவி வர தலைமுடி கொட்டுவது குறையும்.

சாதம் வடித்த கஞ்சியை கீழே கொட்டாமல் தலைமுடியில் நன்றாக தேய்த்து சிறிது நேரம் ஊறிய பின் அலசவும். பளபளப்பாக தலைமுடி இருக்கும்.

**2. முகம்**

ஒரு முட்டையை 01 டீஸ்பூன் தேன் கலந்து முகத்தில் பூசிகாய விட்டு கழுவினால் முகம் ஆரோக்கியமாக திகழும்.



சிறிது கசகசாவையும், வெந்தயத்தையும் பாலில் ஊற வைத்து கரகரப்பாக அரைத்து முகத்தில் நன்றாகத் தேய்த்து மசாஜ் செய்தால் கரும்புள்ளிகள் மறையும்.

**3. கண்கள்.**

தினமும் உறங்கப் போகும் போது ஓரிரு சொட்டு ஆமணக்கெண்ணையை கண்களில் விடவும். கண் இமைகள், கண்களிற்கு கீழே மசாஜ் செய்து வரவும்.



முகம் வறண்டு போகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் இது கண்களின் பொலிவை குறைத்து விடும். இதற்கு தோடம்பழசாறு கலந்த ஏதாவது கிரீமை முகத்தில் மசாஜ் செய்தால் நல்லது.

**4. உதடு**

வெயிலில் உதடு கறுத்தவர்கள் கொத்த மல்லிச்சாற்றை இரவில் பூசி வர உதட்டு நிறம் மாறும். விளக்கெண்ணையும் தடவலாம்.



உதடு வெடிப்புள்ளவர்கள் ரோஜா இதழ்களை பால் விட்டு நன்றாக அரைத்து உதடுகளில் பூசி வாருங்கள் உதட்டு வெடிப்பு ஓடி விடும்.

**5. சருமம்**

சருமத்தில் வியர்க்குரு உள்ளவர்கள் நுஸ்கின் சதைப்பகுதியை அல்லது சோற்றுக் கற்றாழையின் பகுதியினை பூசி ஊறிய பின் குளிக்கலாம்.

சருமம் உராய்ந்து கைகால்களின் இடுக்குகளில் புண் ஏற்பட்டால் கடுக்காயை அரைத்து சந்தணத்தில் குழைத்து பூசினால் வந்த புண் ஓடிவிடும்.

**6. கால்கள்**

உள்ளங்கை அதிகமாக வியர்க்கும் போது சிறிது எலும்பிச்சை சாற்றை தேய்த்து சிறிது நேரத்தின் பின் கழுவவும்.



பாலாடையையும், முட்டையின் வெண் கருவையும் இரவில் கைகால்களிர் தடவி, காலையில் பயத்த மாவில் தேய்த்துக் கழுவ கை, கால் சருமங்கள் பளிச் சென்று மிளிரும்.

**7. நகங்கள்**

கொதித்த பாலை ஆறவைத்து இளஞ் சூடாக இருக்கும் போது நனையுமாறு விரல்நுனிகளைச் சிறிது நேரம் பாலில் வைத்து பின்னர் சுத்தமான பஞ்சை கொண்டு துடைத்து விடுங்கள்.

விற்றமின் E எண்ணை, சூரியகாந்தி எண்ணை போன்றவற்றில் ஒன்றை விரல் நகங்களில் பூசி அரை மணி நேரத்திற்கு பின் கடலை மா கொண்டு சுத்தம் செய்தால் நகங்கள் பாதுகாக்கப்படும்.

**தொகுப்பு:- ஜெயம**

# கவிதைக் களம்

## இறைவன் தீர்ப்பு

பலகால் முனைந்து, படையோ டணைந்து
பகுதாத் - இராக்கின் வழியாய்
உலகோர் வெறுக்க, உறுபோர் நிறைத்து,
உயிரை வதைத்தே, இழிவாய்
நலமாய்ச் சுவைத்தீர், நரமாமிசங்கள்!
நரிகாள்! கருணை இலையா?
தலைகால் தெறிக்கத் தரைமீ திலாடும்
தறுகன் உமக்கு நிலையா!

****

சதாமின் புதல்வர் உதயும், உறுஸைனும்
சதிகா ரரும்வாய்க் கரும்போ?
வதமே புரிந்து, உடலை யரிந்தே
வதைத்தீர் உயிருந் துரும்போ?
மதமே பிடித்து, மனுவை யழித்தல்,
மனுநீ திமார்க்க வழியோ?
உதவாக் கரையும் உறவைத் துணிக்க,
உலகோ ரெழுந்தால் இழிவே!

****

மனமே மரக்க, மதியும் விறைக்க,
மனிதா பிமான மிழந்தே
கனலே பரக்கக் ககனங் கறுக்க,
கரித்தே அழிவைப் பொழிந்தீர்!
அனலே பறக்க, அரபுத் தலத்தில்
அட, நீர் புரியும் ஆர்ப்பு,
இனிமே லுமக்கு இழிவே விளைக்கும்!
இதுதான், இறையின் தீர்ப்பு!
****

கலா பவன், ஏறாவூர்-03.

## பிரிந்து போன நட்பு

களங்கமில்லாத — ஓர்
உறவு....
அதில் களங்கத்தை...
ஏற்படுத்த சிலர்
கனவு....

நீயும்..... நானும்
சேர்வதால்....
சிலருக்கு — மன
நெகிழ்வு

அதனால்....
என்னை பற்றி........
உன்னிடம் — சில
சொற்கசிவு.........

பேச்சை நம்பி..........
என்னை வெறுத்த — உன்
உறவு.......

இதனால் ஏற்பட்டது
எம் இருவருக்குமிடையில்
பிரிவு........

நீ...........
கூட என்னை
வெறுத்து விட்டதால் — என்
மனிதில்.........
பெரும் அதிர்வு...........

பி.சகிகரன்.
இலந்தகுளம், நானாட்டான்.

## முத்தம்

உன் நிழல் விழுந்த மண்ணை
முத்தமிட்ட நான்–
இன்று உன் நினைவுகள் விழுந்த
நெஞ்சை முத்தமிடுகிறேன்
என் உதிரத்தால்........

## ஆறுதல்

காயப்பட்ட என் இதயத்தின்
அழுகையை – இக்
காகிதத்தில் கவி வடித்து
ஆறுதலாக்கிறேன்.

சே.சு. நூர்தீன்
முதலியார்குளம்.

## அன்பே



நான் கரையாய்
இருந்தபோதும் - உன்
இதயமெனும் கடலுக்குள்
இடம் பிடிக்க எத்தனிக்கிறேன்
ஆனால் நீயோ?
கிழிசல்களை ஒதுக்குவதைப் போல
தினமும் என்னை
ஒதுக்கி விடுகிறாய்.
இதனால் கவலையில்லை
ஏனெனில் நீதான் தினமும்
என்னை தொட்டுச் செல்கிறாய்
என்ற சந்தோஷத்தில் - என்
இதயக் கடலுக்குள் - நான்
தினமும் மிதந்து
கொண்டிருக்கின்றேன்.
ஓர் நாள் - நீ
நிஜமாகவே என்னைப்
புரிந்துக்கொண்டு - உன்
இதயக் கடலுக்குள் என்னையும்
இழுத்துக் கொள்வாயா?

T. ஜெயா
நாகர் இலுப்பைக்குளம்.

## நிகழ்காலம்

விண்ணுக்கு அடிக்கடி
விருந்துக்குச் செல்லும்
மனித உறவுகள்...!

இன்னும் கொஞ்சம் தான்
ஆகாயத்தை அண்மித்த
அதிசய கோபுரங்கள்...!

காற்றுடன் சவால்விடும்
கடுகதி வாகனங்கள்...!

சிறுவர் கையிலும்
இன்னொரு சிணுங்கலாய்
செல்போன்கள்...!

கணவனுக்கு அதிர்ச்சி
ஹலோ சொன்னது
மனைவியா, கணனியா..?

இந்த உலகம் வேண்டாம்
இரண்டாம் உலகம் போதும்
மண்ணிற்குக் கீழும்
மற்றொரு வாழ்க்கை...!

அச்சப்பட வேண்டாம்
கத்தியில்லை கதிர்வீசல் மட்டுமே
ரத்தமில்லா சத்திர சிகிச்சை...!

வயோதிபமே இல்லை
வழித்துணைக்கு நாங்கள்
மாத்திரையும் மாற்றீடும்...!

கலை வளர்ந்தவை
நான் சொல்கிறேன்...!
கவலை தீர்ந்ததா என்றால்
நீங்கள் தான்
சொல்லவேண்டும்...!

M.A.C. சியாம்.
மன;/ எருக்கலம்பிட்டி -01.



# ஒரு மல்லிகை சிவப்பாகிறது



ஈழவாணி

உதிர்வு 4

சிரித்தாள் சிரித்தாள் அவள் சிரித்துக் கொண்டேயிருந்தாள்.

அவளுடைய அந்தச் சிரிப்பு என்னென்னமோ உணர்வுகளை ஏற்படுத்தியது. காந்தியின் மனதில், சிரிப்பு நின்றபாடில்லை, கண்கள் மேலும் விகாரமடைய சிரிப்பு ஒரு மாதிரியாகச் சென்றது.

காந்தி அவளை உலுக்கினான்.

"ஏய் ஸ்ரீ... ஸ்ரீ என்னடி, என்னடி ஸ்ரீ..." என அவதிப்பட்டாள் காந்தி, சத்திய ஸ்ரீயை இழுத்துவந்து ஒரு கதிரையில் தள்ளி அமர்த்தி விட்டுத் தானும் அமர்ந்தாள்.

"ஏய் ஸ்ரீ என்ன இது, உனக்கு நான் துரோகம் செய்வனா நான் உன்ர பிரண்டடி, ஆனா நீயிப்பிடி பிசாசு மாதிரிச் சிரிக்காத எனக்கு குலைநடுங்குது" என்றாள்.

சத்திய ஸ்ரீ என்கிற இப்போதைக்கு ஸ்ரீயான அவள் தன்னை ஆசுவாசப் படுத்தி நிமிர்ந்து உட்கார்ந்து அவள் கூற வருவதை ஆர்வமாய்க் கேட்பதைப் போல் பாவனை செய்தாள்.

அபிமான உள்ளங்களே நாம் இந்த இடத்தில் சற்று நிற்போமா?. இந்த ஸ்ரீ என்பவள் யார் என்று சற்று நோக்குவோமா.?

வெளியுலகில் நல்ல அடக்கமான பெண்ணாக நடமாடிக் கொண்டிருப்பவளே ஸ்ரீ என்கின்ற பெண், அநீதிகளையும் அக்கிரமங்களையும் பொறுக்காது சீறி எழுந்து சிலருக்கு மோகினியாகவும், சிலருக்கு எமனாகவும், தன்னை உருவெடுத்துத் திரியும் ஒரு ஆபத்தான நடமாடும் சவப்பெட்டி அவள், தனக்குப் பிடித்து விட்டாள் தனக்குள் அடக்கிவிடும் அந்த சத்தி யாவை ஒரு சிலருக்குத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

"ஸ்ரீ... ஸ்ரீ என்னடி" என அவனைப் பிடித்து உலுக்கியவள்.

"ஸ்ரீ... கான்... கானை ஆரோ கொலை செஞ்சு போட்டாங்கள்" எனக் கூறியவாறே அவளின் கைகளைப் பிடித்து மென்மையாக வருடி அவளை அணைக்க முற்பட்டாள்.

'என்ன கான்... கான கொண்டிட்டாங்களோ ஆர்... ஆர்..." என அதிர்ச்சியும் தவிப்புமாய் உணர்வினை வெளிப்படுத்தினாள்.

தொடர்ந்து காந்தி கான், ஸ்ரீ இடையிலான நெருக்கம் பாசப்பிணைப்பு எல்லாவற்றையும் பேசியும் உணர்வால் வெளிப்படுத்தியும் அவளுக்கு ஆறுதல்படுத்தி இறுதிச் சடங்கிற்குக் கூடக் காந்தி ஸ்ரீயை அழைத்துச் சென்றாள்.

பின் அங்கு ஸ்ரீயை அனுதாபத் தோடு



பார்த்தவர்கள்..........

"ர்ர்ர்.... ர்ர்ர்..." தண்ணீர் நின்று விட்டது.

சுயநினைவிற்கு வந்த சத்தியா நிமிர்ந்து பார்த்தாள். சவரில் இருந்து வழிந்து கொண்டிருந்த நீர் நின்று விட்டது.

பைப்பைத் திருகத் திருகிப் பார்த்தாள் ம்.....கூ தண்ணி வரவேயில்லை மளமள வென இருந்த ஒருவாளி தண்ணீரை தலையில் ஊற்றிக் கழுவிவிட்டு ஆயத்தமானாள்.

இன்று வெள்ளிக்கிழமை யல்லவா யுக பாண்டவர்கள் சந்திக்கிற நாள்.

சுரிதார் போட்டு நெற்றிநிறையத் திருநீரை அப்பிக் கொண்டவள், டயறியை எடுத்துப் பத்து வருட வாழ்க்கைக்கு சய (-) போட்டாள்.

பிள்ளையார் படத்திற்கு முன்பாக நின்று தலையில் குட்டித் தோப்புக் கரணம் போட்டாள். "விநாயக எங்கள் வினைகளுக்கெல்லாம் விடை உன்னிடம் தான் இருக்கிறது. நம் காரியம் சித்தி பெற உன் துணையை வேண்டுகிறேன் என வேண்டினாள்."

***

இன்ஸ்பெக்ரர் கைகளில் பத்திரிகை அவர் முகம் சோகமே உருவமாக இருந்தார். அருகில் மனைவி முவீனா

"நேரம் இரவு 10.30"

"இன்ன ரத்தி நைட்ல கூட மனசுவிட்டுப் பேசிக்க மாட்டீங்களா உங்கிட்ட சந்தோசமாக பேசி எத்தனை நாளாச்சித் தெரியுமா"

முவீனாவின் முகத்தில் சோகமும் கண்களில் ஏக்கமும் தெரிந்தது.

"ரத்தீ......" என அழைத்தவள் அதுசரி ரத்தி "மிதுண்" மேடர்கேஸ் என்ன வாயிற்று"

ரத்தீஸ் பேப்பரை அவள் முன்னால் தூக்கிப்போட்டான் பெரிய எழுத்துக்களில் முன்பக்கத்திலேயே "மிதுண் கொலை பொலிஸ் தீவிர வேட்டை என்றிருந்தது.

"ம்........ போலிஸ் வேட்டையாடுதோ இல்லையோ புண்ணியவான்கள் இப்படியான..கிருமிநாசினிகளை வேட்டையாடுகிற்து நாட்டுக்கு நல்லதே"

என்றாள் மெதுவாக

"என்ன கறகறப்பு" ரதீஸ்

இல்லப்பா மெய்யாலும் இந்த மிதுண் ரொம்ப ரவுடி, பொம்புளப் பொறுக்கியும்... என்றாள் தன் உருண்டைக் கண்களை விரித்து. அவள் அப்படிப் பாவனையுடன் பேசியதும் அவனுடைய எண்ணம், சினம் எல்லாம் கரைந்து பறந்துவிட்டது அவளை அப்படியே இறுக்கி அணைத்தபடி படுக்கை அறைக்கு அழைத்துச் செல்கிறான்.

"ட்றீங் ட்றீங் .........ட்றீங்........ட்றீங்"


"இந்த போன் ஒண்டு, மனுசர நிம்மதியா இருக்கவிடாது" எனத் திட்டிக் கொண்டே "கலோ, கலோ இன்ஸ்பெக்ரர் கிய"

"என்ன இன்ஸ்பெக்ரர் ரத்தீஸ், சுகமான நேரத்தில தொந்தரவு தர்றமா, பைத பை பாக் ரோட்டுக்கு முன் லேன்ல ரெண்டு பேர் உங்கட வருகையை எதிர் பார்த்திட்டு பிணமா போயிற்றாங்க, முடிஞ்சா காப்பாத்துங்க" மறுமுனையில் அதே பெண் குரல்.

"கலோ.........கலோ........"

போன்கட்

உதிரும்.....




## என்னால் முடியும் கண்மணி

அவசரத்தில் அறையை மூட முற்றாகவே மறந்துபோன சொனுத்தாரதேரர் துட்டகாமினியோடு மகாமஞ்ச அறைக்குள் நுழைந்தார். பதினைந்து ஆண்டுகளாக அவர் காப்பாற்றி வந்த மகா இரகசியம் ஒரு கணக் கவலையீனத்தால் முற்றாக உடைந்துவிடப்போவதை அவர் அந்த நேரத்தில் உணரவில்லை.

சுவரிலே வரையப்பட்டிருந்த சித்திரங்களின் பொருளை ஒவ்வொன்றாக துட்டகாமினிக்கு விளக்கினார். பௌத்த சிங்கள வரலாறு அதன் வருங்காலக் கனவு எல்லாவற்றையும் துட்டகாமினி நெஞ்சிலே அழுத்தமாகப் பதிக்கப்படவேண்டுமென்ற ஆவலில் முழுமூச்சாக ஈடுபட்டிருந்த சொனுத்தாரதேரர் பதினைந்து வருடங்களாகத் தன் முடிப்பிலே எப்போதும் தொங்கிகொண்டிருக்கும் திறப்பை மறந்துபோய்விட்டது ஆச்சரியமில்லைத் தான்.

அவர் சித்திரவிளக்கம் செய்துகொண்டிருந்த அதே நேரத்தில் முகத்தை மூடிய காவியுருவம் கதவின் தாளை மெல்லத் திறந்து இருட்டுக்குள் எட்டிப்பார்த்தது.

சர்ரென்று முகத்தில் மோதிப்பறந்த வெளவால்களைப் புறங்கையால் அலட்சயமாக விலக்கிவிட்டு அறைக்குள்ளே சத்தமின்றி புகுந்து அரவமின்றி கதவை மூடியது.

"பதினைந்து வருடங்களாக நான் தேடும் புதையல் கிடைக்கப்போகிறதா?..."

எதிர்பார்ப்பின் தாக்கம் உடலைச் சிலிர்க்கவைத்ததோ என்னவோ ஓரிரு முறை தலையைச் சிலுப்பிக்கொண்ட அந்த உருவம் கைக்கணத்தில் களைந்து விட அகல் விளக்கைக் கண்டுகொண்டது.

அகல் விளக்கில் தீபத்தை ஏற்றிவிட்டு, எழுந்த மெல்லிய ஒளியில் அறையைக் கண்களால் அளவிட்டது.

அறையின் ஒருமூலையில் தலைகுனிந்து ஒடுங்கி உட்கார்ந்திருந்த பெண் உருவத்தைப் பார்த்ததும் உணர்ச்சிமேலீட்டால் உடல் நடுங்கத் தொடங்கக் கொஞ்ச நேரம் அந்தப் பெண்ணையே பார்த்துக் கொண்டு அசையாமல் நின்று பிறகு மெல்ல நடந்துபோய் அதை நெருங்கி முகத்தை உற்றுப் பார்க்க திரிதிரியாய் சுருண்டுகிடந்த கேசமும் நொய்ந்த கிழிந்து தொங்கும் ஆடையும் தாகத்தால் உலர்ந்து வெடித்துக்கிடக்கும் உதட்டிலே மெல்லிய இரத்த கசிவுமாய் இருந்த அந்தப் பெண்ணின் கண்களும் திடீரென உயர்ந்து அந்த உருவத்தை ஏறிட்டன.

இருவர் பார்வையும் ஒன்றாகக் கலந்து கொஞ்ச நேரம் எவ்வித அசைவுமில்லாத எழுதுசித்திர நிலைக்குச் சென்றிருந்தன.

கால்விலங்கிடப்பட்ட அந்தப்பெண் சற்றே அசைந்ததால், இரவின் மௌனத்தை கலைத்து எழுந்த 'சலிங்' என்று ஓசையின் எதிரொலியில் சங்கடத்துக்குள்ளான வெளவால்கள் மீண்டும் திசை தெரியாமலோ என்னவோ அவள் மீதும், காவியால் தன்னை முடிய உருவத்தின் மீதும் மோதி மோதித் தெறிக்கத் தொடங்க...

அவள் வாயைத்திறந்தாள்.

"முடியாது... உன்னால் முடியாது..."

காவியுருவம் அவளையே பார்த்துக் கொண்டு நின்றது. அதன் கண்ணோரங்களில் உப்புப்படிவங்கள் பூக்கத்தொடங்கின. மஞ்சூறிக்கா தேசத்தின் மலர் வனங்கள்... அருவிக்கரைகள்... மொட்டைக்கல்லின் கீழே மூசிக்கொண்டாடும் கரையுடைந்த காட்டாறு... இவையெல்லாம் கண்ணுக்குள் வண்ணப்பூச்சிகளாகப் படபடக்க...

"முடியும் கண்ணே... என்னால் முடியும்..." என்று ஒவ்வொரு வார்த்தைகளாக அழுத்திச்சொன்னது.


காவியுருவத்தின் வாயிலிருந்து உதிர்ந்த அந்தச் சொற்கள் என்ன மந்திர வித்தையைச் செய்தனவோ அந்தப் பெண்ணின் உடல் மின்னதிர்வோடு ஒருமுறை குலுங்கி நின்றது.

ஏதோ சொல்ல அவள் வாயசைக்க வார்த்தைகள் விக்கலாக வெளிவந்தன.

காவியுருவம் அதற்குமேல் தாமதிக்கவில்லை. திடீரென வெளியே ஓடி ஒரு குடுவையோடு திரும்ப வந்தது. அந்தப் பெண்ணின் வாயருகே குடுவையைச் சரிக்க அதிசயமாகப் பார்த்த அவள் வாயைத்திறந்தாள். அமுதப் பிரவாகமாக வழிந்த நீரைப் பருகினாள்.

காய்ந்துபோயிருந்த தொண்டை நீரை ஏற்க மறுத்துப் புரட்சி செய்து பிறகு இளகி கொஞ்சம் கொஞ்சமாக நீரை உள்ளே அனுமதிக்க கழுத்து உடல் எல்லாம் நனைய அவள் தாகம் தீருமட்டும் பருகிவிட்டு காவியுருவத்தை நன்றியோடு நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்களில் சந்தேகம் எழுதியிருந்தது.

"யாரிது காவியால் முகத்தைக் கூட முற்றாக மூடிக்கொண்டு ஏன் இப்படி...? இந்தக் குரல் மட்டும் ஏன் எனக்கு அழுத்தத்தை செய்வதுபோல் இருக்கிறது. அப்படி இருக்குமோ? இருக்காது அது எப்படிச் சாத்தியம்? மொட்டைமாடியிலிருந்து தள்ளிவிடப்பட்டு அவர் காட்டாற்றுக்குள் தலை குப்புற விழுவதை என் கண்களாற் பார்த்தேனே. இது அவராக இருக்குமோ?



அல்லது நான் கனவுகாண்கிறேனா?

அழுத்தங்களால் மிதக்கப்படும் அவளது முக அவதியைப் பார்த்த காவியுருவம் மெல்ல நகைத்தது. அந்த நகைப்பில் கரை காணமுடியாத துன்பத்தின் சேதியும் அதைக் கடந்துமுடிப்பேன் என்ற வைராக்கியமும் தொங்கிச் சுடர்ந்தன.

முழங்காலில் அமர்ந்து அந்தப் பெண்ணின் முகத்துக்கருகே தன் முகத்தைக் கொணடுபோனது காவியுருவம். திகைத்து போன அவள் முயற்சித்தாள்.

"கண்மணி" மீண்டும் அமுத தாரைகள் அவளை நனைப்பதுபோன்ற உணர்வு அவளை ஆட்கொண்டது.

திடுக்குற்றுப்போன அவள் அந்த உருவத்தை உற்றுப் பார்த்தாள்.

"மஞ்சூறிக்கா தேசத்தின் இளவரசி... வாசுலதத்தனின் இதயராணி நீ...நீ... அல்லவா..."

மஞ்சூறிக்கா என்ற தமிழ்நாகதேசத்தின் இளவரசியும் காலநாகனின் மகளும் வாசுலதத்தன் என்ற மகாவீரனின் மனைவியும் பதினைந்து வருடங்களுக்கு முன்னால் சொனுத்தார தேரரினால் வஞ்சகமாகக் கடத்தி வரப்பட்டு அந்த அறைக்குள் தனிமைச் சிறைக்குள் அடைக்கப்பட்டவளுமான கண்மணி தன் வரலாற்றையே அந்த இருண்ட அறைக்குட் புட்டுவைக்கும் அந்தக் காவியுருவத்தைப் பார்த்து திகைத்துத் தான் போனாள்.

"நீ... நீங்கள் யார்?" அவள் இதழ்கள் அவளது கட்டுப் பாட்டை மீறி முணுமுணுத்தன.

"என் குரல் உனக்குத் தெரியவில்லையா கண்மணி...?"

"நீங்கள்... நீங்கள்...?"

"ஆம். நான்தான் கண்மணி..."

"உண்மையா... இது உண்மையா..."

"உண்மைதான்... நான் சாகவில்லை... சாகவும்மாட்டேன் மாற்றான் சிறையில் உன்னை வாடவிட்டுச் சாகமாட்டேன்"

உணர்ச்சியோடு சொல்லிக்கொண்டே அந்த முக்காட்டு உருவம் தன் முகத் திரையை விலக்கியது.

எதிர்பார்ப்போடு விழிகளை விரித்த கண்மணி காவியுருவத்தின் முகத்தைப் பார்த்ததும் "அம்மா" என்று பெருங்குரலில் அலறியது மட்டுமன்றி மயங்கிச் சரிந்துவிட்டாள்.

இந்தக்கதை அந்த அறைக்குள் நிகழ்ந்து கொண்டிருந்த நேரத்தில் சொனுத்தாரதேரர் தன் பிரம்புத் தண்டத்தால் நிலத்தைக் குத்திக்கொண்டு ஆகாச சைத்தியத்தின் பின்பக்க வழியால் நடந்தகொண்டிருந்தார். துட்டகாமினி எல்லையில்லாத பிரமிப்புக்குள்ளானவனாக அவரைத் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தான். தன் வேகத்துக்கு துட்ட காமினி நடந்து வராததால் ஏற்பட்ட மெல்லிய சினத்தோடு தன் நடையை சொனுத்தாரதேரர் மட்டுப்படுத்த அருகே வந்த துட்டகாமினி,

"ஏன் நின்றுவிட்டீர்கள் மகாசாது...?" என்று அப்பாவியாகக் கேட்டான்.

"காமினி இந்தக் கிழவனுக்குச் சமமாக நடக்கவே முடியாத நீ எப்படி மகா மன்னனாகப் போகிறாய். எப்படி எல்லாளனை வெற்றிகொள்ளப் போகிறாய்.? எப்படி மகா போதியின் புத்தசாசனத்தை வைத்துக் கட்டப்போகிறாய்.?

காமினி சினத்தில் சிலிர்த்துக்கொண்டான்.

"இந்த வார்த்தைகளைச் சொன்னவர் மகாசாது"

"ஆமாம் மகாசாது"

"அதனால் தப்பித்தீர்கள் இல்லாவிட்டால்...?" சொனுத்தாரதேரரின் குரலில் கேலி மன்னியிருந்தது. அதைக் துட்ட காமினி பொருட்படுத்தவில்லை. அவன் குரல் சினத்தோடு வெடித்தது.

"இல்லாவிட்டால்... சொன்னவன் தலை இந்தச் செந்நிலத்தில் புரண்டிருக்கும்..."

"சினம் வேண்டாம் காமினி... உனது சினம் எல்லாளன் பேரிலும் தமிழர்களின் பேரிலும் இருக்கவேண்டும்" என்று சொல்லிச் சிரித்தார் சொனுத்தாரதேரர்.

"மகாசாது... உங்களுடன் நான் தொடர்ந்து வருவதனால் எனக்குச் சில விடயங்கள் தெரிந்தாக வேண்டும்..."

"கேள்... தெரிந்தால் சொல்கிறேன்."

"அந்த அறைக்குள்ளே யாரை எதற்காக பூட்டி வைத்திருக்கிறீர்கள்?"

சொனுத்தாரதேரர் மெல்ல நகைத்தார். தனது தண்டத்தைப் பிரியத்தோடு தடவிக் கொண்டார்.

'காமினி உனக்கு ஏற்கனவே சொல்லிவிட்டேன் அவள் பெயர் கண்மனி. மஞ்சூரிக்கா தேசத்தின் இளவரசி. வாசுலதத்தனின் மனைவி. காலநாகனின் ஒரே மகள்."

"எதற்காகப் பூட்டி வைத்திருக்கிறீர்கள்...?"

"எதற்காக...?" சொனுத்தாரதேரர் உரத்துச் சிரித்தார்.

"காமினி... புத்தரின் எட்டாவது கலசத்துக்காக காலநாகனிடம் நான் இரந்துபார்த்தேன். அவன் இரங்கவில்லை. வாசுலதத்தனும் இந்தக் கண்மணியும் கலசத்தை எங்கோ கொண்டு செல்வதாக அறிந்து அவர்களைத் தொடர்ந்து போனேன். மஞ்சூறிக்கா தேசத்து எல்லையில் ஒரு காட்டாறுப் பக்கத்தில் அவர்கள் என்னிடம் சிக்கினார்கள். ஆனால் கலசத்தை மட்டும் எங்கோ மறைத்துவிட்டார்கள்.

'பிறகு..." காமினி ஆச்சரியத்தோடு வினவினான்.

"பிறகு... மகாவீரனான வாசுலத
அவன் எதிர்பாராத சந்தர்ப்பத்தில்
டைமலை உச்சியிலிருந்து காட்டாற்றில் தலை குப்புறத் தள்ளிவிட்டேன். மயங்கிப் போன கண்மணியை ஆகாச சைத்தியத்தக்குக் காவிவந்தேன். காமினி 15 வருடங்களாக அரைப்பட்டினியோடு சிறைவைத்து அவளை அலங்கோலப்படுத்தினாலும் அந்தத் தமிழ்ச் சிறுக்கி அசையவில்லை. மறைக்கப்பட்ட இடத்தை அவளிடமிருந்து அறிய முடியவில்லை..."

சொனுத்தாரதேரர் அவலப் புன்னகை ஒன்றை வெளியே விட்டார்.

காமினி சொனுத்தாரதேரரை வாயடைத்துப் பார்த்துக்கொண்டு நின்றான். ஒரு துறவியினால் இப்படியெல்லாம் கூடச் செய்ய முடியும் என்பதை அவன் மனம் மறுக்கத்தான் செய்தது.

"இந்தச் சாது பொல்லாதவர். கொஞ்சம் அசந்தாலும் எனக்குக்கூட ஆபத்தாக மாறக் கூடியவர்..."

துட்டகாமினி தனக்குள்ளே பேசியது சொனுத்தாரதேரருக்கு கேட்டதோ என்னவோ அவர் தனது தண்டத்தால் காமினியின் தோளில் தட்டினார்.

"நீ நினைப்பது உண்மை"

"எந்த உண்மை"

"இந்தத் தேரன் ஆபத்தானவன் என்று நீ நினைப்பது உண்மை"

துட்டகாமினி மௌனமாக அவரை ஏறிட்டான்.

"காமினி நீ ஒன்றை மட்டும் புரிந்து கொள்"

'எதை?"

"கொலை, கடத்தல், சிறை, சித்திரவதை எல்லாவற்றையும் இந்தச் சொனுத்தாரதேரர் செய்வது உன்னை மகா மன்னன் ஆக்குவதற்காக, புத்தரின் எட்டாவது கலசத்தை கண்டுபடிப்பதற்காக அது இல்லாமல் நீ சிங்கள பௌத்தரின் மகா மன்னாக நின்று நிலைக்க முடியாது."

துட்டகாமினி சிரித்தான்.

"மகா சாது உங்களால் முடியாததை இந்தக் காமினி முடித்தவைப்பான் இந்த மஞ்சூறிக்கா தேசத்துப் பெண்ணோடு நான் பேசிப் பார்க்கிறேன்."

"பேசலாம்... பேசலாம். இப்போது என்னுடன் வா..."

"எங்கே...?"

சொனுத்தாரதேரர் குறும்போடு தன் தண்டத்தால் துட்டகாமினியின் வாளைத் தட்டினார்.

"உன் தோழர்களை நீ பார்க்கத்தானே நீலக்குடிலுக்கு வந்தாய்."

"ஆமாம்"

"உன் திட்டத்தை நானும் விகாரமாதேவியுமாகக் குழப்பிவிட்டோமென்று உனக்கு வருத்தந்தானே"

துட்டகாமினி எதுவும் பேசவில்லை.

"காமினி இப்போது நாம் போகமிடத்தில் உனக்காக உன தோழர்கள் நந்தமித்திரனும் சூரநிமிலனும் காத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல உனக்காக ஒரு இன்ப அதிர்ச்சியும் அங்கே காத்திருக்கிறது."

சொனுத்தாரதேரர் மெதுவாகச் சிரித்தார் சங்கடத்தோடு நெளிந்த துட்டகாமினி போகலாம் மகாசாது ஆனால்" என்று தயங்கினான்.

"என்ன காமினி"

"ஆகாச சைத்தியத்தின் முன்வழியே போகாமல் பின்வழியால் நூலேணியில் நீங்களும் இறங்கி என்னையும் இறங்க வைக்கிறீர்களே... அது எதற்காக...?"

"நீதான் மகாமன்னனாவதற்குமுன் ஆகாச சைத்தியப் படிகளிற் கால் வைத்து ஏறமாட்டேன் என்று ஆணை வைத்திருக்கிறாயே" என்று குறும்பாக நகைத்த சொனுத்தாரதேரர் எதையோ நினைத்துத் திடீரென சிரிப்பை நிறுத்தி விட்டு இடுப்பைத் தடவினார். அவர் முகம் இறுகி இருண்டது.

"காமினி... கொஞ்சம் நில்..." என்று சொல்லிவிட்டு திரும்ப சைத்தியத்தை நொக்கி ஓடினார்.

சிறுவன் குரங்கைவிட லாவகத்தோடு நூலேணியில் ஏறத் தொடங்கினார்.

சொனுத்தாரதேரர் மறந்துவிட்டு வந்த திறப்புக்காக போகிறார் என்பதை அறியாத துட்டகாமினி திகைத்துபோய் நின்ற போது பக்கத்துக் காட்டு மரம் ஒன்று அவனைப் பார்த்தது.

"உஸ்... உஸ்ஸ்... " என்றது.

"யாரது...?" ஒரு கணம் திகைத்தாலும் அடுத்தகணம் சுதாரித்துக்கொண்ட துட்டகாமினி வாளை மெல்ல உருவிக் கொண்டு மரக்கூடலை நோக்கி எச்சரிக்கையோடு நகர்ந்தான்.

-தொடரும

## குறளும் பொருளும்




குறள் : "அன்பின் வழியது உயிர்நிலை அஃது
இல்லார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு"

பொருள் : அன்பு கொண்டு வாழ்பவர்களே உயிரோடு வாழுகின்றவர்களாகக் கணிக்கப்படுவார்கள், அவ்வாறு இல்லாதவர்கள், எலும்பின் மேலே போர்த்த ஜடம் போன்றே கணிக்கப்படுவார்.

# சிறுவர் அரங்கம்



# எலிக்குஞ்சு செட்டியார்



நான் இப்போது பெரிய பணக்காரன். இந்தப் பட்டணத்திலுள்ள எல்லாருக்கும் என்னைத் தெரியும். ஆனால், சிவநேசன் செட்டியார் என்ற என்னுடைய பெயர் மாத்திரம் ஒருவருக்கும் தெரியாது. என்னை எல்லோரும் "எலிக்குஞ்சு செட்டியார்" என்று தான் சொல்லுவார்கள் ஏனென்றால் நான் இவ்வளவு பணக்காரன் ஆனதற்கு ஓர் எலிதான் காரணம். ஓர் எலியை அதுவும் ஒரு செத்த எலியை மூலதனமாக வைத்து வியாபாரம் செய்து நான் பணம் தேடினேன் என்று சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள் தான். ஆனால் நான் சொல்வது முற்றிலும் உண்மை மெய்யா பொய்யா என்று.........

நான் என் தாயின் வயிற்றிலிருக்கும் போதே என் தகப்பனார் இறந்து விட்டார் என் தாய் மிகுந்த பாடுபட்டு என்னை வளர்த்துப் பின்பு ஒரு சிறிய பள்ளிக்கூட உபாத்தியாரிடம் சம்பளமில்லாமல் தான் கல்வி கற்கவும் ஏற்பாடு செய்தாள்.

ஒருநாள் என்னை அழைத்து "மகனே நாங்கள் ஏழைகள் மிகுந்த கஷ்டமனுபவிக்கிறோம். எப்போதும் இப்படியே இருக்க முடியாது நீ இப்போது பெரியவனாகிவிட்டாய் இனி எங்கள் பரம்பரை தொழிலான வியாபாரத்தைச் செய்து பொருள் தேட வேண்டும். மூலதனம் இல்லாமல் எப்படி வியாபாரம் செய்யவதென்று ஆலோசிக்கவேண்டாம். அடுத்த தெருவிலுள்ள பெரிய வியாபாரியான கதிரேசன் செட்டியார் வறியவர்களான உறவினர்களுக்கு வேண்டிய மூலதனம் கொடுத்து உதவி செய்கிறார். நீயும் அவரிடம் போய் வேண்டிய உதவிகளைப் பெற்று வியாபாரம் செய்" என்று சொன்னாள் நானும் அப்படியே அங்கே போனேன்.

நான்போன போது யாரோ ஒரு வாலிபன் செட்டியாரின் முன்னிலையில் தலை குனிந்து மௌனமாக நின்றான். செட்டியார் அவனைக் குறை கூறிக்கொண்டிருந்தார் "நான் இருமுறை உனக்குப் பண உதவி செய்தும், நீ அதைக் கொண்டு பொருளீட்டத் தெரியாமல் எல்லாவற்றையும் இழந்துவிட்டு இங்கே நிற்கிறாயே அதோபார் அந்த மூலையில் ஓர் எலி செத்துக் கிடக்கின்றது. அந்த எலியை மூலதனமாகக் கொண்டே பெரும் பொருள் தேடிவிடுவான் திறமையுள்ள ஒரு வணிகன். நீயோ என்றால் நான்தந்த பெருந்தொகை மூலதனத்தையும் அழித்துவிட்டாயே!

அவர் இவ்வாறு சொன்னவுடன் அந்த எலியை எனக்கே மூலதனமாகத் தரவேணடுமென்று கேட்டேன். அவர் முதலிலே ஆச்சரியமடைந்தாராயினும் எலியை எடுத்துக் கொள்வதற்கு அனுமதியளித்தார். உடனே நான் அதை எடுத்துப் பத்திரப் படுத்தி கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டேன். எல்லோரும் என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

வீட்டுக்கு வரும் வழியில் தானியக் கடையொன்றில் வளர்க்கப்படும் பூனையின் உணவுக்காக அந்த எலியைக் கொடுத்து விட்டு அதற்கு விலையாகக் கொஞ்சம் கடலை வாங்கினேன். அதை அவித்தெடுத்துக்கொண்டு நகரத்தின் வெளியே ஒரு மரநிழலிற் போயிருந்தேன். அப்போது விறகு வெட்டிகளிருவர் வெகுதூரத்திலிருந்து விறகுச் சுமையுடன் அங்கு வந்தார்கள். அவர்களுக்கு அந்த கடலையை கொடுத்துத் தாகத்திற்குத் தண்ணீரும் கொடுத்தேன். அந்த உணவுக்கு பதிலாக அவர்கள் இவ்விரண்டு விறகுத்துண்டுகள் போட்டு விட்டுப் போனார்கள். அவற்றை கொண்டு போய் விறகுக் கடையிற் கொடுத்துச் சில காசுகள் பெற்றேன். அந்தக் காசுக்கு மறுபடியும் கடலை வாங்கி அவித்து விறுகு வெட்டிகளுக்கு விற்றேன். இவ்வாறு செய்த சில நாட்களில் அந்த விறகுவெட்டிகளிடமிருந்து விறுகு முழுவதையும் நானே வாங்கி விட்டேன்.

மாரிகாலம் வந்தது ஒரு வாரம் தொடர்ந்து சோனா மாரியாகப் பெரு மழை பெய்தது. எதிர் பாரமல் பட்டணத்தில் விறகு பஞ்சம் ஏற்பட்டு விடவே நான் நியாயமான விலைக்கு என்னிடமிருந்த விறகை விற்று ஏராளமான பொருளைத்தேடினேன். உடனே செட்டித் தெருவில் பெரிய கடையொன்று வாங்கி வியாபாரம் தொடங்கினேன்.

அப்போது நான் இந்த நிலமையை அடைவதற்கு காரணமாயிருந்த கதிரேசன் செட்டியாரையும் செத்த எலியையும் மறந்துவிடாமல் தங்கத்தால் ஓர் எலி செய்து செட்டியாரிடம் கொண்டு போய் கொடுத்து என் வரலாற்றையும் சொன்னேன். இதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த அவர் தனது மகளை எனக்கு மணம் செய்து தந்தார். அதோ தெரிகிறதே நாங்கள் வாழும் மாடமாளிகை இப்போது தெரிகிறதா நான் சொன்னது பொய்யென்று.

பண்டிதர். ச. பஞ்சாட்சரசர்மா,
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை, வட்டக்கச்சி.

## உங்களுக்குத் தெரியுமா

1. தென்சமுத்திரம் என அழைக்கப்படுவது எது?
   அந்தாட்டிக்கா கண்டத்தை
2. உலகில் மிகப்பெரிய நாடு எது?
   சீனா
3. மேற்கு இந்தியத்தீவுகளைக் கண்டறிந்தவர் யார்?
   கொலம்பஸ்
4. கைத்தொழில் புரட்சி எங்கு ஏற்பட்டது?
   இங்கிலாந்து நாட்டில்
5. உலகில் மிகப்பெரிய நீர்வீழ்ச்சி எது?
   ஏஞ்சல்
6. தேயிலைச் செடி இலங்கையில் எத்தனையாம் ஆண்டு அறிமுகப்படுத்தப் பட்டது?
   1839ம் ஆண்டு

சி. காண்டீபன், முள்ளியவளை.

## பொது அறிவுகள்

1. சந்திரனில் இறங்கிய இரண்டாவது விண்வெளி வீரர் யார்?
   எட்வின் அல்ரின்
2. நீராவிக்கப்பலை வடிவமைத்தவர் யார்?
   ஜான்பிட்ச் (1787ம் ஆண்டு)
3. மிக வேகமாக வளரும் உயிரினம் எது?
   நீலத்திமிங்கிலம்
4. மிகவேகமாக வளரும் மரம் எது?
   யூகலிப்ஸ்
5. உலகின் மிக உயரத்தில் அமைந்துள்ள ஏரியின் பெயர் என்ன?
   டிட்டிக்கா ஏறி
6. எலும்பிச்சம் பழத்தில் உள்ள அமிலம் எது?
   சிட்றிக் அமிலம்

பவித்திரா, சுப்பிரமணிய ஐயர், யாழ்ப்பாணம்.

1. மிக அண்மையில் சுதந்திரமடைந்த நாடு எது?
   கிழக்குத்தீமோர்
2. HIV வைரஸ்சைக் கண்டு பிடித்தவர் யார்?
   மெக்கா ரொபட் ஹேல்வே
3. உலகின் மிகச்சிறிய அரசு எது?
   வத்திக்கான்
4. ஆப்கான் மீதான அமெரிக்க தாக்குதல் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
   07-10-2001 இல் இலங்கை நேரப்படி 10.35 மணிக்கு
5. உலகின் உயராமான நிலம் எது?
   தீபெத்

கா. றஸ்மினா, செட்டிக்குளம்.

## சிந்தனைத் துளிகள்

1. இன்பமும் துன்பம் வாழ்க்கை சக்கரம் சுழலும் போது மாறி மாறி வரும்.
2. பணச்செலவு என நினைத்தால் உலகில் எந்தக்காரியமும் செய்ய முடியாது.
3. விதி என்பது நாம் முற்பிறவியில் செய்த பலாபலன்களே.
4. இருட்டில் நடப்பவனுக்கு மனதும் வெளிச்சம்.
5. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

வி. சோபனா, தரம் -9
யா/வட்ட மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை.

## வர்ணம் தீட்டி அனுப்புங்கள்
## சிறந்தவைக்கு பரிசு உண்டு - 15



நீங்கள் அனுப்ப வேண்டிய **வர்ணம் தீட்டற்போட்டி**

இறுதித் திகதி: 09/05/2004 முகவரி: 61, கற்குழி, வவுனியா.

## உங்கள் சித்திரம்



K. சேதீஸ்வரன்
தரம் - 8A
வ/பதீனா வித்தியாலயம்
வவுனியா.


**கண்டு பிடியுங்கள்-15**

| | |
|---|---|
| பெயர் | : ........................................ |
| வயது | : ........................................ |
| பாடசாலை | : ........................................ |
| முகவரி | : ........................................ |

**வர்ணம் தீட்டும் போட்டி-15**

| | |
|---|---|
| பெயர் | : ........................................ |
| வயது | : ........................................ |
| பாடசாலை | : ........................................ |

## கண்டுபிடியுங்கள் -15



இக்கட்டத்தில் இரண்டு பறவைகள் குழப்பப்பட்ட நிலையில் உள்ளன அவற்றைக் கண்டுபிடித்து பொருத்தி ஒட்டி அனுப்பவும்.

அனுப்ப வேண்டிய இறுதித்திகதி : 09/05/2004

# தாரண புத்தாண்டு தருமா சுகம்?

ஜோதிட சக்ரவர்த்தி
ஏ.எம்.ராஜகோபாலன்

எனது அன்பிற்கும், பாசத்திற்கும் உரிய வாசகர்களுக்குத் தமிழ்ப்புத்தாண்டு தாரண வருடம் பிறக்கும் இன்நன்னாளில் அனைத்து நன்மைகளையும் தந்தருளும்படி இறைவனது பாத கமலத்தில் சரணடைந்து வேண்டுகிறேன்.

## மேஷம்

13.04.2004 முதல் 18.08.2004 வரை
(அசுவினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் வரை)

குடும்பச் சூழ்நிலை திருப்திகரமாக இருக்கும். கணவன் மனைவியிடையே பரஸ்பர அன்னியோன்யமும். ஒற்றுமையும் நிலவும். குழந்தைகளால் அனுகூலமுண்டு. பொருளாதாரம் திருப்தி அளிக்கும். தேவைக்கேற்ப வருமானம் இருப்பதால் பற்றாக்குறை ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. பழைய கடன்களால் ஏற்பட்டு வந்த சிரமங்கள் இனி இராது. உடல் நலக் குறைவினால் சிகிச்சை பெற்றுவரும் இந்த ராசி அன்பர்களுக்கு நல்ல குணம் தெரியும்: உடல் நலன் நல்லபடி இருக்கும். நீதிமன்ற வழக்குகள், குடும்ப சச்சரவுகள் ஆகியவை சுமுகமாகத் தீரும். திருமணம் சம்பந்தமான முயற்சிகளை மேற்கொள்வதற்கு அனுகூலமான காலகட்டம் இது தசா, புக்திகளுக்கேற்ப சிலர் தங்கள் உறவினர்களைப் பார்ப்பதற்காக வெளிநாடு சென்று வரும் யோகமுள்ளதையும் கிரகநிலைகள் எடுத்துக்காட்டுகின்றன.

குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் ஏற்படுவதற்கும் கிரகநிலைகள் அனுகூலமாக உள்ளன. ஒரு சலருக்கு எதிர்பாராத பண வரவும் உண்டு. குடும்பச் சூழ்நிலையில் மிக நல்ல மாறுதல் ஏற்படுவதைத் தற்போது காணலாம். பூர்வீகச் சொத்து கிடைப்பதும். கைக்கு எட்டாமல் வெளியில் நின்றிருந்த பணம் வசூலாவதும் தற்போதைய காலகட்டத்தில் ஏற்படப் போகும் நன்மைகளில் சிலவாகும். பாக்ய, லாப ஸ்தானங்களை குருபகவான் தனது சுபப் பார்வையால் பலப்படுத்துவதால் எதிர்பாராத பண வரவிற்கும் சாத்தியக் கூறு உள்ளது.

உத்தியோகத்தர்களுக்கு கிரக நிலைகள் மிகவும் உதவிகரமாக சஞ்சரிப்பதால் தற்காலிகப் பணியில் உள்ளவர்களுக்குப் பணி நிரந்தரமாகும். வேலை இல்லாமல் கவலைப்படுபவர்களுக்கு எளிதில் நல்ல வேலை கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வும், அதன் காரணமாம் வெளியூர் மாற்றமும், சலுகைகள் அதிகாரிப் பதும் எதிர்பார்க்கலாம். வெளிநாடு சென்று வேலை பார்த்து முன்னுக்கு வர வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள் அதற்கான முயற்சிகளை இப்போது மேற்கொள்ளலாம்.

தொழிலதிபர்களுக்கு லாபகரமான நேரமிது. தொட்டதெல்லாம் துலங்கும். நிதிநிலமை சீர்படும். உற்பத்தி அதிகரிக்கும். ஒரு சிலருக்குத் தங்கள் தொழிற்சாலையையும், தொழிலையும் அபிவிருத்தி செய்வதற்குப் பொருளாதார வசதியும், இதர வசதிகளும் கிடைக்கும். வர்த்தகத்துறை அன்பர்களுக்கும் மகிழ்ச்சி தரும் காலக்கட்டம் இது. வியாபாரம் செழிக்கும். ல்ாபம் உயரும். சிலர் தங்கள் வியாபாரத்தை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றுவார்கள்.

திரைப்படத்துறையில் உள்ளவர்களுக்குப் புதிய படங்கள் எடுப்பதற்கு ஏற்றபடி கிரக நிலைகள் அமைந்துள்ளன. தற்போது குரு, சுக்கிரன், சனி ஆகிய மூன்று கிரகங்களுமே சுபப்பார்வைகளில் சஞ்சரிப்பதால் கலைத்துறையினருக்கு யோக பலன்கள் காத்துள்ளன.

அரசியல்வாதிகளுக்கு இது யோக பலன்களை அளிக்கக்கூடிய காலநிலை என்பதை கிரகங்கள் உறுதியாக எடுத்துக்காட்டகின்றன. செல்வாக்குள்ள தலைவர்களுடன் தொடர்பும் அரசாங்கப் பதவியில் இருபபவர்களின் ஆதரவும் உங்களுக்குத் துணை நிற்கும். மாணவ மாணவியருக்கு வித்யாஸ்தானம் சுபபலன் பெற்றுள்ளது. வித்தியாகாரகரும் உதவிகரமாக இருப்பதால் எதிர்வரும் ஆண்டுத் தேர்வில் வெற்றி நிச்சயம். விவசாயிகளுக்கு வருட ஆரம்பத்தில் முதல் மூன்று மாதங்கள் தண்ணீர்ப் பற்றாக்குறை ஓரளவே குறையும். அதன்பிறகு நல்ல மழை பொழியும். அதனால் இந்த ராசியினருக்குப் பயிர்கள் செழிக்கும். வருமானம் உயரும். கடன் நீடித்தாலும் அதனால் ஏற்பட்டு வந்த தொல்லைகள் தீரும்.

பெண்மணிகளுக்கு, குடும்பச் சூழ்நிலை நல்லபடி இருப்பதாலும், பொருளாதாரம் திருப்திகரமாக அமைவதாலும் குடும்ப நிர்வாகம் நல்லபடியே நடக்கும். கணவனின் ஆதரவு, குழந்தைகளின் பாசம், புதிய பொருள்கள் சேர்தல் என்று மனதில் மகிழ்ச்சி நிலவும். வேலை பார்க்கும் பெண்களுக்கும் அதிர்ஷ்டகரமான காலகட்டம் இது.

19.8.2004 முதல் 13.4.2005 வரை

இதுவரை அனுகூல நிலையில் சஞ்சரித்த குருபகவான் உங்கள் ராசிக்கு ருண, ரோக, சத்ரு ஸ்தானமாகிய கன்னிக்கு மாறுவதால் இதுவரை குருபகவானால் தொடர்ந்து ஏற்பட்டு வந்த நன்மைகள் குறையும். சனிபகவான் வக்கிர கதியை அடைவதாலும், ஜென்ம ராசியில் உள்ள ராகுவிற்கு இதுவரை கிடைத்து வந்த குருவின் பார்வை இனி இராததாலும், குடும்பத்தில் பல பிரச்சனைகள், குழப்பங்கள், பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படுவதற்குச் சாத்தியக்கூறுகள் உள்ளன. குடும்பத்தில் ஒற்றுமை யின்மையும், நெருங்கிய உறவினர்களிடையே கருத்து வேற்றுமையும், எதிர்பாராத செலவுகளும் குழந்தைகளால் பிரச்சனைகளும் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. ஜென்ம ராசி ராகுவினால் உடல் நலக் குறைவு ஏற்படக்கூடும்.

### அறிவுரை

புத்தாண்டில் முதல் நான்கு மாதங்களில் மட்டுமே முக்கிய கிரகநிலைகள் அனுகூலமாக உள்ளன. அதன்பிறகு அனுகூலமாக இல்லை. உடல் நலனில் கவனமாக இருங்கள். பண விஷயங்களில் எவரையும் நம்ப வேண்டாம். செலவுகளைக் கூடிய வரையில் கட்டுப்படுத்திக் கொள்வது நல்லது.

### பரிகாரம்

ஜென்ம ராசியில் ராகு பலமான இருப்பதால் தினமும் காலையில் நீராடி 'மிருத்யுஞ்ஜய ஸ்தோத்திரம்' பாராணயம் செய்து வருவது உடல் நலனைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மிகவும் உதவும். குடும்பப் பிரச்சனைகள் தீர 'ஸ்ரீ கிருஷ்ணாஷ்டகம்' பாராணயம் செய்து வரவும்.

## ரிஷபம்

13.04.2004 முதல் 18.08.2004 வரை
(கிருத்திகை 2ம் பாதம் முதல் ரோகினி, மிருகசீரிஷம் 2ம் பாதம் வரை)

சென்ற ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நீடிக்கிறது. கடன் தொல்லைகளினால் மன அமைதியை இழக்கிறீர்கள். குடும்பத்தில் மனைவி மற்றும் குழந்தைகளுடன் கருத்து வேற்றுமையும் அதனால் மனத்தில் கலக்கமும் உண்டாகும். வருமானம் உயராது. ஆனால் செலவுகளோ வருமானத்தைவிட பலமடங்கு அதிகமாக இருக்கும். நீதிமன்ற வழக்குகள். குடும்ப சச்சரவுகள் ஆகியவற்றில் அனுகூலமான முடிவை எதிர்பார்க்க முடியாது. உடல்நலக் குறைவும் அவ்வப்போது ஏற்படுதற்குச் சாத்தியக்கூறுகள் உள்ளன. பெண் அல்லது பிள்ளை ஆகியோரின் திருமணம் சம்பந்தமாகச் சிரமங்கள் ஏற்படும். உங்கள் பணிகளில் ஏதாவது குற்றம் அல்லது குறை கூறிக் கொண்டே இருப்பார்கள். ஜுன், ஜுலை மாதங்களில் பொறுமையும். நிதானமும் அவசியம் தொழில் துறை அன்பர்களுக்கு உற்பத்தி பாதிக்கப்படும். வங்கிகள். தனியார். நிதிநிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்பு கிடைப்பது கடினம். எதிர்பார்த்த வெளிநாட்டு ஆர்டர்கள் கிடைப்பதில் சர்ச்சை உண்டாகும். தொழிலில் போட்டிகள் அதிகரிக்கும். வருமானம் பாதிக்கப்படும். வர்த்தகத் துறையில் உள்ள அன்பர்கள் அனைத்து விஷயங்களிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது. அவசியம். சிலருக்கு சக கூட்டாளிகள் சிரமங்கள் உண்டாகும். ஏற்றுமதி இறக்குமதித் துறைகயினருக்கு வெளிநாட்டு நிறுவனங் களுடன் கருத்து வேற்றுமையும், பிரச்சனைகளும் ஏற்படும்.

கலைத்துறையினர் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய தருணம் இது. புதிய படங்களினால் நஷ்டம் ஏற்படக் கூடும். நடிகர், நடிகையருக்கு உடல் நலக் குறைவினால் ஒப்புக்கொண்ட படங்களை முடித்துக் கொடுப்பதில் சிரமங்கள் உண்டாகும். அரசியல்வாதிகளுக்கு, செல்வாக்குச் சரியும். எதிர்பாராத வகையில் பணத்தட்டுப்பாடும் ஏற்படக்கூடும். எதிர்வரும் பொதுத் தேர்தல்களில் நிற்பதென்றால் தீர ஆலோசித்த பின்னரே முடிவெடுங்கள். ஏனெனில் கிரகநிலைகள் உங்களுக்கு உதவிகரமாக இல்லை. அது மட்டுமல்லாமல் பகை கிரகங்கள் பலமாக இருப்பதால் சில ஆபத்தான நேரங்களைக்கூட நீங்கள் சந்திக்க நேரிடும். மாணவ, மாணவியருக்கு பாடங்களைக் கையிலெடுத்தாலே சோம்பலும், மறதியும், படிப்பில் ஊக்கமின்மையும், போட்டியிடும் தேர்வுகளில் கவனக்குறைவும் உண்டாகும். இந்த ஆண்டு இறுதித் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்குக் கடினமாக உழைக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு அனைத்துப் பிரச்சனைகளும் இன்னமும் நீடிக்கின்றன. பழைய கடன்கள் தொல்லை தரும். வறண்ட நிலம் காய்ந்தே கிடக்கும். கால்நடைகள் நோயினால் பாதிக்கப்படுவதால் எதிர்பாராத நஷ்டம் ஏற்படும்.

தொடர்ந்து துன்பப்பட்டு வருவதால் இந்த ராசிப் பெண்மணிகளுக்கு சென்ற சில மாதங்களாகவே மனத்தில் விரக்தியும், நம்பிக்கைக் குறைவும் ஏற்பட்டிருக்கும். அந்த மனநிலை இன்னமும் நீடிக்கிறது. பெண் அல்லது பிள்ளை ஆகியோரின் திருமணம் சம்பந்தமாகப் பிரச்சனைகளும், குடும்ப கௌரவத்திற்கு பங்கத்தையும் ஏற்படுத்தும்.

19.08.2004 முதல் 13.04.2005 வரை

சென்ற சுமார் மூன்றாண்டுகளுக்கு மேலாகவே கஷ்டப்பட்டு வந்த நீங்கள் இனி பல நன்மைகளை எதிர்பார்க்கலாம். இதுவரை அர்த்தாஷ்டகத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் உங்கள் ராசிக்குப் பூர்வபுண்ணிய ஸ்தானமான கன்னிராசிக்கு மாறுவதுடன் உங்கள் ராசியில் பாக்ய ஸ்தானத்தையும், லாப ஸ்தானத்தையும் உங்கள் ராசியையும் பார்வையிடுவதால் இதுவரை அனுபவித்து வந்த சிரமங்கள் அனைத்தும் தீரத் தொடங்கும். சனி பகவானும் வக்கிரகதியில் அனுகூலமான நிலைக்கு மாற இருப்பதால் பொருளாதா ரத்திலும், அபிவிருத்தி ஏற்படும்.

பழைய கடன்களை அடைத்து மனநிம்மதி பெறுவதற்கு இப்போது வழி பிறக்கும். பல காரணங்களினால் திருமண சம்பந்தமான முயற்சிகளில் ஏற்பட்டு வந்த தடங்கல்கள், பிரச்சினைகள் ஆகியவை நல்லபடி தீரும். கணவன் மனைவியிடையே தொடர்ந்து ஏற்பட்டு வந்த மனக்கசப்பும். கருத்து வேற்றுமையும் நீங்கி மனத்தில் புத்துணர்ச்சியும், நிம்மதியும் உண்டாகும். பலவித உடல்நலக் கோளாறுகளால் அவதியுற்று வந்த இந்த ராசி அன்பர்களுக்கு நல்ல குணம் ஏற்படும் இப்போது. அதனால் மருத்துவச் செலவுகளும் குறையும். உத்தியோகம். தொழில், வியாபாரம் ஆகியவற்றிலும் இந்த ராசியினருக்கு நல்ல காலமும் நேரமும் இப்போது பிறந்துள்ளன. என உறுதியாகக் கூறலாம். மாணவ. மாணவியருக்கு பல காரணங்களால் இதுவரை படிப்பில் ஏற்பட்டு வந்த பின்னடைவு நீங்கும்.

### அறிவுரை

வாடிய பயிருக்கு மழைபோல உங்களுக்கு நல்ல காலம் வந்துவிட்டது. அதனால் நீங்கள் நல்ல முன்னேற்றத்தையும், மனநிம்மதியும் பெறுவீர்களென உறுதியளிக்கிறேன்.

### பரிகாரம்

காலை, மாலை இருவேளைகளிலும் 108 தடவை ஸ்ரீ ராமநாமத்தை ஜெபித்து வாருங்கள். மாலையில் உங்கள் வீட்டுப் பூஜை அறையில் தீபம் ஏற்றி வைத்து "ஸ்ரீ சியாமளா தண்டகம்" சொல்லி வரவும். மாலையில் "அனுமன் சாலீசா"படித்து வரவும். தினமும் காலையில் அல்லது மாலையில் ஸ்ரீ சனீஸ்வர ஸ்துதியைக் கூறி அவரை நமஸ்கரித்து வரவும்.. இந்தப் பரிகாரங்கள் போதும்.

ராசி பலன் தொடர்ச்சி அடுத்த இதழில்...

## கண்டுபிடியுங்கள் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

**முதலாம் பரிசு பெற்றவர்**

யோ.டயானா
7ம் வட்டாரம்
ஆனந்தரம் சந்தையடி
அருள்கடை,மு/புதுக்குடியிருப்பு

**மற்றும் ஆறுதல் பரிசுகளை பெற்றுக் கொள்ளும் சிறுவர்கள்.**

பா.அர்ஜன்
மு/கலைமகள் வித்தியாலயம்
முள்ளியவளை

ம.தர்சிகன்
ஜயனார்புரம் அ.த.கபாடசாலை
உருத்திரபுரம்.

## வர்ணம் தீட்டும் போட்டியில் 13 பரிசு பெற்றவர்கள்

**முதலாம் பரிசு பெற்றவர்**

ம.எமெரன்சியா
இல. 204, மன்னார் வீதி
குருமன்காடு, வவுனியா.

**மற்றும் ஆறுதல் பரிசுகளை பெற்றுக் கொள்ளும் சிறுவர்கள்.**

சு.மாதவி
8ம் வட்டாரம் புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு.

வே.மோகன்
கணேசபுரம்

ச.நிலானி
யா.வடஇந்துமகளீர் கல்லூரி
பருத்தித்துறை.

# சித்திரமும் சிறுகதையும்

## அந்தஸ்து


**"...நா யார் தெரியுமா? மெடிசின் ஸ்டுடண்ஸ் உனக்கு என்ன லவ் பண்ண என்ன தகுதி இருக்குதடா ஐம்பது சதத்திற்கு வழியில்லாத கூலிகள் குடும்பம்...."**

"அடேய் ரவி உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு உன்ட அப்பாவும் அம்மாவும் எவ்வளவு கஷ்டப்பட்டு படிப்பிச்சாங்க. நீ A/L படிச்சிருக்க, ஏதாவது வேலையில சேரலாந்தானே அதோட அப்பா அம்மா பேசிற கலியாணத்தைக் கட்டலாந்தானே ஏன் இப்படிக் குடிச்சி உன்ட உடம்பையும் வீட்டையும் அழிக்கிற" என நீண்ட நாட்களுக்குப் பின்னர் பல்கலைக் கழகப் படிப்பை முடித்து விட்டு வந்த அவனது நண்பன் ரஜீஸ் வார்த்தைகளை அடுக்கிக் கொண்டே போனான்.

அரைகுறையான மது போதையில் இருந்த ரவி தனது சோக வரலாறை உளரத் தொடங்கினான்.

"ரஜீஸ் நா திருநெல்வேலியில் ருமில இருந்து படிச்ச காலத்தில பின்னேரம் ஐந்து மணிக்கு என்ர நண்பர்களுடன் சந்தியில் நிற்கேக்கத்தான் அவளைக் கண்டனான். அவளுட ஊர். பேர், குலம், பணக்காரப் பெண்ணா? ஏழைப் பெண்ணா? படித்தவளா? படிக்காதவளா? என்று எதுவும் தெரியாம அவள காதலிக்கத் தொடங்கினன்டா? பல தடவை அவளுடைய பின்னால போய் பேச்சுக்கூட வாங்கினன்டா. கொஞ்சம் காலம் போகத்தான்டா அவளுட பேரும் இடமும் தெரிய வந்துச்சிடா இருந்தும் அவள் என்ன செய்கிறாள் என்று எனக்குத் தெரியாதுடா. பிறகு நா பேரைச் சொல்லி கூப்பிட்டன்டா அவள் எதையும் கணக்கெடுக்காம போனாடா அவளுக்கு பின்னால நாயா அலைஞ்சன்டா அவ என்ன செருப்பாக்கூட மதிக்கல்லடா...."

வெறிமுறிந்து நிதானத்துக்கு வந்த ரவி கதை சொல்வதை இடையில் நிறுத்தினான். ரஜீஸ் இவனிடமிருந்து உண்மையை எடுப்பதற்காக மெதுவாக வீட்டிலிருந்து சாராயக் கடைக்கு கூட்டிக் கொண்டு போனான்.



குடிப்பழக்கமில்லாத இவன் ரவியின் உண்மைக் கதையை அறிவதற்காகப் போனான்.

சாராயத்தை வாங்கி ஊற்றினான். "சரி பேந்து என்ன வாச்சி". "ஒரு நாள் றோட்டில மறிச்சன்டா அவள் என்னப்பற்றி எல்லாம் தெரிஞ்சவள் போல் "ரவுடி ராஸ்கோல் நாயார் தெரியுமா மெடிசின் ஸ்டுடண்ஸ் உனக்கு என்ன லவ் பண்ண என்ன தகுதி இருக்குதடா...? ஐம்பது சதத்துக்கு வழியில்லாத கூலிகள் குடும்பத்தைச் சேர்ந்தவனே. எனக்கிட்ட இருக்கிற பணமும் படிப்பும் உனக்கிட்ட இருக்காடா...? என்று திட்டிப்போட்டாள். நண்பா இவள நா எதுவும் தெரியாம காதலிச்சன்டா இவ இப்படிச் சொல்லிப்போட்டா நீ சொல்லு எங்கட குடும்பம் கூலிக் குடும்பமா? சொல்லுடா... சொல்லுடா..." என்று கதறினான்.

ரஜீஸ் மெதுவாக குளத்தங்கரைக்கு கூட்டி கொண்டு போய் முழுகவைத்து விட்டு குளத்தங்கரையில் அமர்ந்தார்கள். ரவி தலையை குனிந்து கொண்டு எதுவும் கதைக்காமல் அமைதியாக இருந்தான். ரஜீஸ் குளத்தை பார்த்து ரசித்தவாறு நீண்ட புத்திமதி கூறி அவனை வீட்டுக்கு அனுப்பி வைத்தான்.

மெடிசின் படிப்பை முடித்த தேவிக்கு, வெளிநாட்டில் உள்ள பல்கலைக்கழகத்தில் படிப்பை முடித்த டொக்டருக்கும் (வைத்தியர்) பேச்சுத் திருமணம் இனிதே நிறைவேறியது. சில காலங்கள் போகத்தான் தெரியவந்தன அவனுக்கும் இரண்டு பிள்ளையோட வெளிநாட்டில் ஒரு மனிசி இருக்குதென்று.

**சிறுகதைப் புயல்**
**(யாழ்-பல்கலைக்கழகம்)**

இனி என்ன பயன்? கற்பு போன பிறகு அவன் தானே புருஷன் இந்த உலகில் இவளைப் போல எத்தனைப் பேர் இருப்பார்கள் இது யாருக்குத் தெரியும்.

ஒரு சமயம் தேவி கவலையுடன் கையில் தினகரன் பத்திரிகையுடன் சாய்மனைக்கதிரையில் சாய்ந்துகொண்டு சாளரத்தினூடாக வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மெல்ல மெல்ல வந்த காற்று பத்திரிகையின் ஒவ்வொரு பக்கத்தையும் தட்டித்தட்டிச் சென்றது. மூன்றாவது பக்கம் வந்தவுடன் திடீரென்று கீழே பார்த்தாள் கண்ணீர் ஆறாகக் பெருகியது. "இலங்கையில் சிறந்த எழுத்தாளர்களில் ரவி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவருக்கான பாராட்டு விழா இன்று கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும்" என்று ரவியின் புகைப்படத்துடன் பெரிய எழுத்தில் கிடந்தது.

தலையில் அடித்து அடித்து அழுகின்றாள். இனி அழுது என்ன பயன், அடித்து என்ன பயன் வாழ்க்கையில் அந்தஸ்து பார்த்தா இதுதான் நிலை.

ரஜீஸ் கூறிய புத்திமதியால் இவன் இந்த சமுதாயத்தில் உயர்ந்த மனிதனாகியுள்ளான். இதையெல்லாம் காண்பதற்கு ரஜீஸ் உயிருடன் இல்லை. வீதி விபத்தில் இறந்து பதினைந்து வருடங்களாகிவிட்டன. தனது வாழ்க்கையின் வெற்றிக்கு ரஜீஸ் காரணமாக இருந்ததினால் ரவி தனது முதலாவது நாவலுக்கு "ரஜீஸ் கூறிய புத்திமதிகள்" என்று பெயர் சூட்டினான்.

தேவியின் வாழ்க்கை கரடுமுரடான பாதையில் போகின்றது. இரண்டு பெண் பிள்ளைகளுடன் விதவையாகிப் போனாள். வெளிநாட்டு கணவன் வேறுயாருமில்லை ரவியின் நண்பன் ரஜீஸ்தான்.

---

# சிறுகதை

## மீண்டும் தொடருமா? அகதி வாழ்வு

**நே**ரம் அதிகாலை நான்கு மணி காலை சேவற்கோழி தனது ஓசையை எழுப்பி ஊர் மக்களை நித்திரை விட்டு எழும்ப முயல்கின்றது. அப்போது அதன் முயற்சிக்குப் பலனாக ராதிகாவும் அவளுடைய அண்ணனுமான ராகவனும் தமது கல்வியில் தம்மை வழிப்படுத்த காலை எழுந்து தமது மின்குழிழை ஒளிரவிட்டு தமது மேசையில் சென்று படித்துக்கொண்டிருந்தனர்.

சில நிமிடங்களின் பின்பு மேசையிலுள்ள கடிகாரமுள் நேரம் ஐந்து முப்பதைக் காட்டியது. அப்போது அவர்களது தாயும் தந்தையும் எழுந்து தமது கடமைகளில் ஈடுபட்ட வண்ணம் இருக்கையில் ஒரு வெடிச் சத்தம் கேட்டது. அதைக் கேட்ட தாயாரான புஸ்பா தனது கணவனான ராஜகோபாலிடம் தனது மனப் பயத்தினைக் கூற எல்லோருமாகச் சேர்ந்து தாயை கிண்டல் செய்தனர்.

சில வினாடிகளின் பின்பு வெடிச்சத்தம் தொடராக அருகருகே கேட்டது. இதைக் கேட்ட அனைவரும் பயந்து தமது உயிரைக் காக்கும் பொருட்டு வேறு இருப்பிடம் நோக்கி விரைந்து செல்ல முயன்றனர். அக்கணத்தில் அதிகனரன விமானமான மிக்விமானம் அந் நகரமான கிளிநொச்சியை வட்டமிட்டு குண்டுகளைத் தள்ளிய வண்ணமிருந்து அப்போது ராதிகாவும், ராகவனும், புஸ்பாவும், ராஜகோபாலும் அவசர அவசரமாக உடல் பதற தமது சொந்த இடமான கிளிநொச்சி மண்ணையும் ஊரையும் விட்டு ஓடிக்கொண்டிருந்தனர்.

அவர்கள் தமது சில அத்தியாவசியமான ஆவணங்களை மட்டுமே எடுத்துச் சென்றனர். இவர்கள் வேற்று ஊரான அக்கராயன் நகரை நோக்கி ஓட்டமும் நடையுமாக தமது உயிரைக் கொண்டு அகதிகள் எனும் பெயருடன் ஒரு மரத்தின் கீழ் தங்கினர்.

பின் காலம் செல்லச் செல்ல தமக்கென்றதோர் சொந்த இருப்பிடத்தை நாடினர். தமக்கென்றதோர் பாதுகாப்பான இருப்பிடத்தை தேடிக்கொள்ள முயன்றபோது காடுகளே தென்பட்டன. காடுகளை வெட்டிச் சிறு சிறு குடியிருப்பு ஒன்றில் தமது வாழ்க்கையை ஒரே சீராக ஓட்டிக் கொண்டிருந்தனர். அவ்வேளையில் ராதிகா பதினொன்றிலும் ராகவன் தரம் பதின்மூன்றிலும் கல்வி கற்றனர்.

ராதிகா கல்விப் பொதுதராதரப் பரீட்சையை நோக்கிய வண்ணம் தமது கல்வியை முன்னேடுத்துச் செல்ல ராகவன் தனது எதிர்கால வாழ்க்கையை நெறிபடுத்துவதான உயர்தரப்பரீட்சையை இன் முகத்துடன் எதிர்பார்த்த வண்ணம் இருந்தனர். அப்போது இடம்பெயர்ந்த அகதிகளாக இருந்த வேளையிலும் கூட அங்கு தமிழரை முற்றாக அழிக்கும் நோக்குடன் எதிரி தமது ஆக்கிரமிப்பை தொடர்ந்த வண்ணம் இருந்தான்.

அப்போது ராஜகோபால் குடும்பம் இடம்பெயர்ந்து அகதிகளாக இருந்த அக்கராயனிலும் எதிரி தமது முற்றுகையை இட முயன்றான். அப்போது அக்கிராயன் மண்ணில் குண்டுகள் மழைமாரியாகப் பொழிந்தது.

ராஜகோபாலின் குடும்பம் அங்கிருந்து தமக்குப் பாதுகாப்பான இடம் நோக்கி ஏனைய மக்களுடன் மல்லாவி நகரை நோக்கி சென்று கொண்டிருந்த போது எதிரியின் ஏவுகணையில் இருந்து புறப்பட்ட குண்டு ஒன்று ராஜகோபாலின் மார்பைத் துளைத்தது. அதே இடத்தில் ராஜகோபால் காத்துச் சென்ற உயிர் உடலை விட்டுப் பிரிந்தது.

இதைக் கண்ணுற்ற ராஜகோபாலின் மனைவியான புஸ்பாவும் பிள்ளைகளும் ஒப்பாரியிட்டு அழுதனர். அப்போது எதிரியின் குண்டுகள் எதிரெதிரே சென்று மின்னல் வேகத்தில் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன. இதை பொறுக்க முடியாத ராகவன் தனது தந்தையின் உடலைக் காவிக் கொண்டு தன் தாயின் பின்னே நடைப்பிணமாக மல்லாவி நகரை வந்தடைந்தனர்.

அங்குள்ள ஓர் பாடசாலையில் தங்கினர். ராகவன் தனது தந்தையின் உடலை உரிய முறையில் தகனம் செய்தான். பின்பு ராகவனும், ராதிகாவும், புஸ்பாவும் பாடசாலையில் அகதிகள் எனும் பெயருடன் தமது வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தனர். இவ்வாறு இருக்கையில் ராகவன் ஒரு நாள் தமது இன்னல்களை மீட்டுக் கொண்டிருந்தான். ஒவ்வொரு இடமாக அகதிகள் எனும் பெயருடன் இடம் பெயர்வதை ராகவனால் பொறுக்கவே முடியவில்லை.

இவ் வாழ்வு தமிழ் மக்களுக்கு இனிமேல் தொடரக் கூடாது என எண்ணி ஆழ்ந்து சிந்தித்து தாயின் அனுமதியுடன் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்டான்.

சில காலங்களின் பின் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் ராகவனின் சொந்த ஊரான கிளிநொச்சி மீட்புப் போரில் ராகவன் கிளிநொச்சி மண்ணில் லெப்ரினன் கேணல் வேங்கைத் தமிழனாக கிளிநொச்சி மண்ணை முத்தமிட்டு வீரச் சாவடைந்தான்.

இத் துயரமான செய்தியை கேட்ட அவன் தாயும் தங்கையும் ஆழ்ந்த துயரில் மீட்டனர். பின்னர் சிறிது காலத்தின் பின்பு தங்கையான ராதிகாவும் அகதி வாழ்வைக் கூண்டோடு அழித்து தமிழருக்கு நின்மதியான வாழ்வைப் பெற்றுத் தர வேண்டும் எனும் சீரிய சிந்தனையில் விதுஷா எனும் பெயருடன் விடுதலை போராட்டத்தில் தன் அண்ணனின் ஆயுதத்தை தூக்க வீரத்துடன் வீரமகளாக விரைந்தாள்.

**செல்வி. வயிரவநாதன் தனுஷா.**
**கிளி/பு,நகரி மகாவித்தியாலயம்.**
**பு,நகரி.**

---

## குட்டித்தொடர்........ 2

# காதல் கதை

**எஸ். பி. பாலமுருகன்**

**அ**ந்த சிங்கள யுவதியும் அவளின் தோழிகளுடன் அடித்துப் பிடித்துக் கொண்டு பிரசாதம் வாங்க முற்படுகையில் பிரசாதம் தீர்ந்து போக கடைசியாக இருந்த ஒரு மோதகத்தை அந்த சிங்கள யுவதிக்கு சரவணன் கொடுக்க அது இடறி கீழே விழுகிறது. அவன் ஏமாற்றத்துடன் "ஐயோ... அண்ணா..." என்று போகிறாள்.

இதனை அவதானித்த சரவணனின் அண்ணி அந்த சிங்கள யுவதியை அழைத்து வீட்டுக்குப் போய் வீட்டில் இருந்த பிரசாதம் ஒரு பார்சலை கொடுக்கிறாள்.

அந்த பார்சலை வாங்கிக் கொண்டு சரவணனுக்கு புன்னகையால் மனதை தடவிவிட்டு போகிறாள்.

போகும் வழியில் அவள் மீண்டும் சரவணனை பார்த்து புன்னகைத்துவிட்டு போகிறாள். அவளின் மனம் சிறகடித்தது. பருவமதில் புத்துயிர் தோன்றி புதுவித சந்தோசம் துளிர்விடுகிறது. வார்த்தைகளால் சொல்ல முடியாத சொர்க்கத்தில் சங்கமிக்கிறாள்.

*அவளின் அழகோ......*
*பருவமதில் பதினாறும்*
*புருவமதில் துடிப்பும்*
*விழியினிலே காதல் மொழியும்*
*உதட்டினிலே புன்னகையும்*
*பறித்துத் தின்ன துடிக்கும் கன்னமதும்*
*நடையினிலே கிராமத்து நளினமும்*
*உடையினிலே நல்லொழுக்கமும்*
*மொத்தத்தில் மனதை அள்ளும்*
*அழகும் அடக்கமுமுள்ள பருவத்து தேவதை அவள்.*

அவள் பெயர் துசாரா நதிசாயினி. பெற்றோர் "பாதரட" என்று சொல்லும் தென்னிலங்கையின் காலி பிரதேசத்தை சேர்ந்தவர்கள். மூத்த அண்ணன் இராணுவத்தில் இருக்கும் போது யாழ்ப்பாணத்தில் யுத்தத்தில் கொல்லப்பட்டான். இரண்டாம் அண்ணன் விமானப்படையில் உள்ளான். இளைய அண்ணன் கிராமத்தில் விவசாயம் செய்கிறான். மூத்த அண்ணனின் மரணத்தால் அவர்களுக்கு தமிழன் என்றாலே பிடிக்காது. துசாராவிற்கு ஓரளவு இனவாதம் காணப்படவேதான் செய்தது.

ஆனாலும் சரவணனை பார்த்ததும் ஏதோ... பிடித்தது காதல் வந்தது.

மொழி தெரியாவிடினும் விழி பேசும், இனம் வேறானாலும் மனங்கள் ஒன்று சேரும், மதங்கள் வித்தியாசம் சம்மதங்களில் ஓரங்கட்டும்.

*இனம் சாதி எல்லாம்*
*குப்பைக்கு போகும்*
*அரச சட்டங்களும்*
*அலட்சியப்படுத்தப்படும்*
*இனவாதம் எல்லாம் சோசலிஷமாகும்.*

(தொடரும்)

மாபெரும் பரிசுப்போட்டி

செந்தணல்
SENTHANAL

மாபெரும் பரிசுப்போட்டி

# மாபெரும் பரிசுப்போட்டி

பெயர்: ______________________________

வயது: ____________ பிரதேசம்: ______________________

முகவரி: ______________________________

## இன்றே பதில்களை அனுப்பி பரிசுகளை வெல்லுங்கள்...



சித்திரமும் சிறுகதையும், சிறுவர் புதிர்ப்போட்டி, வர்ணம் தீட்டும் போட்டி போன்றவற்றில் இருந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன நீங்கள் செய்யவேண்டியது இதுவரை வெளியான செந்தணல் பத்திரிகையில் இருந்த மாபெரும் பரிசுப் போட்டி என்ற கூப்பனை நிரப்பி இணைத்து அனுப்ப வேண்டும் (25) இருபத்தைந்தினை கீழே கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கான பதில்களுடன் வேண்டும். அனுப்ப பேண்டிய இறுதித் திகதி 08-05-2004. அனுப்பும் கூப்பன்கள் எமது பத்திரிகையில் இருந்து வெட்டப்பட்டதாக இருக்க வேண்டும் (Photo Copy) பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பெறுமதிவாய்ந்த மூன்று முதல்பரிசுகள்

சித்திரமும் சிறுகதையும் (16 வயதிற்கு மேற்பட்டோர்)
சிறுவர் புதிர்ப்போட்டி (9 வயது முதல் 16வயது வரை)
வர்ணம் தீட்டும் போட்டி (6வயது முதல் 9 வயதுவரை)

கணினி ஒன்று
வயலின் ஒன்று
ஓர்கன் ஒன்று

10 ஆறுதல்பரிசுகளும்

☞ சி.சி முதல்பரிசு கணினி ஒன்று ☞ பு.போ முதல்பரிசு வயலின் ☞ வ.போ முதல்பரிசு ஓர்கன்

மூன்று பெறுமதிவாய்ந்த முதல் பரிசுகளுடன் (10) பத்து ஆறுதல்பரிசுகளும் வழங்கப்படும். உங்களுக்கும் பரிசு வேண்டுமா செந்தணல் படியுங்கள்.

# மாபெரும் பரிசுப்போட்டிக்கான கேள்விகள்

### சித்திரமும் சிறுகதையும் (16 வயதிற்கு மேற்பட்டோர்)

01. கனல் 07ல் இடம்பெற்ற சித்திரமும் சிறுகதையும் படத்தில் உள்ள இரண்டு உயிரினங்களின் பெயர்களைத் தருக?
02. கனல் 07ல் சித்திரமும் சிறுகதையும், கதையில் சிங்கன் எவ்வாறு இறந்தான்?
03. கனல் 08ல் இடம் பெற்ற சித்திரமும் சிறுகதையின் ஆசிரியரின் பெயர் என்ன?
04. கனல் 08ல் சித்திரமும் சிறுகதையும் கதையில் இடம்பெற்ற ரகுராம் என்பவர் யார்?
05. கனல் 09ல் சித்திரமும் சிறுகதையின் தலைப்பு என்ன?
06. கனல் 09ல் சித்திரமும் சிறுகதையில் வருகின்ற இஸ்மயில் என்பவர் ஜேசு படத்தை எத்தனையாம் ஆண்டு யாரிற்கு அன்பளிப்புச் செய்தார்.?
07. "சிதைந்துபோன சிந்தனைப்போராட்டம்" என்ற தலைப்பில் இடம்பெற்ற சித்திரமும் சிறுகதையின் ஆசிரியர் யார்?
08. "பழஞ்சோறு" என்ற சித்திரமும் சிறுகதையும் எத்தனையாவது கனலில் இடம்பெற்றது? இதை ஆக்கியவர் யார்?
09. சித்திரமும் சிறுகதையும் பகுதியில் இடம்பெற்ற பழஞ்சோறு எனும் கதையில் முருகேசு எப்படி இறந்ததார்?
10. இக்கதையில் முக்கியமாகப் பேசப்படுகின்ற இராணுவ நடவடிக்கை எது?
11. கடமை என்ற சித்திரமும் சிறகதையிலும் வருகின்ற முத்தையாவின் தொழில் என்ன? இக்கதையை ஆக்கியவர் யார்?
12. வசந்தம் தொலைத்த காதலி என்ற கதையில் இடம்பெற்ற வசந்தாவின் மகளுடைய பெயர் என்ன? அவளின் (மகள்) தந்தை யார்?
13. நிழலான நிஜங்கள் என்ற கதையில் இடம்பெறுகின்ற ஈசனை, குண்டு போட்டு கொன்ற விமானத்தின் பெயர் என்ன?
14. "மந்திரக் கண்ணாடி" என்ற கதையில் இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட அந்தக் கண்ணாடிப் பெட்டியினுள் இருந்த கண்ணாடியின் நிறம் என்ன? அக் கண்ணாடியுள் இருந்த கடிதத்தில் என்ன வாசகங்கள் எழுதப்பட்டிருந்தது?

### சிறுவர் புதிர்ப்போட்டி (9 வயது முதல் 16வயது வரை)

1. கனல் 8 இல் புதிர் போட்டியில் தரப்பட்ட கேள்விகளுள் அறுசுவைகளில் ஒன்று?
2. கனல் 8 இல் புதிர் போட்டியில் பரிசு பெற்றவரின் ஊருக்கு ஒரு சிறப்பம்சம் உண்டு இது என்ன?
3. கனல் 10 இல் இத்தாலி நாட்டில் பண்டைய நாகரீகம் தோன்றிய நகரம் எது?
4. கனல் 10 இல் இது சிலரது முகங்களில் இயல்பாகவே தோன்றும், சிலர் இதனை வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொள்வார்கள் இது புதிர்போட்டியில் தரப்பட்டது அது எது?
5. கனல் 11 இல் புதிர் போட்டியில் கிழக்கு மகாணானத்தில் உள்ள ஒரு மாவட்டம் தரப்பட்டது. அது எந்த மாவட்டம்?
6 கனல் 12 இல் கைத்தொழில்கள் மூலம் அபிவிருத்தி அடைந்த ஆசியநாடு ஒன்று புதிர் போட்டியில் இடம் பெற்றது. அது எந்த நாடு? இதில் இடம்பெற்ற ஒரு சொல் மூலிகையாகவும் இந்துமத காரியங்களுக்காகவும் பயன்படுத்தப்படும் அது எந்தச் சொல்
7. கனல் 13 புதிர் போட்டியில் இறைவனது திருமேனிகளில் ஒன்று கூறப்பட்டது அது எது?
8. கனல் 13 புதிர் போட்டியில் இடம் பெற்ற இலங்கையின் பிரபல்யமான யாத்திரைத் தலம் எது?
9. கனல் 14 இல் சூரியனின் இன்னொரு பெயர் புதிரில் வந்தது அது எது?
10. கனல் 7 முதல் 20 வரையான இதழ்களில் இடம் பெற்ற புதிர்போட்டிகளின் விடைகளை வைத்து 50 வசனங்களைக் கொண்ட தரமான கட்டுரை ஒன்றை எழுதவும்.

### வர்ணம் தீட்டும் போட்டி (6வயது முதல் 9 வயதுவரை)

1. கனல் 8இல் வர்ணம் தீட்டும் போட்டியில் தரப்பட்ட உருவத்தின் ஓத்த கருத்து இரண்டு தருக?
2. வர்ணம் தீட்டும் போட்டியில் பரிசு பெற்றவர்களின் பாடசாலையும் தரப்பட்டிருந்தது. அந்தப் பாடசாலையின் பெயரில் உலக இரட்சகரின் தந்தையின் பெயரும் இடம் பெற்றது. யார் அந்த இரட்சகர்?
3. கனல் 10இல் வர்ணம் தீட்டும் போட்டியில் பரிசு பெற்றவரின் பாடசாலையில் ஒரு பேரறிஞரின் பெயரும் வந்தது. அவரின் இயற்பெயர் என்ன?
4. கனல் 10இல் வர்ணம் தீட்டும் போட்டியில் பரிசு பெற்றவரின் ஊர்களில் இரு வேறு பொருள் தரும் இரண்டு ஊர்கள் இடம் பெற்றன, அவை இரண்டும் எவை?
5. வர்ணம் தீட்டும் போட்டியில் பரிசு பெற்றவர்களின் பாடசாலையின் பெயர்களில் ஒரு புனிதரின் பெயர் இடம் பெற்றது. அப்புனிதர் யார்?
6. கனல் 11இல் வர்ணம் தீட்டும் போட்டியில் முதலாம் பரிசு பெற்றவரின் பாடசாலையில் பெயருக்கும் செல்வங்கள் ஒன்றுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு அந்தச் செல்வம் எது?
7. கனல் 13இல் வர்ணம் தீட்டும் போட்டியில் இடம் பெற்ற படத்தில் ஒரு பொழுது போக்கு சாதனம் இடம் பெற்றது அது என்ன?
8. கனல் 14இல் வர்ணம் தீட்டும் போட்டியில் பரிசு பெற்றவர்களின் பெயர்களில் இரு மதங்களிற்கும் பொதுவான ஒரு பெயர் இடம் பெற்றது. அது எது?
9. அந்த இருமதங்களில் வரும் தெய்வங்கள் 2ன் பெயர்களைத் தருக.
10. கனல் 7முதல் 20 வரையான இதழ்களில் இடம்பெற்ற வர்ணம் தீட்டுவதற்காக சித்திரங்களை வைத்து 20 வசனங்க்ள் கொண்ட கட்டுரை எழுதவும்.

# விளையாட்டுச் செய்திகள்

தொகுப்பு:- ஜெயம்

## கனவு நாயகனை நேரில் கண்டதே சந்தோசம்



பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் இந்தியா வெற்றியீட்டியதை அடுத்து இந்திய வீரர்கள் மிகவும் வெற்றிக் களிப்பில் உள்ளனர். போட்டி முடிவின் பின் நல்லெண்ண நோக்கில் இரு அணி வீரர்களும் தங்களது மேலங்கி துடுப்பு உள்ளடங்கிய பொருட்களை பரிமாறிக் கொண்டனர்.

பாகிஸ்தான் அணியில் இடம்பிடித்துள்ள இளம் வீரர்கள் அனைவரும் டெண்டுல்காருடன் பேசத் துடித்தனர். ஆனால் அப்போதிருந்த சூழ்நிலையில் அது நடக்காமல் போகவே வீரர்கள் ஏமாற்றம் அடைந்தனர். ஆனாலும் அவர்கள் இது பற்றி கூறுகையில் அவரிடம் தனியாகப் பேச துடித்தோம் நடக்கவில்லை. எமது கனவு நாயகனை நேரில் கண்டதே பெரிய சந்தோஷம் எனக் கூறி திருப்திப்பட்டுக் கொண்டனர்

## "துஸ்ரா" பந்து வீச்சை முரளிதரன் வீச அனுமதி

முத்தையா முரளிதரனின் பந்து வீச்சு தொடர்பான சர்ச்சைகள் அண்மையில் எழுந்தன. அதனால் முரளிதரன் "துாஸ்ரா" பந்துவீச்சை மேற்கொள்ள முடியாது எனக் கூறப்பட்டிருந்தது. ஆனால் இதற்கான



முழுமையான தகவல்கள் கிடைக்கப் பெறாமையால் 20ம் திகதி ஆரம்பமாகவுள்ள இலங்கை சிம்பாவே அணிக்கெதிரான போட்டியில் "துாஸ்ரா" பந்துவீச்சை மேற்கொள்ள முடியுமென பேராசிரியர் ப்ரூஸ் எலியட் தலைமையிலான மனித உடல் அசைவு இயல்குழு அனுமதி வழங்கியுள்ளது.

ஆனாலும் இப்பந்து வீச்சு தொடர்பான முழுமையான அறிக்கைகள் உத்தியோக பூர்வமாக கிடைக்காமையால் துாஸ்ரா பந்து வீச்சை மேற்கொள்ள வேண்டாமென இலங்கை கிரிக்கெட் சபை முரளிதரனுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. ஏனெனில் அண்மையில் மேற்கு அவுஸ்திரேலியாவின் மனித உடல் அசைவு இயல் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பரிசோதனைகளின் போது இப்பந்து வீச்சு தொடர்பான சந்தேகங்கள் எழுந்துள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

முரளிதரன் பந்தை வீசும் போது அவரது முழங்கை 10 பாகைக்கு மேல் திரும்புவது பரிசோதனைகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு சுழற்பந்து வீச்சாளர் அவரது முழங்கையை 5 பாகைக்கு மேல் திருப்பக் கூடாது என்பது விதியாகும். ஒரு வேகப் பந்து வீச்சாளர் 10 பாகையிலும், மித வேகப்பந்து வீச்சாளர் 7.5 பாகையிலும், சுழற்பந்து வீச்சாளர் 5 பாகையிலும் பந்து வீசவேண்டும் என்பதே சர்வதேச கிரிக்கெட் சபையால் அங்கீகரிக்கப்பட்ட விதியாகும்.

முரளிதரனுடைய பந்து வீச்சில் அவரது முழங்கை 10 பாகையில் திரும்புவது மட்டுமல்லாமல் பந்து வீசும் போது அவருடைய பந்தின் வேகமும் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது. இவ் வேகமானது ஒரு வேகப் பந்து வீச்சாளர் கையைச் சுழற்றும் வேகத்திற்கு சமமாக காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. இது போன்ற சில சந்தேகத்திற்கிடமான தகவல்கள் பல வெளியாகியுள்ளதால், அறிக்கை வரும் வரைக்கும் இவருடைய "துாஸ்ரா" பந்து வீச்சை தவிர்க்குமாறு பந்து வீச்சு நிபுணர் குழுவும் ஆலோசனை வழங்கியுள்ளது.

இவர் உலக சாதனையை முறியடிக்க இன்னும் 7 விக்கெட்டுக்களே எஞ்சியுள்ள நிலையில் இவருக்கு இப் பந்து வீச்சை மேற்கொண்டுதான் அதை நிகழ்த்த வேண்டுமென்ற அவசியமில்லை. வழமையான அவரது பந்து வீச்சின் மூலம் அவர் இச் சாதனையை நிகழ்த்துவார் என்ற நம்பிக்கையில் காத்திருப்போம்.

## அக்தர் மீது நடவடிக்கை எடுக்க பாகி. கிரிக்கெட் சபை முடிவு



பாகிஸ்தான் அணியின் புயல் வேகப் பந்து வீச்சாளர் அக்தர் மீது நடவடிக்கை எடுக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. அவ்வாறு நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் தனது பதவியை ராஜினாமா செய்யப் போவதாக அணியின் தலைவர் இன்சமாம் சூளுரைத்துள்ளார். எனவே அக்தர் இவ் அணியிலிருந்து நீக்கப்படும் நிலை உருவாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா, பாகிஸ்தான் அணிகளிற்கிடையே நடைபெற்ற போட்டியில் அக்தர் பந்து வீசவில்லை. இவர் தனது காயத்தை காரணம் காட்டியே இப்போட்டியின் பந்து வீச்சியில் கலந்து கொள்ளவில்லை. இதுவும் இந்திய அணி ஓட்டங்களை குவிப்பதற்கு ஒரு காரணமாக அமைந்தது என்று அணியின் தலைவர் கூறுகின்றார். இதனிடையே அக்தரிற்கு காயமெதுவும் ஏற்படவில்லை. அவரிற்கும் அணித் தலைவர் இன்சமாமிற்குமிடையே நிலவிய கருத்து வேறுபாடு காரணமாகவே இவர் பந்து வீசவில்லை என்ற தகவல்களும் வெளியாகியுள்ளன. இவர் போட்டியின் போது ஒழுங்கீனமான நடந்து கொண்டார் என்று அணித்தலைவர் கிரிக்கெட் சபையிடம் முறையிட்டதோடு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தனது பதவியை ராஜினாமா செய்யப் போவதமாகவும் எச்சரித்துள்ளார்.

இது பற்றி கிரிக்கெட் சபைத்தலைவர் கூறுகையில் ஒவ்வொரு வீரரும் அணியின் வெற்றிக்காகவும், நாட்டின் கௌரவத்திற்கும் 100% உழைக்க வேண்டுமென்றும். அதை மீறி நாட்டிற்கு களங்கம் ஏற்படும் வகையில் செயற்பட்டிருந்தால் அந்த வீரரை அணியிலிருந்து நீக்கவும் தயங்க மாட்டோம் என்றும் கூறியுள்ளார்.இது தொடர்பான அறிக்கை இன்னும் ஒரு வாரத்தில் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---




## பதில்கள்

? **தேர்தல் முடிவு எப்படி?**

**இந்துமதி, பதுளை.**

! என்ன இந்துமதி நீர் நாட்டிலேயே இல்லையா திரிசங்கு சொர்க்கத்தில் தவிக்கிறது அரசியல்.

? **எனது அபிமான நடிகர் மாதவனின் விலாசத்தை தருவீர்களா?**

**S. வாணி**
**பு,ந்தோட்டம், வவுனியா.**

! இல. 7 வாசுதெரு, ஈகா திரையரங்கம் பின்புறம் கீழ்பாக்கம், சென்னை-10.

? **கனம் திரிசூலியாம்மா என் கேள்விக்கு தயவுசெய்து பதில் தரவும். திருமணம் முடிப்பதற்கு முன்பே தங்கள் காதலிகளை தமது சொல் கேட்கும்படி கட்டுப்பாடு பண்ணும் ஆண்களைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

**தமிழ் சப்ரீனா,**
**வாழவைத்த குளம்**

! நம்பிக்கையில்லாத (தம்மீதும் கூட) காதலர்கள்

? **இன்பமும் துன்பமும் நிறைந்ததுதான் வாழ்க்கை அதை சமாளிப்பதை விட்டு விட்டு சிலர் தம் வசதிக்காக மதம் மாறுகிறார்களே இது நியாயமா?**

**ப.தயாளினி,**
**உடப்புசல்லாவ.**

! மதம் என்பது அவரவர் சுதந்திரம் மற்றவர் மூக்கை முட்டாதவரை அடுத்தவர் அதைப்பற்றி கவலைப்படத் தேவையில்லை. இன்பம் அது Ok, தயாளினி, ஆனால் துன்பம் வந்து விட்டது என்று தற்கொலைக்கோ தீய செயல்களிலோ இறங்கவில்லையே அவர்கள். அந்த வகையில் அவர்கள் பாராட்டத்தக்கவர்கள்.

? **பெண்கள் அமைப்புக்கள் பெண்களுக்கு என் செய்கிறது?**

**கீதாஞ்சலி, பதுளை.**

! இலங்கை வரலாற்றிலே அரசியலானாலும் சரி, அமைப்புகளானாலும் சரி எங்கே மக்கள் நலமாக வாழவேண்டுமென்று எண்ணுகிறார்கள். ஒருசில நல்லவை நடத்தாலும் தாம் வாழ்ந்தால் போதுமென்று சுறுட்டிக் கொண்டல்லவா ஓடுகிறார்கள்.

? **வாழ்க்கையின் உன்னதமான மகிழ்ச்சி எது?**

**அ. சுதாமதி,**
**ஆரையம்பதி.**

! நாம் அன்பு செய்யப்படுகிறோம் என்கிற நம்பிக்கை ஆகும். நாம் நாமாக இருக்கும் போதே நேசிக்கப்படுகின்றோம் என்ற ஆச்சரியம் தான் உன்னத மகிழ்ச்சி.

? **சங்கரியார் கண்ணீரோடு கூட்டணி மீது குற்றம் சாட்டுகிறாரே?**

**த. ரத்தினவேலு,**
**தின்னவேலி, யாழ்ப்பாணம்**

! காய்த்த மரத்திற்கு கல்லெறிவிழுவது என்ன புதிதா
(ஸ்.....அதிகம் அரசியல் பேசாதையும்)

? **விடுதலைப் புலிகளுக்கு சவாலா கருணா?**

**S. றமேஸ்,**
**ஆரையம்பதி.**

! சவாலா? பிறமுதுகு காட்டி ஓடி ஒளிபவர்களையும், துரோகமிழைப்பவர்களையும் சவால் என்கிறீர்களே தூசுப்படை அவர்கட்கு.

? **நண்பர்களாகப் பழகிவிட்டு திடீரென காதலிக்கிறேன் என்று கூறும் நண்பர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**K. தேவா,**
**வவுனியா.**

! நிச்சயமாக உங்களிற்குப் பொருத்தமான காதலராக அவரால் இருக்க முடியும். காரணம் உங்களுடன் நண்பராக இருந்த காலத்தில் உங்களைப் பற்றி நன்கு அறிந்தும் புரிந்தும் வைத்திருப்பாரல்லாவா.

? **மற்றவர் செய்வதையெல்லாம் தான் செய்ததென்று புகழும் மனிதர்களை எந்தப் பட்டியலில் சேர்க்கலாம்?**


**வி. லலி,**
**பு,ந்தோட்டம்.**


! ஊர்க்குருவிப் பட்டியலில் சேர்க்கலாமே.

**உங்கள் கேள்வியை அனுப்ப வேண்டிய முகவரி:**

**திரிசூலியன் பதில்கள்**
**61 கற்குழி,**
**வவுனியா.**

# திரை





## ஹோம்லியான காரெக்டரில் மட்டும் தான் நடிப்பேன்.

### "தென்றல் உமா"




நீ கிளாமாரான காரெக்டர் செய்யப் போறதில்லை. ஆனால் இன்றைக்கு சினிமாவில கிளமர் இல்லாமல் போட்டி போட முடியாது. ஹோம்லியா மட்டும் பண்ணப் போறேன்னா என்ன பண்ணப் போறே. உனக்குச் சினிமா தேவை இல்லை, சினிமாவை விட்டு விடு. டான்ஸ் படி என்ற அம்மாவின் புலம்பலுடன் தான் நான் சினிமாவிற்குள் நுழைந்தேன். அம்மாவின் இந்த மாதிரியான கட்டுப்பாடுதான் என்னை சினிமாவிற்குள் தள்ளி விட்டது போல. கிளமர் ரோல் பண்றதை விட ஹோம்லியா நடிக்கிறது எவ்வளவு கஷ்டம்னு தெரியுமா? நான் படும் கஷ்டமெல்லாம் சொல்லி மாளாது. ஒரு ஹீரொயினுக்கு கிளமர் தான் நடிப்பு என்ற ரீதியில் மட்டுமே பண்றவங்களிற்கும் ஒரு எல்லை இருக்கு. அதைத் தாண்டிப் போனா யாராயிருந்தாலும் எதிரிப்புக்காட்டத் தான் செய்வாங்க.

## துளித்துளியாய்



**க**மலின் அடுத்த படமான கிருஷ்ண லீலாவிற்காக ரம்யாகிருஷ்ணன், மீனா, சங்கவி, செளதமி, அபிராமி, ரம்பா என போட்டி போட்டுக் கொண்டு கமலைத் துரத்தி வருகிறார்களாம்.



**வி**வேக் ஹீரோவாக நடித்த பஞ்சு பாதியிலே நின்றுவிட்டால் தற்போது S.K. கிருஷ்ணகாந்த் தயாரிப்பில் ஹீரோவாக நடிக்கிறாராம்.



**தெ**லுங்குப் படக் கதையைத் தமிழில் திருப்பியமைத்து வர்ஷம் எனும் பெயரில் வெளிவருகிறது. இப்படத்தை ரமணா இயக்குகிறார். ஹீரொவாக "ஜெயம்" ரவி நடிக்கிறார்.




"மன்மதன்" சிம்பு—ஜோதிகா

## அத்தனை பேருக்கு முன்னால அடிவாங்கினேன்.

### சந்தோஷி




**ஒ**ரு லட்சத்து இருபத்தஞ்சாயிரம் பேர் அப்ளிகேஷன் போட்ட இடத்தில், அப்ளிகேசன் போடாமலே லக்கி ப்ரைஸ் அடித்திருக்கிறது சந்தோஷிக்கு. கிள்ளிப் பார்க்கின்றார் சந்தோஷி எவ்வளவு பெரிய செலக்ஷன் நடத்தியும் ஹீரோயின் மட்டும் செட்டாகவில்லையாம். அதன் பின் சென்னைக்கு வந்த இடத்தில் சந்தோஷியை வரவழைத்துப் பார்த்திருக்கிறார் இயக்குனர். பார்த்து விட்டு ஒன்றும் கூறாமல் சென்றுவிட்டாராம். பிறகு ஒரு நாள் போன் வந்தது. நாளைக்கு டெஸ்ட் ஷூட் இருக்கு ஹைதராபாத் கிளம்பி வரமுடியுமா? என்றார். அடித்துப் பிடித்து ரயில்வே ஸ்ரேசன் போனால் டிக்கட் கிடைக்கவில்லை. போன் பண்ணி டிக்கட் கிடைக்கலைன்னு சொன்னேன் அப்படியா சரிம்மான்னு சொல்லி போனை வைச்சிட்டார். அம்மா வேற, உனக்கு அதிஷ்டமே இல்லை பார் டெஸ்ட் ஷூட்வரச் சொல்லியும் டிக்கட் கிடைக்கலை, என்று ஒரே புலம்பல் இரவு பத்தேமுக்கால் மணி இருக்கும் போன் பண்ணி நாளைக்கு வந்துடுன்னு சொன்னார். அப்பதான் உயிரே வந்தது. டெஸ்ட் ஷூட்டில் செலக்ட் ஆகி இப்போ நடித்துக் கொண்டிருக்கின்றேன். செலக்ட் ஆகினாலும் சந்தோசப்பட முடியாது. ஒரு பாட்டைப் பதினொரு நாள் எடுத்தார். அதேபோல அவர் சொல்லித் தந்ததை சரியாப் பண்ணலை என்றால் அடித்தே விடுவார். ஒரு பாட்டு சீன் முழுக்க அழுதுகிட்டே பண்ணணும் எனக்கு அழுறது என்றாலே மகா பிரச்சனை. டேக் வாங்கிக் கிட்டே இருந்தேன். சார் அம்மாகிட்ட பாருங்க உங்க பொண்ணு சரியாப் பண்ணமாட்டேங்கிறா என்றதும் அம்மாவிற்கு கோபம் வந்துவிட்டது "உனக்கு தமிழில் கிடைக்காத வாய்ப்பு இங்க கிடைச்சிருக்கு, இல்லைன்னா உங்கம்மா செத்து இங்க பிணமா கிடக்கிறார் அதை நினைச்சாவது அழு என்று சொன்னார். ஆனா அடுத்த ஷாட்டும் சரியா வரலை. விட்டார் நாலு அறை டான்ஸ் மாஸ்டர். என் வாழ்க்கைல நான் அப்படி அடி வாங்கினதே இல்லை. ஆயிரம் பேருக்கு முன்னே அடிவாங்கினது பெரிய அவமானமாக இருந்தது. அப்ப ஆரம்பிச்ச அழுகைதான் சாயந்திரம் வரைக்கும் நிக்கவே இல்லை. எங்க இருந்து தான் கண்ணீர் வந்திச்சோ. அடிவாங்கினாலும் நான் நினைச்சுப் பார்க்க முடியாத ஒரு நல்ல இயக்குனர் கிட்ட நடிச்சிட்டு வந்திருக்கேன்கிற திருப்தி இருக்கு என்றார் ஜெய்ராம் பட ஹீரெயின் சந்தோஷி.



இது இயற்கையாக அமைந்த அரங்கமல்ல கில்லி படத்திற்காக ஆயிரத்து இருநூறு வேலையாட்கள் அறுபது நாட்கள் செலவளித்து செய்த செயற்கை அரங்கமே.

## சினி[மா]விமர்சன பத்துவரிக் கவிதை



வாசகர்களே!

இங்கு தரப்பட்டுள்ள திரைப்படக் காட்சி பற்றிய உங்களது சினிமா விமர்சனக் கவிதைகளை 10 வரிக்குள் வடித்தனுப்புங்கள். சிறந்த 5 கவிதைகள் "சினி(மா) கவி" பகுதியில் இடம் பெறும்.

அனுப்பவேண்டிய முகவரி :

"சினி(மா) கவி"
இல 61 கற்குழி
வவுனியா.

இறுதி திகதி : 09-05-2004

## சினி[மா] விமர்சன கவிதை




விமர்சிக்க வில்லை?
விரசமின்றி
விதைக்க வேண்டும் - நல் சமூகம
விளையும் கருத்துக்களை
விமோசனம் கிடைக்கும்.
விடலை பருவங்களுக்கும்

எஸ்.பி.செந்தில்,
பதுளை

பாதங்களை தொட்டு
பாவங்களை துடைத்து
பாவையுன்னிடம் கேட்கிறேன்
மாராப்பை துறந்து
மானத்தை விற்காதே
மலிவான சினிமா
மறத்தமிழ் பண்பாட்டுக்கு ஆகாது.


எஸ்.பி.பாலமுருகன்
பதுளை



"ராம்" — ஜீவா




எந்த ஸ்கூலில் சேர்க்கலாம்...?



பென்குவின் பெற்றோர் ஆலோசனை!






பிரிட்டிஷ் ராஜவம்சத்தின் வருங்கால அரசின் வருகையை நினைவுபடுத்தும் முகமாக 115 ஆண்டுகளுக்கு முன்பு பெங்களூரில் லாவ்பாக் கண்ணாடி மாழிகை கட்டப்பட்டது காலணி ஆதிக்கத்தைத்தாண்டி இப்போதும் அந்த க்ண்ணாடி மாளிகை இருந்தாலும் காலப்போக்கில் அது களை இழந்து போனது. ஆனால் இப்பொழுது அதற்கு விடிவு காலம் ஏற்பட்டுள்ளது. பெங்களூர் வரலாற்றின் ஒருபகுதியும் சிறப்புமான லாவ்பாகைட் புதுப்பிக்க முதல்வர் எஸ் எம் கிருஸ்ணா உத்தரவிட்டுள்ளார். லாவ்பாகை (கண்ணாடி மாளிகை) படத்தில் பாருங்கள்.

# சித்திரமும் சிறுகதையும்



**நீங்களும் எழுதலாம்**

இப்படத்திற்குப் பொருத்தமான குட்டிக்கதையினை 350 சொற்களுக்கு மேற்படாதவாறு எழுதி அனுப்புங்கள் சிறந்த கதை பிரசுரிக்கப்படுவதுடன் பரிசும் வழங்கப்படும். அத்துடன் நீங்களும் சித்திரம் வரைந்து அனுப்பலாம்.

## மிஸிஸ் குளோப் மகா அழகுராணிப்போட்டியில் இலங்கை பரிசை வென்றெடுத்தது

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநில பாம் ஸ்பிறங்கில் அண்மையில் நடாத்தப்பட்ட குளோப் ச்ர்வதேச மகா அழகுராணிப்போட்டியின் "ஆண்டின் வெற்றிப்புன்னகை"க்கான விருதை திருமதி பிரசாந்தி பேரின்பநாயகம் பெற்று தனது தாய்நாட்டிற்கு பெருமையை ஈட்டியுள்ளார். இச்சர்வதேச போட்டியில் தத்தமது நாட்டைப் பிரதிநிதிப்படுத்திய நாற்பது உலகளாவிய அழகிகள் கலந்து கொண்டனர்.
கலாச்சாரப் பகிர்வின் 7ஆவதுஆண்டு விழாவைக் கொண்டாடும் முகமாக, அழகு, கலைகலாச்சாரம், கருணை ஆகியவற்றை மையமாக வைத்தே "மிஸ் குளோப்" போட்டி நடாத்தப்படும்.




"மகளிர்க்கான தேவைகள்" என்னும் அமைப்புக்கு நிதி திரட்டும் முகமாகவே இம்மகா அழகுப்போட்டி நடாத்தப்படும். கொழும்பு "ஸ்ருடியோ 9ல்" நடைபெற்ற தேசிய அழகுராணிப்போட்டியில் "மிஸ் சிறிலங்கா 2003" ஆக நடுவர்களினால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்

2003 ஆனி 12ஆம் திகதி "திருமதி லான்ட்மாக் எலிகன்ஸ்" (Mrs. Landmark Elegance) ஆகவும் தெரிவு செய்யப்பட்டு தேசிய விருதைப்பெற்றார்.



இவ் விளையாட்டைக் கண்டுகளிக்க வந்திருந்த மக்கள் கூட்டத்தின் ஒரு பகுதியினர் சந்தோசத்தில் நடனம் ஆடுவதை காணலாம்.



அண்மையில் ஸ்லாமாபாத் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற விளையாட்டுக்களின் தொடக்க நிகழ்வாக வீரர் ஒருவர் பரசூட்டில் மைதானத்தில் இறங்குவதை படத்தில் காண்கிறீர்கள்.




18 நாடுகள் பங்குபற்றிய ஸ்ரில்லா ஷகாரோவா கிண்ணத்திற்கான போட்டியில் U.S ச் சேர்ந்த நிக்லே ஹரிஸ், அப்துல்லா டாக்கி ஆகியோர் தங்களது வித்தையைக் காட்டியுள்ளார். அதனையே படித்தில் காண்கிறீர்கள்.




இப்பத்திரிகை இல 61, கற்குழி, வவுனியாவில் அமைந்துள்ள சூரியன் வெளியீட்டகத்தினற்காக இல. 315, ஜம்பட்டாவீதி, கொழும்பு 13ல் அமைந்துள்ள ஈ குவாலிட்டி கிரபிக்ஸில் அச்சிட்டு 24-04-2004 அன்று வெளியிடப்பட்டது.